முன்னேற்ற அறிக்கை

**தொழில் அமைச்சு**

**பொருளடக்கம்**

**அத்தியாயம் ஒன்று**


1 தொழில் அமைச்சு........................................................................ 1

1.1 அறிமுகம்........................................................................ 1

1.2 தொலைநோக்கு,செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்........................................................................ 1

1.3 அமைச்சின் பிரதான தொழிற்பாடுகள்........................................................................ 1

1.4 அமைச்சின் கீழ் வருகின்ற பிரிவுகள்........................................................................ 2

1.4.1 நிருவாகம் மற்றும் தாபனங்கள் பிரிவு........................................................................ 2

1.4.2 அபிவிருத்திப் பிரிவு ........................................................................ 3

1.4.3 திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவு........................................................................ 3

1.4.4 நிதிப் பிரிவு ........................................................................ 3

1.4.5 அகக் கணக்காய்வுப் பிரிவு........................................................................ 4

1.5 அமைச்சின் பதவியினர் தொகுப்பு........................................................................ 5

1.6 அமைச்சுடன் இணைந்துள்ள நிறுவனங்கள்........................................................................ 6

1.6.1 தொழில் திணைக்களம்........................................................................ 6

1.6.2 மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்........................................................................ 7

1.6.3 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்........................................................................ 8

1.6.4 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கான நிறுவகம்........................................................................ 8

1.6.5 வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்........................................................................ 8

1.6.6 சிரம வாசனா நிதியம்........................................................................ 9


**அத்தியாயம்**
**இரண்டு**


2 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமைச்சினால் அடையப்பெற்ற முன்னேற்றங்கள்........................................................................ 11

2.1 சட்ட விவகாரங்கள்........................................................................ 11

2.1.1. பணியாளர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்ட உருவரைச்சட்டகத்தை பலப்படுத்துதல்........................................................................ 11

2.2 வெளிநாட்டு உறவுகள்........................................................................ 12

2.2.1. சர்வதேச தொழில் தரநியமங்களைப் பேணுதல்........................................................................ 12

2.3. தட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள்........................................................................ 13

2.3.1. சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டம்........................................................................ 14

2.4. நிருவாகம் மற்றும் தாபன விவகாரங்கள்........................................................................ 14

2.5. நிதிசார் முன்னேற்றம்........................................................................ 16

2.6. தொழில் திணைக்களம்........................................................................ 17

2.6.1 பணியாளர்களின் சமூகப் பாதுகாப்பு ........................................................................ 17

2.6.2 கைத்தொழில் உறவு........................................................................ 18

| | | | |
|---|---|---|---|
| | 2.6.3 | கள சோதனைகளை நடத்துதல்........................................................................................ | 22 |
| | 2.6.4 | பணியாளர்களின் வேலைவாய்ப்பு உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டப் பாதுகாப்பு........................................................................................ | 22 |
| | 2.6.5 | தொழில் நியமங்களைப் பாதுகாத்தலும் ஊக்குவித்தலும்........................................................ | 24 |
| | 2.6.6 | தொழில்புரிகின்ற பெண்கள் மற்றும் இளைஞர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல்.................................................. | 25 |
| | 2.6.7 | பணியாளரின் தொழில்சார் பாதுகாப்புக்கு சீரிய வேலைச் சூழலை உறுதிப்படுத்தல் ...... | 28 |
| | 2.6.8 | பணியாளரின் தொழில்சார் சுகாதாரத்தை உறுதிசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்........................................................................................ | 29 |
| | 2.6.9 | தொழில் திணைக்களத்தின் இணையத்தளமும் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ சமூ ஊடகச் செயற்பாடுகள்........................................................................................ | 31 |
| | 2.6.10 | தகவல் பரப்புகைச் செயற்பாடுகள்........................................................................................ | 31 |
| | 2.6.11 | மனித வள முகாமைத்துவம்........................................................................................ | 34 |
| | 2.6.12 | உட்கட்டமைப்பு அபிவிருத்தி........................................................................................ | 37 |
| | 2.6.13 | தொழில் திணைக்களத்தின் பணிகளை கண்காணிப்பதன் மூலம் இலக்குகளை நோக்கி செல்லுதல்........................................................................................ | 37 |
| | 2.6.14 | நிதி முகாமைத்துவம்........................................................................................ | 37 |
| 2.7. | | மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்........................................................................ | 38 |
| | 2.7.1 | தொழில் வழிகாட்டுதல், தொழில் சந்தை தகவல் மற்றும் அரச வேலைவாய்ப்பு சேவைகளை பேணுதல்........................................................................................ | 38 |
| | 2.7.2 | நிதிசார் முன்னேற்றம்........................................................................................ | 42 |
| 2.8. | | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்........................................................................................ | 43 |
| | 2.8.1 | சிறந்த தொழிற்றுறை உறவுகளுக்காக முத்தரப்பு அக்கறைதாரர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்........................................................................ | 43 |
| 2.9. | | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்............................................................ | 46 |
| | 2.9.1. | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல்............................................... | 46 |
| | 2.9.2. | 2024.01.01. முதல் 2024.12.31 வரை நிதிக் கூற்றுக்களின்படி நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்ட தொழிற்பாட்டு வருமான மூலங்கள் மூலம் அடையப்பெற்ற நிதி முன்னேற்றம். ........................................................................................ | 53 |
| 2.10. | | வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்........................................................................ | 54 |
| | 2.10.1 | தொழில்சார் விபத்துக்களுக்கான நட்டஈடுகளை வழங்குதல்................................................ | 54 |
| 2.11 | | சிரம வாசனா நிதியம்........................................................................................ | 55 |
| | 2.11.1 | வேலையாளரின் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துதல்....................................... | 55 |


**அத்தியாயம் மூன்று**


| | | | |
|---|---|---|---|
| 3 | | அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்........................................................ | 59 |
| 3.1. | | தொழில் அமைச்சு........................................................................................ | 59 |
| | 3.1.1 | தொழில் துறைக்கு பொருந்தக்கூடிய சட்டக் கட்டுக்கோப்பை பலப்படுத்துதல்...................... | 59 |

3.1.2 பூகோளமயமாக்கல் மற்றும் திறந்த பொருளாதாரக் கொள்கைகளுக்கிடையில் தொழில்தருநர் - பணியாளரின் உரிமைகளைப் பாதுகாத்தல்.................................................... 59

3.1.3 சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டம்............................................................................................................ 60

3.2. தொழில் திணைக்களம்........................................................................................................................... 60

3.3. மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்......................................................................................... 61

3.4. தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்......................................................................................................... 62

3.5. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்........................................................................... 63

3.6. சிரம வாசனா நிதியம்.................................................................................................................................. 63

**அட்டவணைகளின்**
**பட்டியல்**


| | | |
|---|---|---|
| அட்டவணை 1.1 | 31.12.2024 திகதியன்று அமைச்சின் பதவியினர்களின் தொகுப்பு................ | 5 |
| அட்டவணை 2.1 | வேலைநிறுத்தம் பற்றிய அறிக்கையிடப்பட்ட தரவு - 01.01.2024 முதல் 31.12.2024 வரை.................................................................................................. | 14 |
| அட்டவணை 2.2 | 01.01.2024 முதல் 31.12.2024 வரை சமூக கலந்துரையாடல் மற்றும் வேலைத்தல கூட்டுறவு ஊக்குவிப்புப் பிரிவினால் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்கள்............................... | 15 |
| அட்டவணை 2.3 | சட்டப் பிரிவின் நேரடித் தலையீட்டின் கீழ் நடத்தப்பட்ட நீதித்துறை நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள்.................................................................. | 16 |
| அட்டவணை 2.4 | தொழில் துறை தொடர்பான சட்டங்களை திருத்துதல் மற்றும் புதிய சட்டங்களை அறிமுகம் செய்வதில் முன்னேற்றம்......................................... | 21 |
| அட்டவணை 2.5 | சம்பள சபையினால் குறைந்தபட்ச வேதனத்தை இற்றைப்படுத்தல்........ | 21 |
| அட்டவணை 2.6 | 05 நாள் வேலை வாரத்திற்கு அங்கீகாரம் வழங்குதல்.................................. | 23 |
| அட்டவணை 2.7 | கூட்டு உடன்படிக்கைகளின் சட்ட செல்லுபடித்தன்மையை பரீட்சித்தல் | 23 |
| அட்டவணை 2.8 | சம்பள சபைக் கட்டளைச்சட்டம் மற்றும் கடை, அலுவலக பணியாளர் சட்டத்தின் கீழ் வேதனக் கழிவுகளுக்கான கோரிக்கைகளுக்கு அங்கீகாரம் அளித்தல்.......................................................................................... | 24 |
| அட்டவணை 2.9 | சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்கள் தொடர்பாக தொழில்வழங்குநர்கள் மற்றும் பணியாளர்களால் செய்யப்படும் விசாரணைகளுக்கு விளக்கங்கள் மற்றும் பொருள்கோடல்களை வழங்குதல்.......................................................... | 24 |
| அட்டவணை 2.10 | சிறுவர்தொழில் பற்றி பெறப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை நடத்துதல்.................................................................................... | 24 |
| அட்டவணை 2.11 | இரவு நேரங்களில் பெண்களை வேலைக்கு அமர்த்துவது தொடர்பான வேலை நிபந்தனை மீறல் தொடர்பாக பெறப்பட்ட முறைப்பாடுகள் மீதான விசாரணைகள்.......................................................................................................... | 25 |
| அட்டவணை 2.12 | பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவினால் 01.01.2024 முதல் 31.12.2024 வரை நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்கள்...................................................................................................... | 25 |
| அட்டவணை 2.13 | 01.01.2024 முதல் 31.12.2024 வரை கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவினால் நடத்தப்பட்ட தொழில்வழங்குநர் - பணியாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு. .................................... | 25 |
| அட்டவணை 2.14 | தலையீடுகள் மூலம் தீர்க்கப்பட்ட பிரச்சினையான சூழ்நிலைகள் பற்றிய தகவல்கள்............................................................................................................ | 25 |
| அட்டவணை 2.15 | 01.01.2024 முதல் 31.12.2024 வரை தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பிரிவினால் நடத்தப்பட்ட தொழில்வழங்குநர் - பணியாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டஙகளின் விபரங்கள். ............................................. | 27 |
| அட்டவணை 2.16 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்திற்காக நடத்தப்பட்ட பயிற்சி பட்டறைகள் பற்றிய தகவல்கள்........................................ | 28 |
| அட்டவணை 2.17 | 31.12.2024 இல் உள்ளபடி திணைக்களத்தின் பதவியணி பற்றிய தகவல்கள் | 30 |
| அட்டவணை 2.18 | அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்-2024.01.01 முதல் 2024.12.31 வரை. | 30 |
| அட்டவணை 2.19 | 01.01.2024 முதல் 31.12.2024 வரை நடத்தப்பட்ட வினைதிறன்காண் தடைப்பரீட்சைகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு: - ...................................... | 34 |
| அட்டவணை 2.20 | 01.01.2024 முதல் 31.12.2024 வரை நேர்முகப் பரீட்சை மூலம் அலுவலர் ஆட்சேர்ப்பு ...................................................................................................... | 35 |

| | | |
|---|---|---|
| அட்டவணை 2.21 | 01.01.2024 முதல் 31.12.2024 வரை அலுவலர்களுக்காக திணைக்களத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ............... | 35 |
| அட்டவணை 2.22 | 31.12.2024 இலுள்ளவாறு மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள்...... | 35 |
| அட்டவணை 2.23 | வேலை உருவாக்கம், பதவி உயர்வு மற்றும் அரச வேலைவாய்ப்பு சேவை நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதில் முன்னேற்றம் - மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்.............................................................. | 36 |
| அட்டவணை 2.24 | மாவட்ட தொழில் சந்தைகள் மற்றும் பிராந்திய தொழில் சந்தைகளை நடத்துவதில் முன்னேற்றம் - மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்.................................................................................................... | 36 |
| அட்டவணை 2.25 | 31.12.2024 இல் உள்ளபடி மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்கள் | 38 |
| அட்டவணை 2.26 | நீண்ட கால பயிற்சித் திட்டங்களின் கீழ் நடத்தப்பட்ட டிப்ளோமாக்களின் விவரங்கள்..................................................................................................... | 39 |
| அட்டவணை 2.27 | சான்றிதழ் கற்கைநெறிகளின் விவரங்கள்.............................................................. | 39 |
| அட்டவணை 2.28 | சான்றிதழ் கற்கைநெறிகளின் விவரங்கள்.............................................................. | 42 |
| அட்டவணை 2.29 | சேவைபெறுநர் நிறுவனங்களின் கோரிக்கையின் பேரில் நடத்தப்பட்ட கற்கைநெறிகளின் விவரங்கள்................................................................................. | 44 |
| அட்டவணை 2.30 | நடத்தப்பட்ட பரீட்சைகளின் விவரங்கள்............................................................ | 44 |
| அட்டவணை 2.31 | நிதி முன்னேற்றம்.......................................................................................................... | 45 |
| அட்டவணை 2.32 | 01.01.2024 முதல் 31.12.2024 வரை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் நடத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள். ......... | 45 |
| அட்டவணை 2.33 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமா (ஆங்கில மொழிமூலம்) ............................................................................................. | 45 |
| அட்டவணை 2.34 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்ளோமா (சிங்கள மொழிமூலம்) ...................................................................................................................... | 46 |
| அட்டவணை 2.35 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் சான்றிதழ் கற்கைநெறி (சிங்கள மொழிமூலம்) ...................................................................................................... | 47 |
| அட்டவணை 2.36 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் அடிப்படை கற்கைநெறி......... | 49 |
| அட்டவணை 2.37 | நிறைவேற்றுத் தர அலுவலர்களுக்கான சூழல் முகாமைத்துவ கற்கைநெறி... | 49 |
| அட்டவணை 2.38 | விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதில் முன்னேற்றம்............................ | 50 |
| அட்டவணை 2.39 | 31.12.2024 இல் மூடப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி தொழிற்பாட்டு வருமான மூலங்கள் ஊடாக அடையப்பெற்ற நிதி முன்னேற்றம்..................................... | 50 |
| அட்டவணை 2.40 | 31.12.2024 இலுள்ளவாறு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 50 |
| அட்டவணை 2.41 | 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் போது நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் நிதி முன்னேற்றம்............................................................. | 53 |
| அட்டவணை 2.42 | 2024 ஆண்டின்போது நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதிக முன்னேற்றம்...................................................................................................................... | 54 |
| அட்டவணை 2.43 | ஒழுக்கமான வேலை நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துதல்............................. | 56 |
| அட்டவணை 2.44 | தாபனச் செயற்பாடுகளின் முன்னேற்றம்................................................................ | 57 |
| அட்டவணை 2.45 | அமைச்சின் நிதி முன்னேற்றம்.................................................................................... | 57 |

புகைப்படங்களின் பட்டியல்


| | | |
|---|---|---|
| படம் 2.1 | இலங்கையில் சிறுவர் ஊழியத்தை இல்லாதொழிப்பதற்கு சமூக பொலிஸ் குழுக்களுடன் இணைந்து நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்...................................................................................... | 26 |
| படம் 2.2 | சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித்திட்டம் 2024..................................................... | 34 |
| படம் 2.3 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கொள்கையை விருத்தி செய்வதற்காக நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்............................................................................ | 51 |
| படம் 2.4 | தேசிய தொழில்சார் பாதுகாப்புக் கொள்கையை இறுதியாக அறிவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் 2024 யூன் 7 மற்றும் யூலை 31 ஆம் திகதிகளில் நடைபெற்றது. ...................................................... | 51 |
| படம் 2.5 | உயரத்தில் பணிபுரிதல் (TOT) பற்றி உயர் வேலையாளர்களுக்கு அறிவூட்டி மற்றும் பயிற்சிப் பட்டறை, 2024 ஆகஸ்ட் 04, 05 மற்றும் 06 ஆம் திகதிகளில் எரிக்சன் நிறுவனத்துடன் ஒத்துழைப்பில் நடைபெற்றது. இத்துறையில் ஈடுபட்டுள்ள 50க்கும் மேற்பட்ட அலுவலர்கள் இதில் கலந்து கொண்டனர். ......................................................................................... | 52 |
| படம் 2.6 | தென் கொரியாவில் உள்ள ஷங்ஷன் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு பொறியியல் பட்டம் தொடர்பான இலங்கை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் பண்டாரநாயக சர்வதேச ஞாபகார்த் மண்டபத்தின் 'எடு எக்ஸ்போ'வில் 2024 ஆகஸ்ட் 02, 03 மற்றும் 04 ஆம் திகதிகளில் நடைபெற்றது. ...................................................................................... | 53 |
| படம் 2.7 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு............................................................. | 53 |
| படம் 2.8 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் டிப்புளோமா மற்றும் சான்றிதழ் வழங்கும் வைபவம்.......................................................................................................................... | 54 |


வரைபடங்களின்; பட்டியல்


| | | |
|---|---|---|
| வரைபடம் 2.1 | 01.01.2024 முதல் 31.12.2024 வரை ஊசே.நிதிய அனுகூலங்களை செலுத்துவதற்காக அனுப்பப்பட்ட தீர்மானக் கடிதங்களின் எண்ணிக்கை...................................................................... | 17 |
| வரைபடம் 2.2 | 2020 முதல் 31.10.2024 வரையிலான நியதிச்சட்ட உரிமைகள் மீறல் தொடர்பான முறைப்பாடுகளை பெறுதல் மற்றும் தீர்மானங்கள்............................................................................ | 19 |
| வரைபடம் 2.3 | 2020 முதல் 31.10.2024 வரை கைத்தொழில் பிணக்குகள் தொடர்பான முறைப்பாடுகளை பெறுதல் மற்றும் தீர்த்தல்.......................................................................... ........................................................ | 19 |
| வரைபடம் 2.4 | நீதவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் மற்றும் மூடப்பட்ட வழக்குகள் - 01.01.2024 முதல் 31.12.2024 வரை.......................................................................................................... | 23 |
| வரைபடம் 2.5 | வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவினம் - மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்......................................................................................................................... | 43 |
| வரைபடம் 2.6 | அபிவிருத்தி மற்றும் ஏனைய செலவினம் – மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்........ | 43 |
| வரைபடம் 2.7 | லொத்தர் வருவாய் - 2020 முதல் 2024 வரை............................................................................... | 57 |

# 1. தொழில் அமைச்சு

## 1.1. அறிமுகம்

தொழில் அமைச்சின் பிரதான செயற்பணியானது, தனியார் மற்றும் பகுதியளவிலான அரச பணியாளர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாத்து, தொழில் பாதுகாப்பையும், தொழிற்றுறை அமைதியையும் உறுதிப்படுத்தி, நாட்டில் தொழிலை வழங்கி, உற்பத்தித்திறனை ஊக்குவித்து தேர்ச்சியுள்ள வேலையாளர்களை தொழில் சந்தைக்கு அனுப்புவதன் மூலம் பொருத்தமான பொருளாதார அபிவிருத்திக்கு உள்நாட்டு தொழிலணியின் பங்களிப்பினை அதிகரிக்கச் செய்வதற்கான கொள்கைகளை வகுத்தமைத்தலும், நடைமுறைப்படுத்துதலுமாகும். இச்செயற்பணியை நிறைவேற்றுவதில், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் இலங்கையால் ஏற்று அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சமவாயங்களின் அடிப்படையில் 2024.11.25 ஆம் திகதியிடப்பட்ட 2412/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் நியதிகளின்படி அமைச்சின் நிகழ்ச்சித்திட்டங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. சொல்லப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி, இந்த அமைச்சின் பிரதான பணிகள், அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப் பட்ட தேசிய கொள்கைகளின் அடிப்படையில், தொழில் பரப்பிலுள்ள மற்றும் அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் விடயப்பரப்புடன் தொடர்புபடுகின்ற கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தல், நடைமுறைப்படுத்துதல், பின்தொடருதல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்றவையாகும்.

## 1.2. தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்

**தொலைநோக்கு**

திருப்திமிகு உற்பத்திசார் தொழிலணி

**செயற்பணி**

தொழிற்றுறை அமைதி, சமூகப் பாதுகாப்பு, வேலையாட்களின் உரிமைகள் மற்றும் ஆக்கத்திறனை மேம்படுத்துவதனூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்தியை நோக்கிய பங்களிப்பு

**குறிக்கோள்கள்**

- முத்தரப்பினையும் வலுப்படுத்துவதன் மூலம் தொழில்வழங்குநர்-பணியாளர் உறவுகளை பலப்படுத்துதல்.
- வேலை நிலைமைகள் மற்றும் பணியாளரின் உரிமைகள் சர்வதேச தரநியமங்களுடன் ஒத்துப்போவதை உறுதி செய்தல்.
- சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல்.
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் தொழில்சார் சட்டங்களை, உரிமைகளைப் பலப்படுத்தி தொழில்புரியும் பெண்களுக்கு வலுவளித்தல்.
- தொழில் சட்டங்கள் மற்றும் நடைமுறைகளில் நெகிழ்வுத்தன்மையை அதிகரித்தல்.
- உழைக்கும் மக்களின் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன்மிக்க உபாயங்களை வகுத்தமைத்தல்.

## 1.3. அமைச்சின் பிரதான தொழிற்பாடுகள்

- அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் தொழில் விடயங்கள் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தல், நடைமுறைப்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- அமைச்சின் அதிகார எல்லைக்குள் வருகின்ற பொதுச் சேவைகளை வினைத்திறனுடனும், பொது மக்களுக்கு அனுசரணையான வகையிலும் வழங்குதல்.
- வீணடிப்பு மற்றும் ஊழலை நீக்குகின்ற அதேவேளை அமைச்சினது கடமைகளின் செயலாற்றுகையை உறுதிப்படுத்துவதற்கு உதவும் வகையில் நவீன முகாமைத்துவ முறைகளையும், தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும், நடைமுறைகளையும் மறுசீரமைத்தல்.
- தொழில் நியாயாதிக்கசபைகளின் நிருவாகம் தொடர்பான ஏனைய விடயங்களைக் கையாள்வது.

- சர்வதேச தரநியமங்களுக்கு ஏற்ப தொழில் உறவுகள் தரநியமங்கள், பணியாளர் நிருவாகம், நலன்புரி மற்றும் சுகாதாரத்திற்கான கொள்கைகளை உருவாக்குதலும், செயல்படுத்துதலும்.
- சர்வதேச தொழில் தாபனம் மற்றும் சர்வதேச சமூகப் பாதுகாப்பு சங்கங்களுடன் ஒத்துழைப்பைப் பேணுதல்.
- ஊழியர் சேமலாப நிதியம், தனியார் சேமலாப நிதியம் மற்றும் தனியார் ஓய்வூதியத் திட்டங்களின் நிருவாகமும் மற்றும் ஒழுங்குவிதியும்.
- தொழில்துறை உறவுகள் மற்றும் தொழில்துறை பிணக்குகளைத் தீர்த்தல்.
- தொழிலாளர் உறவுகளுடன் தொடர்புடைய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை உருவாக்குதல் மற்றும் ஒழுங்கமைத்தல் தொடர்பான விடயங்கள்.
- தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தல் மற்றும் நாட்டின் அபிவிருத்திக்காக அரச மற்றும் தனியார் துறைகளிலுள்ள அனைத்து தொழிற்சங்கங்களையும் பேணிவளர்க்கும் செயல்பாடு களுக்கு சாதகமான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதலும், செயல்படுத்துதலும்.
- மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு தேசிய கொள்கையை செயல்படுத்துதல்.
- தனியார் துறையிலுள்ள அனைத்து மட்ட பணியார்களையும் உள்ளடக்கும் வகையில் சமூகப் பாதுகாப்பு நிதியமொன்றை உருவாக்குதல்.
- அனைத்து பணியார்களையும் உள்ளடக்கும் வகையில் சமூகப் பாதுகாப்பு நிதியமொன்றை உருவாக்குதல்.
- பெண்கள், நிருவாக மற்றும் முகாமைத்துவப் பதவிகளை வினைத்திறனுடன் வகிப்பதற்கான தடைகளை நீக்குதல்.
- பதிவுசெய்யப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நீண்டகால காப்பீட்டுத் திட்டம் மற்றும் ஓய்வூதிய அனுகூலத் திட்டத்தை அறிமுகப்படுத்துதல்.

## 1.4. அமைச்சின் கீழ் வருகின்ற பிரிவுகள்

### 1.4.1. நிருவாகம் மற்றும் தாபனங்கள் பிரிவு

அமைச்சினதும் அதனோடு இணைந்த நிறுவனங்களினதும் ஒட்டுமொத்த நிருவாகம், முகாமைத்துவம், பராமரிப்பு, பயிற்சியளித்தல் மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகள் இப்பிரிவின் அதிகாரத்தின் கீழ் வருகின்றன. இது, மனித வள முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய செயல்பாடுகளுக்கும் பொறுப்பானதாகும். இதன்படி, பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ள அரச அலுவலர்களினதும், கௌரவ அமைச்சரது துணைப் பதவியினரின் தனிநபர் கோவைகளையும் மற்றும் அவர்களுடன் தொடர்புபட்டுள்ள தாபனங்களின் செயற்பாடுகளையும் பேணுதல் அத்துடன் பதவியினர் பற்றிய தரவுகளை நாளதுவரைப்படுத்துதல்.
- அமைச்சின் கீழ் வருகின்ற திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் பணியாற்றுகின்ற அமைச்சு அலுவலர்கள் தொடர்பிலான அலுவல்களை உருவாக்குதலும் நிருவகித்தலும்.
- அமைச்சரவை விஞ்ஞாபனத்தைத் தயாரித்தல் மற்றும் அமைச்சரவை தீர்மானங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.
- தொழில் சட்டங்களை நாளது வரைப்படுத்துதல், புதிய சட்டவாக்கங்களை சட்டமாக்குதல் மூலம் தொழிற்றுறை ஒத்துழைப்பிற்கும், வேலைவாய்ப்பு ஊக்குவிப்பிற்கும் பாதுகாப்பிற்கும் கொள்கையளவிலான பங்களிப்பினை வழங்குதல்.
- ஆலோசனைக் குழுவினால், அரச முறையீட்டு ஆணைக்குழுவினால் கேட்கப்பட்ட, அதே போன்று பாராளுமன்ற கேள்விகளுக்கான பதில்களை வழங்குதல் மற்றும் சனாதிபதி செயலகத்தினால், பிரதம அமைச்சரின் அலுவலகத்தினால் அனுப்பப்பட்ட பொது மக்களின் முறைப்பாடுகளுக்கும், அதேபோன்று பொது மக்களிடமிருந்து உரிய நிறுவனங்களால் நேரடியாகப் பெறப்பட்ட மனக்குறைகளுக்கும் பதில்களை வழங்குதல்.
- அமைச்சின் வாகனங்களை நிருவகித்தல், தேவையான கட்டமைப்பு வசதிகளுக்கான ஏற்பாடுகள், பயிற்சிச் செயற்பாடுகள், மூலதனப் பொருட்களினதும், உபகரணங்களினதும் முகாமைத்துவம், மேலதிக நேர, விடுமுறைக் கொடுப்பனவு, பணிக்கொடை காப்புறுதி மற்றும் இடர் கடன்களுக்கான அனுமதி ஆகியவற்றுடன் தொடர்புடைய செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

## 1.4.2. அபிவிருத்திப் பிரிவு

நாட்டில் தொழில் உரிமைகளைப் பாதுகாத்து, தொழில் தொடர்பான பிரச்சினைகளை நிவர்த்தி செய்து சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சமவாயங்கள் மற்றும் பரிந்துரைகளின் கீழ், உறுப்பு நாடொன்றாக சர்வதேச தொழில் தாபனத்துடனான இலங்கையின் இணைப்பினைப் பயன்படுத்தி அமைச்சு சார்பாக பணியாற்றுவது இந்தப் பிரிவின் அதிகாரத்தின் கீழ் வருகின்றது.

- இலங்கையால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தொழில் தாபனத்தின் உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் சர்வதேச தொழில் தாபனத்திற்கு சமர்ப்பித்தல்.
- தொழில் துறையாக, இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து சர்வதேச சமூகத்திற்கு விளக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- தொழில் துறை தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சர்வதேச தொழில் தாபனத்தின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெறுவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல்.
- அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் அலுவலர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி வழங்குவதற்கான நடவடிக்கையை ஆரம்பித்தல்.
- புதிய சட்டங்களை வரைவதற்கும், தற்போதிருக்கின்ற தொழில் சட்டங்களை தற்காலத்திற்கு ஏற்றவாறு திருத்துவதற்கும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும், அவற்றிலுள்ளவற்றைப் பின்பற்றுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுத்தல்.
- கூட்டுக் குழு கூட்டங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகள் மற்றும் பிராந்திய / உலகளாவிய கலந்துரையாடல்களுடன் தொடர்புபட்ட அனைத்து செயற்பாடுகளும் தொடர்பான புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் / உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுதல், உடன்படிக்கைகளை இற்றைப்படுத்தல் மற்றும் உடன்படிக்கைகளின் செயற்பாட்டைப் பின்தொடர்தல்.
- நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தல்.

## 1.4.3 திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவு

இந்தப் பிரிவின் முக்கிய தொழிற்பாடுகள், நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நோக்கி அபிவிருத்தித் திட்டங்களை வழிநடத்துவதற்குத் தேவையான அமைச்சினதும், அதன் அதிகாரத்திற்குட்பட்ட அனைத்து நிறுவனங்களினதும் திட்டங்களை வகுத்தல், செயல்படுத்துதல், முன்னேற்ற மீளாய்வு மற்றும் பின்தொடர்தல் போன்றவையாகும். இதற்கு மேலதிகமாக, இப்பிரிவு பின்வரும் கடமைகளையும் ஆற்றுகின்றது.

- அமைச்சினதும், அதனுடன் இணைந்த நிறுவனங்களினதும் இலக்குகளை விருத்தி செய்தலை எடுத்துக்காட்டி வருடாந்த செயற்திட்டத்தை தயாரித்தலும், அதனை உரிய அக்கறைதாரர்களுக்கு அனுப்புதலும் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துதலும். அதேநேரத்தில், முன்னேற்றத்தை மீளாய்வதன் ஊடாக இலக்குகளை அடைவதை கண்காணித்தலும், ஊக்குவித்தலும், அத்துடன் அவற்றைப் பின்பற்றுதலும்.
- தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் நியதிகளில் சனாதிபதி அலுவலகம், நிதி அமைச்சு, கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களம் அத்துடன் தேசிய திட்டமிடல் திணைக்களம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைதல் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளை மாதாந்த, காலாண்டு அடிப்படையில் சமர்ப்பித்தல்.
- வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்படுகளை தயாரிப்பதற்கான கருத்திட்ட முன்மொழிவுகளை இனங்காணுதலும் சமர்ப்பித்தலும்.
- அமைச்சினால் அடையப்பெற்ற முன்னேற்றத்தை விபரிக்கின்ற வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் வரவு செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்திற்கான முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பித்தல்.
- விடயவிதானத்துடன் தொடர்புடைய அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தலும், உரிய முறையில் தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு பரிந்துரைத்தலும்.
- பல்வேறு அமைச்சுகளால் செயல்படுத்தப்படும் செயல் திட்டங்களுக்கு பொருத்தமான வகையில் பங்களிப்பு செய்தல்.

## 1.4.4. நிதிப் பிரிவு

நிதிப் நிதி நிதிப் பிரிவின் பிரதான பொறுப்பு, அரசாங்கத்தின் கொள்கைகளுடன் இணங்கும் வகையில் உரிய குறிக்கோள்களை அடைவதற்கு இந்த அமைச்சுக்கு வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி வளங்களை வினைத்திறனுடன், ஆக்கத் திறனுள்ள வகையில், பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவையாகும்.

- 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கைக்கமைவாக வருடாந்த பொருட் கணக்கெடுப்பினை நடத்துதல்

- நிதி அதிகார முகவர்கள் தொடர்பான அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் நிதி அதிகார தூதுக்குழுவின் பணிகளை ஆற்றுதல்.
- வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரித்தல்.
- ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்.
- அரச கணக்குகள் குழுவுக்கான அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும்
- பொது திறைசேரிக்கும் ஏனைய உரிய நிறுவனங்களுக்கும் மாதாந்த மற்றும் காலாந்தர நிதி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.
- கணக்காய்வு விசாரணை அறிக்கைகளை இற்றைப்படுத்திப் பராமரித்தலும், உரிய கணக்காய்வு விசாரணைக்கான பதிலை கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்புதல்.

## 1.4.5. அகக் கணக்காய்வுப் பிரிவு

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (ஆ) மற்றும் (எ) பிரிவில் தரப்பட்டவாறும் கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களத்தின் 2019.01.12 ஆம் திகதியிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் தேவைப்பாடுகள் மற்றும் நிதி ஒழுங்கு 133 மற்றும் 134 நியதிகளின்படி அகக் கணக்காய்வுப் பிரிவுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்படி பிரதம கணக்காய்வு அலுவலரின் பொறுப்பு ஆற்றப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு நியதிகளின்படி மேற்கொள்ளப்பட்ட நியமனங்களின்படி தொழில் அமைச்சின் அகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் ஆற்றப்படுகின்றன.

தொழில் அமைச்சினதும், தொழில் திணைக்களத்தினதும் மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களினதும் உரிய உள்ளக கணக்காய்வு யெற்பாடுகளை மேற்கொள்ளும் பொறுப்பும் மற்றும் தேவைகளுக்கேற்ப விசேட விசாரணைகளை மேற்கொள்வதும் உள்ளக கணக்காய்வின் கீழ் வருகின்றன.

- நிறுவனத்திற்குள் உள்ளக கணக்காய்வு மற்றும் கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறனை மதிப்பிடுதல்.
- அரசாங்கத்தின் தாபனக் கோவை, அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் அத்துடன் பொது நிருவாக அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரி ஆகியவற்றினால் அவ்வப்போது வழங்கப்படும் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களுடன் இணங்கியொழுகுவதை ஆய்வு செய்தல்.
- கணக்காய்வு கோட்பாடுகள் மற்றும் முறைமைகளைப் பின்பற்றி தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, அதன் திணைக்களங்கள் மற்றும் பிற இணைந்த நிறுவனங்களின் செயற்பணி மற்றும் குறிக்கோள்களுடன் ஒத்துப்போகும் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை வினைத்திறனுடன் முகாமை செய்தல்.
- அமைச்சின் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கொள்கைகள், திட்டமிடல்கள், நடைமுறைகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்குவதை உறுதிப்படுத்துவதற்காக தாபிக்கப்பட்ட கட்டுப்பாட்டு முறைமைகளை மதிப்பீடு செய்தல்.
- சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மதிப்பீடு செய்தலும் சரிபார்த்தலும் மற்றும் சொத்துக்களின் இருப்பை சரிபார்த்தலும்.
- அமைச்சின் தாபிக்கப்பட்ட குறிக்கோள்களுக்கமைவாக பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ளனவா என்பதை மதிப்பிடுவதற்கான செயற்பாடுகளை அல்லது நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் தகவல்களை தெளிவுபடுத்துதல்.
- நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவுக்கும் பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு செயன்முறைகள் மற்றும் இடர் முகாமைத்துவ செயன்முறைகளை உருவாக்குவதற்கு வழிகாட்டல்களை வழங்குதல்.
- கணக்காய்வுக்குப் பின்னரான காண்பிப்புகளைத் தெரிவித்தல் மற்றும் அதன் பின்னர் தேவையான திருத்தங்களை சமர்ப்பித்தல்.
- வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.
- முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்கு அறிக்கைகளை உரிய திகதியளவில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் மேற்கொள்ளுதல்.
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தைக் கூட்டித், தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- காலத்திற்கு காலம் முகாமைத்துவத்தால் குறித்தொதுக்கப்பட்ட குறிப்பிட்ட கடமைகளை ஆற்றுதல் மற்றும் அறிக்கையிடுதல்.

## 1.5 அமைச்சின் பதவியினர் தொகுப்பு

| | நிறுவனம் | சிரேஸ்ட மட்டம் | | உயர் மட்டம் | | இரண்டாவது மட்டம் | | ஆரம்ப மட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை | பணிக் கமர்த்தப் பட்டுள்ள எண்ணிக்கை | அங்கீகரிக்கப் பட்ட எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்ப ட்டுள்ள எண்ணிக்கை | அங்கீகரிக் கப்பட்ட எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்பட் டுள்ள எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | பணிக்கமர்த்தப்பட் டுள்ள எண்ணிக்கை |
| 1 | அமைச்சு அலுவலகம் | 19 | 17 | 3 | 2 | 73 | 43 | 35 | 24 |
| 2 | தொழில் திணைக்களம் | 217 | 126 | 668 | 504 | 1,928 | 1,671 | 476 | 410 |
| 3 | மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் | 19 | 10 | 5 | 1 | 623 | 595 | 15 | 15 |
| 4 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | 9 | 3 | 13 | 7 | 18 | 9 | 5 | 2 |
| 5 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகதார நிறுவகம் | 7 | 2 | 3 | 2 | 10 | 6 | 5 | 5 |
| 6 | வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் | 5 | 3 | 2 | 1 | 31 | 26 | 5 | 5 |
| 8 | சிரம வாசனா நிதியம் | 1 | 1 | 4 | 3 | 8 | 4 | 4 | 2 |
| | மொத்தம் | **277** | **162** | **698** | **520** | **2691** | **2354** | **545** | **463** |

## 1.6 இந்த அமைச்சுடன் இணைந்துள்ள நிறுவனங்கள்

### 1.6.1. தொழில் திணைக்களம்

தொழில் திணைக்களத்தின் பிரதான வகிபாகம்,தொழில் சட்டங்களின் கீழ் இலங்கை தனியார் துறை மற்றும் பகுதியளவிலான அரசு துறை பணியாளர் சமூகத்தின் உரிமைகளை நிலைநிறுத்துவதேயாகும். தொழில் திணைக்களமானது, சுமூகமான தொழில் வழங்குநர்கள்-பணியாளர் உறவுகளை வளர்ப்பதன் மூலமும், வேலையாளர்களின் உரிமைகளை வலுப்படுத்துவதன் மூலமும், தொழில் வழங்குநர்களின் ஆதரவுடன் தொழில்துறை அமைதியை முன்கூட்டியே ஊக்குவிக்கும் வகையில் 2024 ஆம் ஆண்டில் அதனது வகிபாகத்தை விரிவுபடுத்தியுள்ளது.


மிகவும் சாதகமான முதலீட்டு சூழலை வளர்ப்பதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டிற்கு இணங்க, தொழில் திணைக்களம் 2023 ஆம் ஆண்டில் புதிய தொழில் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. இந்த இற்றைப்படுத்தப் பட்ட சட்டவாக்கம், பல தசாப்தங்களாக பழமையான, சிக்கலான தொழில் சட்டங்களை எளிமைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, இதன் மூலம் தொழில்வழங்குநர் - பணியாளர் உறவுகளை மேம்படுத்துகின்றது.

**பிரதான தொழிற்பாடுகள்**

- சமூகக் கலந்துரையாடலை மேம்படுத்துவதனூடாக நிறுவனம்சார் மட்டத்தில் தொழில் தருநர்களுக்கும் பணியாளர்களுக்கும் இடையிலான உறவினை அதிகரிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுதல்,
- தொழில் சட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் தொழிலாளர்களின் உரிமைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- சமரசம், கூட்டு உடன்படிக்கை மற்றும் மத்தியஸ்தம் என்பவற்றினூடாக கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தல்.
- ஊழியர் சேமலாப நிதியத்தினூடாக பணியாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பை வழங்குதல்.
- பணியாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை நிவர்த்தி செய்தல்.
- சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல் மற்றும் பணிக்கமர்த்தப்பட்டுள்ள பெண்களைப் பாதுகாத்தல் போன்றவற்றை கையாளுதல்.
- சம்பளங்கள் மற்றும் வேலை நிபந்தனைகளை வலுப்படுத்துவதன் மூலம் தொழில் நியமங்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

\

**திணைக்களத்தின் கட்டமைப்பு**




### 1.6.2. மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

ஒரு நாட்டின் வரையறுக்கப்பட்ட வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவது அதன் முன்னேற்றத்தில் முக்கியமானதொரு காரணியாகும். பொருளாதார அபிவிருத்தி, புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றல், பணியாளர் உற்பத்தித்திறன், உலகளாவிய போட்டித்தன்மை, சமூக ஸ்திரத்தன்மை, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு, மக்கள் தொகை ஈவுத்தொகை, சமூக முன்னேற்றம், தொழில்நுட்ப மாற்றத்திற்கு ஏற்ப பின்பற்றுதல் மற்றும் மனித மூலதன உருவாக்கம் போன்ற அத்தகைய பிரதான அபிவிருத்தி காரணிகளின் சாதகமான அபிவிருத்தி நடத்தையில் ஒரு நாட்டின் மனித வளங்களின் தாக்கம் மகத்தானது. ஒரு நாட்டின் அபிவிருத்திக்கும் அதன் அபிவிருத்தி முகவர்களுக்கும் இடையிலான நேர்மாறான உறவு மனித வளங்களின் பயனுறுதி மற்றும் வினைத்திறன் மூலம் உருவாக்கப்படுகின்றது. மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களமானது, உலக மற்றும் உள்நாட்டு தொழில் சந்தை போக்குகளை இனங்கண்டு, இலங்கையின் மனித வளங்களை தொழில் சந்தையுடன் ஒத்துப்போவதை நோக்கமாகக் கொண்டு, 2010.02.12 ஆம் திகதியிடப்பட்ட 1640/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின்படி 2010.01.01 ஆம் திகதி முதல் தொழிற்பட்டு வருகின்றது.

**பிரதான தொழிற்பாடுகள்**

- தேசிய மனிதவளம் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல்.
- வேலை உருவாக்கமும், ஊக்குவிப்புச் செயற்பாடுகளும்
- தொழில் வழிகாட்டுதல் நடவடிக்கைகள்
- தொழில் சந்தைத் தகவல்களைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பரப்புதல்
- அரச வேலைவாய்ப்பு சேவை தொடர்பான அனைத்து சேவைகளும்

முதல் பணியாகக் தெரிவிக்கப்பட்டுள்ள தேசிய மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையைத் தயாரித்து செயல்படுத்தும் பொறுப்பு தற்போது தேசிய மனிதவள அபிவிருத்தி மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், இத்திணைக்களம், மேலுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அக்கறைதாரர் நிறுவனமாக பங்களிக்கின்றது.

## 1.6.3. தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் 2007 செப்ரெம்பர் 11 ஆம் திகதி அலுவலகரீதியாகத் தாபிக்கப்பட்டிருந்ததுடன், 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவகச் சட்டத்தினால் பாராளுமன்றத்தினால் சட்டரீதியாக ஒன்றிணைக்கப்பட்டது. தொழிற் றுறையின் முத்தரப்பு அக்கறைதாரர்களை அதாவது தொழில்தருநர்கள், பணியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொழிற் சங்கங்கள் மற்றும் அரச அலுவலர்களைக் கொண்டிருக்கின்ற ஆளுநர்கள் சபையொன்றினால் நிருவகிக்கப்படுகின்றது.

**பிரதான தொழிற்பாடுகள்**

- அபிவிருத்திச் செயன்முறையில் பணியாளர்களை துடிப்புடன் ஈடுபடுத்துவதற்காக அவர்களின் நலனை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை எடுத்து, உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து தொழில் கற்கை நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.
- தொழில் கல்வி பற்றிய கருத்தரங்குகள், செயலமர்வுகள், மாநாடுகள் மற்றும் கூட்டங்களை நடத்துதல் அத்துடன் அதனுடன் தொடர்புபட்ட சஞ்சிகைகள், நாளேடுகள், பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்களை வெளியிடுதல்.
- ஆராய்ச்சிகளை, ஆய்வுகளை நடத்துதல் மற்றும் நூலகம் மற்றும் தகவல் சேவைகளைத் தாபித்து, பராமரித்து, தொழில் கல்வியுடன் தொடர்புபட்டுள்ள கற்கைநெறிகளுக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுதல்.
- ஒத்த குறிக்கோள்களுடனான தேசிய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், தாபனங்கள், ஒன்றியங்கள் மற்றும் சங்கங்களுடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் பணியாற்றுதல்.
- பல்கலைக்கழகங்களினதும் மற்றும் ஒத்த நிறுவனங்களின் உதவியுடன் தொழில் கற்கைகளில் டிப்புளோமா கற்கை நெறிகள் உள்ளடங்கலான கற்கைநெறிகளை நடத்துதல் மற்றும் தேவைப்படும் போது சான்றிதழ்கள் மற்றும் டிப்புளோமாக்களை வழங்குதல்.
- தொழிற்றுறை அமைதியைப் பேணுவதனை நோக்கமாகக்கொண்ட செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

## 1.6.4. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, நேர்மையான தொழில் பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் சிறந்த சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் இலங்கையில் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான தொழில் அணியை உருவாக்கும் நோக்குடன், 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தின் மூலம் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் துணை நிறுவனமொன்றாக தாபிக்கப்பட்டது.

நாளாந்த சுற்றாடல் அளவீட்டு கணக்கெடுப்புடுகள், இடர் மதிப்பீடு மற்றும் மருத்துவ பரிசோதனைகள் அதேபோன்று ஏனைய நாடுகளுடனான சர்வதேச ஒத்துழைப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றினூடாக இலங்கையில் செழிப்பான தொழில் அணியை உருவாக்குவதற்கு இந்நிறுவனம் பணியாற்றுகின்றது.

**பிரதான தொழிற்பாடுகள்**

- வேலைத்தலங்களில் அல்லது பணிச்சூழலில் பேணப்பட வேண்டிய தரநியமங்களை காலாந்திரம் மதிப்பீடு செய்தலும் அளவீடு செய்தலும் மற்றும் அந்தத் தரநியமங்கள் தொடர்பான சட்டவாக்கத் தேவைப்பாடுகள் குறித்து அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதலும்.
- தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிச்சூழல் தொடர்பான அனைத்து விடயங்களிலும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
- நிறுவனத்தால் வேறு ஏதேனும் ஒரு நிறுவனத்திற்கு, அமைப்புக்கு அல்லது ஏனைய ஆட்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் அல்லது வசதிகள் அல்லது உபகரணங்களுக்காக கட்டணம் விதித்தல் அல்லது அறவிடுதல்.
- நிறுவனத்தின் செயல்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக ஏதேனும் அசையா அல்லது அசையும் சொத்தை கையகப்படுத்துதல், வைத்திருத்தல், குத்தகைக்கு விடுதல் அல்லது வாடகைக்கு விடுதல், அடமானம் வைத்தல், சுமத்துதல், விற்பனை செய்தல் அல்லது அப்புறப்படுத்துதல்.
- நிறுவனத்தால் அல்லது நிறுவனத்தால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலரால் அல்லது முகவராலும் நிறுவனத்தின் பணிகளைச் ஆற்றுவதற்குத் தேவைப்படக்கூடியவாறான அனைத்து உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுதலும் நிறைவேற்றுதலும்.

### 1.6.5. வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்

வேலைத்தலத்தில் ஏற்படுகின்ற விபத்துக்களுக்காக பணியாளர்களுக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவை வழங்குவதற்காக 1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டிருந்தது. மூலச் சட்டம் பல தடவைகள் திருத்தப்பட்டு, இறுதியாக 2022 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப் பட்டிருந்தது. வேலையாளர் நட்டஈட்டு நீதிமன்றம், மாவட்ட நீதவானின் தத்துவம் மற்றும் நீதிவான் நீதிமன்ற தத்துவத்துடன் முழு நாட்டையும் உள்ளடக்கக்கூடிய வகையில் 14 சுற்றுலா நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. நீதிச் சேவைகள் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுகின்ற நீதிசார் அலுவலர்களான வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர், மேலதிக வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர்கள் மற்றும் வேலையாளர் நட்டஈட்டு உதவி ஆணையாளர்கள் ஆகிய 3 பதவிகள் உள்ளடங்கலாக, இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I இனைச் சேர்ந்த பதவி 1 இலங்கை நிருவாக சேவையின் பதவி 1 உள்ளடங்கலாக 43 பதவிகள் இதில் காணப்படுகின்றன.

குற்றவியல் நடைமுறைக் கோவை, சிவில் நடைமுறைக் கோவை மற்றும் சாட்சிய கட்டளைச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகள் வேலையாளர் நட்டஈட்டு நீதிமன்ற நடைமுறைக்கு பொருந்தும், மேன்முறையீட்டு நடைமுறை மாவட்ட நீதிமன்றத்திற்குச் சமனானதாகும். குற்றவியல் நடைமுறைக் கோவை, சிவில் நடைமுறைக் கோவை மற்றும் சாட்சிய கட்டளைச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகள் வேலையாளர் நட்டஈட்டு நீதிமன்ற நடைமுறைக்கு பொருந்தும், மேன்முறையீட்டு நடைமுறை மாவட்ட நீதிமன்றத்திற்குச் சமனானதாகும்

**பிரதான தொழிற்பாடுகள்**

- அரசதுறை மற்றும் தனியார் துறையில் தொழில் புரிகையில் ஏற்படுகின்ற விபத்துக்கள் மற்றும் தொழில்சார் நோய்களுக்காக தொழில்தருநர்களிடமிருந்து நட்டஈட்டினை அறவிடுவதுடன் தொடர்புட்ட செயற்பாடுகள் மற்றும் வேலையாளரொருவர் இறக்கின்ற போது அவரில் தங்கியிருப் பவர்களுக்கு தொழில்தருநரிடமிருந்து நட்ட ஈட்டை அறவிடுவது தொடர்பான செயற்பாடுகள். (இறுதித் திருத்தத்தின்படி, செலுத்தக்கூடிய ஆகக்கூடிய நட்டஈடு 2,000,000 ரூபா வழங்கப்படுகின்றது).
- இறந்த பணியாளர்களில் தங்கியிருக்கின்ற பராயமடையாதவர்களது நட்ட ஈட்டை அவர்கள் முதிர்ச்சியடையும் வரையில் வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளரின் பாதுகாப்பின் கீழ் தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்பிலிட்டு அதனை நிருவகித்தல்.
- நட்டஈட்டுக் கொடுப்பனவை தொழில்தருநர்கள் செலுத்தாத சந்தர்ப்பங்களில், அத்தகைய தொழில் தருநர்களது அசையும், அசையாத சொத்துக்களைக் கைப்பற்றி, நட்டஈட்டினை அறவிடுவதற்காக அவற்றை பொது ஏலத்தில் விடுதல்.
- வேலையாளர் நட்டஈட்டுக் காப்புறுதி அனுமதிப் பத்திரத்தை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் இரத்துச் செய்தல்.
- பணியாளரொருவருக்கு விபத்தொன்று ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தளப் பரிசோதனைகளை நடத்துதல்.
- இலங்கையில் பதிவுசெய்து கப்பலில் மற்றும் விமானத்தில் பணியாற்றுகின்ற வேலையாளர் களுக்கு இலங்கைக்கு வெளியே விபத்துக்கள் ஏற்படுகின்ற விடத்து நட்டஈடு அறவிடுவதனை மேற்கொள்ளுதல்.

## 1.6.6 சிரம வாசனா நிதியம்

1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டம் (2019 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறு) மூலம் பணியாளர்களின் நலன்புரியினை மேம்படுத்துவதற்காக தாபிக்கப்பட்ட சிரம வாசனா நிதியமானது தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற நிறுவனமொன்றாகும். சட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள 06 பரந்த குறிக்கோள்களின் கீழ், இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்ட திலிருந்து பணியாளர்களின் முன்னேற்றத்திற்காக பல நலன்புரி நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

தேசிய லொத்தர் சபையின் ஜாதிக சம்பத லொத்தரின் வருமானமே "சிரம வாசனா நிதியத்தின்" பிரதான நிதி மூலமாகும். இதற்கு மேலதிகமாக, நிதியமானது நிலையான வைப்புத் தொகைகளின் வட்டியிலிருந்து வருவாயை உருவாக்குகின்றது என்பதுடன், நிதியத்தால் ஆண்டு தோறும் திட்டமிடப்பட்ட குறிக்கோள்களுக்கு ஏற்ப வேலையாளர்களின் நலனுக்காக நாடளாவியரீதியில் பல்வேறு நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

**பிரதான தொழிற்பாடுகள்**

- பணியாளர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருப்பவர்களின் நலன்புரியை மேம்படுத்துதல்.
- பணியாளர்கள் பணிபுரிந்த நிறுவனங்கள் முன்னறிவித்தலின்றி மூடப்படுகின்றபோது அவர்களுக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குதல்.
- அவசர காலங்களில் பணியாளர்களுக்கு மருத்துவம் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.

- பணியாளர்களுக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்படும்போது அவர்களுக்கு தற்காலிக உதவிகளை வழங்குதல்.
- பணியாளர்களுக்கு அல்லது அவர்களில் தங்கியிருப்பவர்களுக்கு, இடர் காலங்களில் நிதி மற்றும் ஏனைய அனுகூலங்களை வழங்குதல்.
- பணியாளர் நலனுக்காக சிறந்த சேவை செய்த நபர்களுக்கு விருதுகள் வழங்குதல்.
- தொழில் ஆணையாளர் அதிபதி, தொழில் நியாயசபை, நடுவர் அல்லது கைத்தொழில் நீதிமன்றம் அல்லது ஏனைய சட்ட நீதிமன்றத்தில் ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் விதிகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட அல்லது நிலுவையில் இருக்கும் போது பணியாளரின் பணிநீக்கம் அல்லது தொழிற்றுறைப் பிணக்கு தொடர்பான நடவடிக்கைகள் காணப்படுகின்றவிடத்து பணியாளர்களுக்கு சட்ட உதவியைப் பெறுவதற்கு நிதி நிவாரணம் வழங்குதல்.

# 2. 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமைச்சினால் அடையப்பெற்ற முன்னேற்றங்கள்

இந்த அமைச்சானது, உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல், அவர்களின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்தல், நாட்டில் தொழிற்றுறை அமைதியை நிலைநாட்டுதல் மற்றும் ஆற்றலுள்ள வேலையாளர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தைக்கு அனுப்புதல் ஆகிய துறைகளின் கீழ் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான திட்டங்களை வகுத்துள்ளது.

நாட்டின் தொழில் அணி சுமார் 8.40 மில்லியனாகக் காணப்படுகையில் அதில் 8.1 மில்லியன் பேர் தொழில் புரிகின்றனர். இந்த வேலையாளர்களில், அரச துறையில் உள்ளவர்கள், சொந்த தொழில் மற்றும் குடும்பத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் தவிர்த்து, நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்ற தனியார் துறை மற்றும் பகுதியளவிலான அரச துறைகளில் பணிபுரிகின்ற 3.75 மில்லியன் வேலையாளர்களின் தொழில் உரிமைகள், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கான பொறிமுறையை நடைமுறைப்படுத்தி, நாட்டில் தொழில்துறை அமைதியைப் பேணுவது அமைச்சின் பொறுப்பாகும்.

இந்த அத்தியாயமானது, 2024 செப்ரெம்பர் 31 ஆம் திகதி வரையில் அமைச்சினாலும், அதனுடன் இணைந்துள்ள நிறுவனங்களாலும் அவற்றின் உரிய குறிக்கோள்களை உணர்ந்து ஆற்றப்பட்ட செயற்பாடுகளினூடாக அடையப்பெற்ற முன்னேற்றத்தின் சுருக்கத்தினைக் கொண்டிருக்கின்றது.

## 2.1. சட்ட விவகாரங்கள்

### 2.1.1 பணியாளர்களது தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்ட உருவரைச் சட்டகத்தைப் பலப்படுத்துதல்

அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச சமூக பொருளாதார நிலைமைகள் மற்றும் தொழில் சமவாயங்கள் மற்றும் தரநியமங்களுக்கு இணங்க சட்ட ஏற்பாடுகளை வகுத்தமைத்தல், இலங்கையில் முதலீட்டாளருக்கு இணக்கமான சூழலை உருவாக்குதல் மற்றும் நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்கு வழிவகுப்பது இந்த அமைச்சிற்கு உரிய நேரத்தில் உரித்தளிக்கப்பட்ட பொறுப்பாகும். தொழில் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இயற்றப்பட்ட கட்டளைச் சட்டங்கள் உள்ளடங்கலாக சுமார் 50 சட்டங்கள் தற்போது அமுலில் உள்ளன. தற்போதைய மற்றும் எதிர்கால சவால்களை எதிர்கொள்வதற்கும், பணியாளர்களின் உரிமைகளை ஒருங்கிணைப்பதற்கும், அனைத்து தரப்பினருக்கும் நன்மைகளை உறுதி செய்யும் வகையில் தொழில் சட்டவாக்கங்களில் நிலவும் முரண்பாடுகளை அகற்றுவதற்கும் தற்போதுள்ள தொழில் சட்டங்களில் திருத்தம் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- **தற்போதைய தேவைகளை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளுடன் புதிய தொழில் சட்டத்தைத் தயாரித்தல்**

தொழில் திணக்களத்தால் அமுல்படுத்தப்பட்ட தற்போதைய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள், சமகால சமூகப் பொருளாதார மாற்றங்கள் மற்றும் தொழில் உலகில் ஏற்படும் மாற்றங்களுக்கு வினைத்திறனுடன் பதிலளிக்க போதுமானதல்ல. உழைக்கும் சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாப்பது மட்டுமின்றி, வணிகங்களின் நிலைத்ததன்மையை ஆதரிக்கும் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான ஈர்ப்பை அதிகரிக்கும் தொழில் சட்டத்தின் தேவை அதிகரித்து வருகின்றது. இதேபோன்று, சிக்கல்களை நீக்கி, தொடர்புபட்டுள்ள அனைத்து தரப்பினருக்கும் நன்மைகளை உறுதிப்படுத்தி அதன் மூலம் சட்டங்களை நெறிப்படுத்தவும், இலகுவாக்கவும் வேண்டிய அவசியமுள்ளது, இந்தநோக்கத்திற்காக, தற்போது செயல்பாட்டிலுள்ள 13 சட்டங்களின் ஏற்பாடுகளைத் திருத்துவதற்காக, 2023.08.07 ஆம் திகதிய 23/1439/625/025 ஆம் இலக்க அமைச்சரவைப்பத்திரத்திற்கும் மற்றும் 2023.10.30 ஆம் திகதிய 23/1439/625/025 ஆம் இலக்க அமைச்சரவைப்பத்திரத்திற்கும் அமைவான அமைச்சரவைத் தீர்மானத்தின்படி வரைவுச் சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக 2023.11.17 ஆம் திகதி தோராயமான வரைவு சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த தோராயமான வரைவு புதிய அதரசாங்கத்தின் கொள்கைக்கமைவாக மேலும் கவனத்தில்கொள்ளப்படவுள்ளதுடன்,தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, புதிய அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

- **பணியாளர்களின் நலன் கருதி, நிகழ்காலத்துக்கு ஏற்றவாறு 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக பணியாளர் சட்டத்தின் திருத்தம்**

காலத்தின் தேவைக்கேற்ப நிறுவனங்களில் இரவு வேலையில் பெண்களை பணியமர்த்துவதற்கான ஏற்பாடுகளைக் கொண்ட 2024 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் ஊதியத்தை ஒழுங்குபடுத்துதல்) (திருத்தம்) சட்டம் 2024.05.09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

- **பணியாளர்களின் சேமநலனுக்குப் பொருந்தும் வகையில், நிகழ்காலத்துக்கு ஏற்றவாறு 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் திருத்தம்**

2024.07.01ஆம் திகதிய 24/1234/625/017 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, சட்டமூலமானது, சட்டமூலமாகத் தயாரிக்கப்படுவதற்காக 2024.08.06 ஆம் திகதி சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டது. இருப்பினும், இனங்காணப்பட்டமேலதிக திருத்தங்களைக் கவனத்திற்கொண்டுதேவையான திருத்தங்கள்மேற் கொள்ளப்படும் என்பதுடன் எதிர்காலத்தில் அமைச்சரவைக்குந் சமர்ப்பிக்கப்படும்.

- **2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டம்**

இந்த சட்டமூலம், 2023.07.01ஆம் திகதிய 003/625/9396/23 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைவாக 2023.03.07 ஆம் திகதி சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டது. சட்ட வரைஞர், இது தொடர்பிலான குறித்த சில விடயங்கள் மீதான அவதானத்தை வேண்டியுள்ளதுடன், இது, புதிய உலக மற்றும் சந்தைத் தேவைப்பாடுகளுக்கேற்ப மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள் உள்ளடங்கலாக புதிய அரசாங்கத்தின் கொள்கைகளைக் கருத்திற்கொண்டு மேலும் திருத்தப்பட்டு, அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

- **1998 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சிரம வாசனா நிதியச் சட்டத்திற்கான திருத்தம்**

சிரம வாசனா நிதியச் சட்டத்தை திருத்துவதற்கான வரைவு ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு, பணிப்பாளர்கள் சபையிடம் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளன.

## 2.2 வெளிநாட்டு உறவுகள்

### 2.2.1 சர்வதேச தொழில் தரநியமங்களைப் பேணுதல்

I. சர்வதேச தொழில் தாபனத்தின் 22 ஆவது உடன்படிக்கையின் கீழ் 2024 ஆம் ஆண்டிற்கான சமவாயங்களுக்கான 04 அறிக்கைகளைத் தயாரித்து, மீளாய்வாண்டு காலப்பகுதிக்காக 04 அறிக்கைகளை சர்வதேச தொழில் தாபனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

II. சர்வதேச தொழில் தாபனத்தின் (ILO) சமவாயம் 19 ஆம் உறுப்புரையின் கீழ் ஏற்று அங்கீகரிக்காத சமவாயங்களுக்கான 01 அறிக்கை தயாரிக்கப்பட்டு, சர்வதேச தொழில் தாபனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

III. சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) தொடர்புபட்டுள்ள 02 சுற்று கலந்துரையாடல் களில் பங்கேற்றல்.

IV. சிறுவர் தொழிலை இல்லாதொழிப்புக்கான தேசிய வழிகாட்டுதல் குழு (NSCECL) தொடர்புபட்ட 01 கூட்டத்தை நடத்துதல் மற்றும் தொடர்புடைய அனைத்து செயற்பாடு களையும் ஒருங்கிணைத்தல்.

V. சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் உருவாக்கப்பட்ட சமூகப் பாதுகாப்பு நிதியம் பற்றிய முத்தரப்புக் குழுவின் அறிக்கை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து, முன்னைய அமைச்சரவையால் அங்கீகரிக் கப்பட்ட இலங்கை தேசிய சமூகப் பாதுகாப்புக் கொள்கையை மீளாய்ந்து, திருத்துவதற்கான நடவடிக்கைகளை கூட்டாக எடுக்குமாறு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சின் செயலாளருக்கும், தொழில் அமைச்சின் செயலாளருக்கும் அமைச்சரவை அறிவுறுத்தி யுள்ளது. அமைச்சரவை, மீளாயப்பட்ட இலங்கை தேசிய சமூகப் பாதுகாப்புக் கொள்கையை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சினூடாகச் சமர்ப்பிக்குமாறும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சிற்கு அறுவுறுத்தியுள்ளது.

VI. ஜெனீவாவில் ஆண்டுதோறும் நடைபெறும் சர்வதேச தொழில் மாநாட்டிற்கு முத்தரப்பு பிரதிநிதிகளின் பங்கேற்பு தொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தலும், பின்தொடர்தலும். இதன்படி, சர்வதேச தொழில் மாநாடு 2024.06.03 முதல் 2023.06.14 வரை நடைபெற்றிருந்ததுடன், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 09 பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

VII. பொருளாதார நெருக்கடி காரணமாக காலத்தால் அவசியமான தொழில் சந்தை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் குறிக்கோளுடன், முத்தரப்புக் குழு மூலம், சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன், சீரிய வேலையின் கீழ் வேலை வாய்ப்பு மீட்பு உத்தியை உருவாக்குதல், ஆரம்பித்தல் மற்றும் செயல்படுத்து வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

VIII. இந்த அமைச்சுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களின் அலுவலர்கள் மற்றும் தொழிலாளர் திணைக்களத்தின் அலுவலர்கள் வெளிநாட்டு புலமைப்பரிசுல் செயலமர்வுகள் மற்றும் பயிற்சித் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல். 2024 சனவரி 01, முதல் 2024 டிசெம்பர் 30 வரையிலான காலகட்டத்தில், 67 அலுவலர்கள் வெளிநாட்டு பயிற்சி கற்கைநெறிகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளில் கலந்து கொள்வதற்கு வெளிநாடு சென்றுள்ளனர்.

IX. சமூகப் பாதுகாப்பு, கல்வி மற்றும் தொடர்புடைய அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களிலும் இலங்கைக்கும் வெளிநாடுகளுக்கும் இடையே கைச்சாத்திடப்படவுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைகள் பற்றி நடவடிக்கை எடுத்தல்.

- சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பாக இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. உடன்படிக்கை இறுதிவடிவத்தைப் பெற்றுள்ளதுடன், இந்திய தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்காக காத்திருக்கப்படுகின்றது.
- இலங்கையின் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்திற்கும் இந்தியாவிலுள்ள வி வி கிரி தேசிய நிறுவகத்திற்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. உடன்படிக்கை இறுதிவடிவத்தைப் பெற்றுள்ளதுடன், சட்டமாதிபர் திணைக்களத்தின் அனுமதிக்காக காத்திருக்கப்படுகின்றது.

X. சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் பயிற்சி செயலமர்வுகள் தொடர்பான அனைத்துச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தல். இது, சீரிய வேலை நாட்டு நிகழ்ச்சித்திட்டம் கூட்டம் ஒன்றையும் மற்றும் இரண்டு தொழிலற்றோர் காப்புறுதி ஆலோசனைக் கூட்டங்களையும் உள்ளடக்குகின்றது. சர்வதேச தொழில் தாபனம், தொழிலற்றோர் காப்புறுதி பற்றிய யதார்த்த அறிக்கையை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்துள்ளது.

XI. தொழில்நுட்ப உதவி வழங்குவதற்காக இலங்கைக்கு வருகை தரும் சர்வதேச தொழில் தாபனத்தின் அலுவலர்களுக்கான விசா கோரிக்கை கடிதங்களை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு சமர்ப்பித்தல். இதன்படி, 2024.01.01 முதல் 2024.09.30 வரை 42 கோரிக்கை கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

XII. இலங்கை மத்திய வங்கியால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் பொருளாதார அபிவிருத்தியின் முக்கிய அம்சங்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான எதிர்பார்ப்புகள் தொடர்பான தகவல்களை வழங்குதல் மற்றும் மத்திய வங்கியின் ஆண்டு அறிக்கை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

XIII. பெருந்தோட்டத் தொழிலாளர் பிரச்சினைகள் குறித்த 05 முக்கிய குழு கூட்டங்களும், 03 உப குழுக் கூட்டங்களும் உள்ளூர் தோட்ட நிறுவனங்களுடன் நடத்தப்பட்டுள்ளதுடன், 01 கூட்டங்கள் செங்கொடி அமைப்புடன் நடத்தப்பட்டுள்ளன.

## 2.3 திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள்

I. "குளோகல் சந்தை – 2024" பதாதையின் கீழ், புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் புலம்பெயர் வேலையாளர் குடும்பங்களின் இளம் பிள்ளைகளுக்கு வசதிகள் மற்றும் வாய்ப்புகளை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன், எதிர்கால தொழில் சந்தையில் சேர்வதற்கு அவர்களைத் தயார்படுத்தி, அவர்களின் கல்வி மற்றும் தொழில்சார் திறன்களை மேம்படுத்துவதன் மூலம், புலம்பெயர் வேலையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதையும், அவர்களின் அழுத்தமான கவலைகளை நிவர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்ட சேவைகளை வழங்குவதற்கு புலம்பெயர் வேலையாளர்கள் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வாய்ப்புகளை வழங்கி, ஈடுபட்டுள்ள வேலையாளர்களின் தொழில்சார் கௌரவத்தை மேம்படுத்துவதற்காக 'கரு சரு' நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டு, தொழில் சந்தையில் பெரும்பாலும் குறைத்து மதிப்பிடப்படும் தொழில்களில், பாடசாலைப் பிள்ளைகள் மற்றும் பாடசாலையை கைவிடுபவர்களுக்கு 'சிமார்ட் கிளப்' கருத்தை ஊக்குவித்து, எதிர்கால வேலை வாய்ப்புகளுக்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களைக் உருவாக்குகின்ற மற்றும் சிரம வாசனா நிதியத்தினால் பாடசாலை எழுதுபொருட்களை வசதிகுறைந்த பிள்ளைகளுக்கு விநியோகிக்கின்ற 24 நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டிருந்தன.

II. நாட்டின் பொருளாதார நெருக்கடியை முறியடிப்பதில் புலம்பெயர் வேலையாளர் அளித்த பெரும் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவுடன் இணைந்து, புலம்பெயர் வேலையாளர், புலம்பெயர் வேலையாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நாட்டிற்கு திரும்பி வந்த புலம்பெயர்ந்தோர்

ஆகியோரின் பங்கேற்புடன் குருணாகல், காலி மற்றும் **கொழும்பு மாவட்டங்களில் "விகமனிக ஹரஸர" என்ற பெயரில் 03 நிகழ்ச்சித்திட்டங்கள்** வெற்றிகரமாக நடத்தப்பட்டிருந்தன.

III. புதிய அரசாங்கக் கொள்கைகளுக்கு ஏற்ப அமைச்சு மற்றும் இணைக்கப்பட்ட நிறுவனங்களின் வருடாந்த செயல் திட்டங்களை திருத்துவதற்கான ஆரம்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.3.1. சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை அபிவிருத்திப் பாதையில் செல்ல வேண்டுமானால், சீரிய வேலை ஊக்குவிக்கப்பட வேண்டியிருக்கின்றது. சீரிய வேலை, சுதந்திரம், சமத்துவம், சமூகப் பாதுகாப்பு மற்றும் மனித கௌரவம் ஆகியவற்றின் சூழலொன்றில் ஆக்கத்திறனுள்ள பணியைப் பாதுகாப்பதற்கு ஆண் களுக்கும் பெண்களுக்கும் சம வாய்ப்புகளைப் பேணுகின்றது. சீரிய வேலையுடன் தொடர்புபடுகின்ற முக்கிய காரணி, வெறுமனே வேலை உருவாக்கம் எதிர்பார்க்கப்படுவ தில்லை என்பதுடன், உருவாக்கப்படும் வேலைகள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருத்தல் வேண்டும். சீரிய வேலை நான்கு பிரதான ஆக்கக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டது: வேலை உருவாக்கம், ஊக்குவிப்பு மற்றும் தேசிய உற்பத்தித்திறன், வேலையில் உரிமைகள், சமூகப் பாதுகாப்பு, சமூகக் கலந்துரையாடல். இந்த நான்கு முக்கிய கூறுகளுக்கு மேலதிகமாக, உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் பாலின சமத்துவத்தை உறுதிசெய்யும் பாடப் பகுதிகளை உள்ளடக்கிய திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கர்த்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பின்வரும் நிறுவனங்களுக்கு 8.4 மில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

**அட்டவணை 2.1** - *சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்*

| | **நிறுவனம்** | **தேறிய ஏற்பாடு (ரூபா)** | **பயன்படுத்திய தொகை (ரூபா)** | **செலவின விகிதம்** |
|---|---|---|---|---|
| 01 | **தொழில் திணைக்களம்** | | | |
| i | சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூறட்டுறவுப் பிரிவு | 3,039,000.00 | 1,682,896.00 | **56%** |
| ii | பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகாரப் பிரிவு | 3,837,000.00 | 2,966,918.97 | **77%** |
| iii | தொழில்சார் சுகாதாரப் பிரிவு | 244,000.00 | 244,000.00 | **100%** |
| iii | கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவு | 915,000.00 | 909,295.00 | **99%** |
| v | திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீடுகள் பிரிவு | 453,000.00 | 375,092.25 | **83%** |
| | **மொத்தம்** | 8,488,000.00 | 6,178,202.22 | **72.78%** |

## 2.4. நிருவாகம் மற்றும் தாபன விவகாரங்கள்

I. 2024 சனவரி முதல் டிசெம்பர் வரை, அமைச்சு 26 அமைச்சரவை விஞ்ஞாபனங்களை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தது. இவற்றில் 20 விஞ்ஞாபனங்களுக்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றிருந்தது. எஞ்சியுள்ள விஞ்ஞாபனங்கள் குறிப்பிட்ட தேவைகள் காரணமாக அவதானிப்புகள், அனுமதிகள் அல்லது ஏனைய தேவையான செயல்களுக்காக பல்வேறு நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன.

II. மீளாய்வுசெய்யப்பட்ட காலப்பகுதியில், சனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், பல்வேறு அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து நேரடியாக 713 பொதுவான முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளதுடன், அவை அனைத்தும் மேலதிக நடவடிக்கைகளுக்கும், பதிலளிப்பு அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் தொழில் திணைக்களத்திற்கும் மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, 1978 ஆம் ஆண்டில் வேலை நிறுத்தம் காரணமாக வேலைகளை இழந்த துலிஹிரிய-பகோடா தேசிய டெக்ஸ்டைல் மில்ஸ் லிமிடெட் பணியாளர்களுக்கு நட்டஈடு வழங்கும்

நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்ப, தொடர்புபட்ட பணியாளர்கள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு 2259 பணியாளர்களுக்கு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. தகுதியான 1717 பணியாளர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்து, உரிய நிதிசார் ஏற்பாடுகளை ஒதுக்குவதற்கு நிதி அமைச்சிற்கு தகவல்களை அனுப்பியுள்ளது.

III. 26 கோரிக்கைகள் தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்டுள்ளன, மேலும் அனைத்து கோரிக்கைகளுக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதேபோலன்று, 2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், இந்த அமைச்சு பொது முறைப்பாடுகள், பரிந்துரைகள் மற்றும் கருத்துகளுக்காக வாட்ஸ்அப் இலக்கமொன்று (070 722 7877) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

IV. ஆய்வாண்டு காலப்பகுதியில், பல்வேறு நிறுவனங்களால் நடத்தப்பட்ட பயிற்சி கற்கைநெறிகளில் 43 அமைச்சு அலுவலர்கள் பங்கேற்றிருந்தனர். இந்த அலுவலர்கள், சேவை ஒழுங்குவிதிகள் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு இணங்க, தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானதாகக் கருதப்படும் பயிற்சித் திட்டங்களில் கலந்துகொள்வதற்காக குறித்தொதுக்கப்பட்டிருந்தனர். இந்த பயிற்சி கற்கைநெறிகளுக்கான செலவுகள், செலவீன முகாமைத்துவ சுற்றறிக்கையை கடுமையாக பின்பற்றி கையாளும் நிலையேற்பட்டுள்ளது.

**அட்டவணை 2.2** – தாபனச் விவகாரங்களின் முன்னேற்றம்

| இல. | செயற்பாடுகள் | முன்னேற்றம் |
|---|---|---|
| 01 | பாராளுமன்றத்தில் வாய்மொழி கேள்விகளுக்கான பதில்கள் | 12 |
| 02 | பொது மேன்முறையீட்டுக் குழுவுக்கு அறிக்கைகள் அனுப்பப்பட்டமை | 1 |
| 03 | ஆண்டு அறிக்கைகளை அனுமதிக்காக அமைச்சரவையில் சமர்ப்பித்தமை | 2 |
| 04 | ஆண்டு அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தமை | 5 |
| 05 | அமைச்சரவை விஞ்ஞாபனத்துக்கான அவதானிப்புகள் | 6 |

## 2.5. நிதிசார் முன்னேற்றம்

அட்டவணை 2.3 – நிதிசார் முன்னேற்றம்

| | நிறுவனம் | செலவினத் தலைப்பு | | தேறிய எற்பாடு (ரூபா 000') | செலவினம் (ரூபா 000') | மீதி (ரூபா 000') | செலவின விகிதம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | அமைச்சின் அலுவலகம் | 193 | மீண்டெழுவது | 324,878 | 269,550 | 54,968 | 83 |
| | | | மூலதனம் | 29,450 | 13,032 | 16,418 | 44 |
| 02 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | | மீண்டெழுவது | - | - | - | - |
| | | | மூலதனம் | - | - | - | - |
| 03 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் | | மீண்டெழுவது | - | - | - | - |
| | | | மூலதனம் | - | - | - | - |
| 05 | வேலையாளர் நட்ட ஈட்டு ஆணையாளர் அலுவலகம் | | மீண்டெழுவது | 47,935 | 44,332 | 3,603 | 92 |
| | | | மூலதனம் | 3,000 | 1,529 | 1,471 | 51 |
| | **உப மொத்தம்** | | மீண்டெழுவது | **372,813** | **313,882** | **58,571** | **84** |
| | | | மூலதனம் | **32,450** | **14,561** | **17,889** | **45** |
| 06 | தொழில் திணைக்களம் | 221 | மீண்டெழுவது | 3,022,981.14 | 3,008,102.29 | 14,878.84 | 99 |
| | | | மூலதனம் | 1,403,925 | 316,149.88 | 1,087,775.11 | 22 |
| 07 | மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் | 328 | மீண்டெழுவது | 592,915 | 580,091 | 12,824 | 97 |
| | | | மூலதனம் | 29,725 | 19,829 | 9,896 | 66 |
| | **மொத்தம்** | | மீண்டெழுவது | 3,988,709.14 | 3,902,075.29 | 86,273.84 | 98 |
| | | | மூலதனம் | 1,466,100 | 350,539.88 | 1,115,560.11 | 23 |
| | **மொத்தம்** | | | 5,454,809.14 | 4,252,615.17 | 1,201,833.95 | 78 |

# 2.6. தொழில் திணைக்களம்


## 2.6.1. பணியாளர்களின் சமூகப் பாதுகாப்பு

இலங்கையில் தனியார் துறை மற்றும் பகுதியிவிலான அரச துறை பணியாளர்களின் சமூகப் பாதுகாப்பிற்காக 1958 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் மூலம் இலக்க ஊழியர் சேமலாப நிதியம் நிறுவப்பட்டுள்ளது. இந்த நிதியத்தின் நிருவாக செயல்பாடுகள் தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன், அதன் நிதியங்கள் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையால் நிருவகிக்கப்படுகின்றன. இதன்படி, 202401.01 முதல் 2024.12.31 வரை தொழில் திணைக்களத்தால் ஆற்றப்பட்ட செயல்பாடுகள் பின்வருமாறு.

- **ஊ.சே.நிதிய அனுகூலக் கொடுப்பனவு**

202401.01 முதல் 2024.12.31 வரை ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலக் கொடுப்பனவு தொடர்பாக 166,060 தீர்மானக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், விபரங்கள் கீழேயுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன.

**வரைபடம் 2.1-** 2024.01.01 முதல் 2024.12.31 வரை ஊசே.நிதிய அனுகூலங்களை செலுத்துவதற்காக அனுப்பப்பட்ட தீர்மானக் கடிதங்களின் எண்ணிக்கை



- **உதவுதொகைகளை செலுத்தத் தவறிய தொழில்வழங்குநர்களிடமிருந்து உதவு தொகைகளை அறவிடுவதற்கான அறிவித்தல்களை அனுப்புதல்**

நிர்ணயித்தவாறு உதவுதொகைகளைச் செலுத்தத் தவறிய தொழில்வழங்குநர்களுக்கு முதல் அறிவித்தல்கள் மற்றும் சிவப்பு அறிவித்தல்கள் வழங்கப்படுவதுடன், அத்தகைய அறிவிப்பு களுக்கு முறையாக பதிலளிக்கப்படவில்லை ன்றால், சட்டரீதியான நடவடிக்கை எடுக்கவும், மேலதிக அறவீட்டுடன் உதவுதொகைகளை அறவிடுவதற்கும் அவற்றை கணக்கில் வைப்பிலிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

- அனுப்பப்பட்ட முதலாவது அறிவித்தல்களின் எண்ணிக்கை -14,412
- முதலாவது அறிவித்தலிலிருந்து சேகரிக்கப்பட்ட தொகை - 7247 மில்லியன் ரூபா
- அனுப்பப்பட்ட சிவப்பு அறிவித்தல்களின் எண்ணிக்கை - 7040
- சிவப்பு அறிவித்தல்களை வழங்குவதன் மூலம் 2024 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகை - 3914 மில்லியன் ரூபா

- **ஊழியர் சேமலாப நிதியத்தை மேம்படுத்துவதற்கும், சேவைநாடுநர்களுக்கான சேவை வழங்கலின் வினைத்திறனை செம்மைப்படுத்துவதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**.

தொழில் செயலகக் கட்டிடத்தின் முதலாவது தளத்திலுள்ள புதிய அலுவலக வளாகம் பணியாளர்களுக்கு ஊ.சே.நி தொடர்பான சேவைகளை ஒரே இடத்தில் வழங்குவதற்காகத் 2024.08.06 ஆம் திகதி திறக்கப்பட்டது. இதன்படி, கோரல் கிளை, ஊ.சே.நி இறப்பு கோரிக்கைகள் 'எல்' கிளை, 30% முன்-அனுகூலக் கொடுப்பனவு கிளை மற்றும் மத்திய கோப்பிடல் பிரிவு (CFS) ஆகியவை முதல் தளத்தில் நிறுவப்பட்டு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதேபோன்று, கொழும்பு - வடக்கு, கொழும்பு - தெற்கு, கொழும்பு - கிழக்கு, கொழும்பு - மேற்கு மற்றும் மத்திய கொழும்பிலுள்ள மாவட்ட தொழில் அலுவலகங்களுக்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் (EPF) உறுப்பினர்களாக பணியாளர்களைப் பதிவு செய்யும் புதிய முறைமையும் இந்த இடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று, ஊழியர் சேமலாப நிதியம் குறித்து உறுப்பினர்களிடையே சரியான விழிப்புணர்வு இல்லாததால் ஏற்படும் சிக்கல்களைத் தணிக்கவும், உறுப்பினர்கள் மற்றும் தொழில் வழங்குநர்களுக்கு அறிவூட்டவும் இலங்கை மத்திய வங்கியின் உதவியுடன் 2024 ஆம் ஆண்டில் நடமாடும் சேவை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் பணியாளர்களைப் பதிவு செய்வதற்கான புதிய மென்பொருளை உருவாக்கும் பணி 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் எதிர்கால செயற்பாடுகள் 2024 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன்படி, அனைத்து மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களிலும் இந்த புதிய மென்பொருளை நிறுவும் பணி 2024 டிசெம்பர் மாதத்திற்குள் நிறைவடைந்தது. இதன் மூலம், ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் பணியாளர்களைப் பதிவு செய்வதை மிகவும் வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேபோன்று, தொழில்வழங்குநரின் பதிவை மேம்படுத்துவதற்கும் நிறுவனத்தின் பதிவேட்டை நெறிப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் இனங்காணப்பட்டுள்ளன. இதன்படி, தொழில் அலுவலகங்களால் மாதத்திற்கு குறைந்தது நான்கு குழும பரிசோதனைகளை நடத்துவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட ஊடகப் பயன்பாடு மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் போன்ற ஏனைய அரச மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களின் தரவு முறைமைகளில் கிடைக்கும் நிறுவனங்கள் பற்றிய தகவல்களைப் பயன்படுத்தி களப் பரிசோதனைகளை ஊக்குவித்தல் போன்ற அத்தகைய ஏனைய செயல்பாடுகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்களை செலுத்தும் முறைமையை இலகுபடுத்துவதற்காக, ஊழியர் சேமலாப நிதிய அனுகூல விண்ணப்பப் படிவங்களில் தேவையான திருத்தங்கள், தரவு முறைமைகளில் திருத்தங்கள் போன்றவை இனங்காணப்பட்டு உரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.


### 2.6.2 கைத்தொழில் உறவு

- **நியதிச்சட்ட உரிமைகளை மீறுவது தொடர்பான முறைப்பாடுகளுக்கு நிவாரணம் மற்றும் கைத்தொழில் பிணக்குகளைத் தீர்ப்பது**


திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட மற்றும் உப அலுவலகங்களுக்கு பணியாளர்கள் அல்லது தொழிற்சங்கங்கள் செய்த அரசியலமைப்பு உரிமைகளை மீறுவது மற்றும் தொழில்துறை கோரிக்கைகள் குறித்த

முறைப்பாடுகளைக் கையாள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதேபோன்று, முறைப்பாட்டுவிசாரணையில் திருப்தி அடையாத ஒரு நபரால் அல்லது மேற்கொள்ளப்பட்ட நிறுவனரதியான விசாரணையில் திருப்தி அடையாத ஒருவரால் முறையான விசாரணை நடத்தப்படுதல் வேண்டும் என்று தொழிலாளர் ஆணையாளர் அதிபதிக்கு செய்யப்பட்ட கோரிக்கைகள் தேவைக்கேற்ப மீண்டும் விசாரிக்கப்பட்டன.

**வரைபடம் 2.2-** 2020 முதல் 2024.10.31 வரை நியதிச்சட்ட உரிமைகள் மீறல் தொடர்பான முறைப்பாடுகளை பெறுதலும், தீர்வுகளும்




**வரைபடம் 2.3-** 2020 முதல் 2024.10.31 வரை கைத்தொழில் பிணக்குகள் தொடர்பான முறைப்பாடுகளை பெறுதலும், தீர்த்தலும்




2022 மார்ச் முதல், தொழில் திணைக்களத்திடம் முறைப்பாடு செய்ய விரும்பும் தனியார் அல்லது பகுதியளவிலான அரச துறை பணியாளர், தனது பணி தொடர்பான எந்தவொரு பிரச்சினையையும் https://cms.labourdept.gov.lk என்ற இ-சேவை வழியாக இணைய முறைமையில் தொழில் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கும் வசதி வழங்கப்படுகின்றது. இதன்படி, இந்த முறைப்பாடு முகாமைத்துவ முறைமை

(CMS) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தொகுதி (OSH தொகுதி) மற்றும் சட்ட தொகுதியை உள்ளடக்கியுள்ளதுடன், தொடர்புடைய மென்பொருள் விருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேபோன்று, தொழில் திணைக்களத்தினால் பெறப்படும் முறைப்பாடுகள் மற்றும் மனுக்களைத் தீர்க்கும் பணியை நிலையானதொரு நடைமுறையைப் பின்பற்றுவதன் மூலம் மிகவும் வினைத்திறனுடனும், உகந்ததாகவும் மேற்கொள்ள முடியும். இதன்படி, தொழில் திணைக்களத்தினால் பெறப்படும் முறைப்பாடுகள் மற்றும் மனுக்களைத் தீர்ப்பதற்கான நிலையானதொரு நடைமுறை மற்றும் தொடர் வழிமுறைகள் வழிகாட்டியொன்றாகத் தயாரிக்கப்பட்டு, அந்த நடைமுறைகள் 2021 நவம்பர் முதல் உரிய அலுவலகங்கள் மற்றும் திணைக்களங்களால் பயன்படுத்தப்படுகின்றன. தொழில் தொடர்பான முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகளைக் கையாள்வதற்கான விரிவானதொரு வழிகாட்டியைத் தயாரிப்பதற்கான அடிப்படை படிகள் 2024 ஆம் ஆண்டில் சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- **கூட்டு ஒப்பந்தங்களுக்கு தொழில்தருநர்களையும், பணியாளர்களையும் ஊக்குவித்தல்**

கூட்டு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதன் மூலம், தொழில் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளால் வழங்கப்பட்ட உரிமைகளை விட அதிகமான சிறப்புரிமைகளுக்கு பணியாளர்கள் உரித்துடையவர் களாக காணப்படுகின்றனர், அதேபோன்று பணியாளர் களிடமிருந்து மிகவும் பயனுள்ள சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக தொழில் வழங்குநர் தரப்பினர்கள் பொருத்தமான நிபந்தனைகளை எட்டமுடிகின்றது.

சமூகக் கலந்துரையாடல், தொழில் வழங்குநர்களையும் பணியாளர்களையும் அத்தகைய கூட்டு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதற்கு ஊக்குவிக்கின்றது. 2024.01.01 முதல் 2024.12.31 வரையான காலப்பகுதியில் 14 கூட்டு ஒப்பந்தங்களையும் உள்ளடக்கி, 2024.12.31 ஆம் திகதி வரை நடைமுறையிலுள்ள கூட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 225 ஆகும்.

- **நடுத்தீர்ப்புச் செயற்பாடுகைகளை நடத்துதல்**

வலய அலுவலகங்களாலோ அல்லது தலைமை அலுவலகத்தின் தொழில் உறவுகள் பிரிவாலோ தீர்க்க முடியாத தொழில் பிணக்குகள் கட்டாய நடுத்தீர்ப்புக்கு அல்லது கைத்தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும். 2024.01.01 முதல் 2024.12.31 வரையான காலத்தில், 2024 ஆம் ஆண்டில் நடுத்தீர்ப்புக்கு அனுப்பப்பட்ட 81 பிணக்குகள் உட்பட 219 பிணக்குகள் 2024 ஆம் ஆண்டில் தீர்க்கப்படவேண்டியிருந்தன. அவற்றுள், 2024 ஆம் ஆண்டில் 111 பிணக்குகள் மீதான விசாரணைகள் நிறைவுசெய்யப்பட்டு, 70 மானியங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், 41 மானியங்கள் எதிர்காலத்தில் வழங்கப்படும். இதன்படி, 2024.12.31 இலுள்ளவாறு, 108 நிலுவையிலுள்ள பிணக்குகள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **தொழிற்சங்கங்களின் பதிவு**

தொழிற்சங்க கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு தொழிற் சங்கத்தையும் தொழில் திணைக்களத்தின் தொழிற் சங்கங்களின் பதிவாளரிடம் பதிவு செய்வது கட்டாயமாகும். இதன்படி, 2024.01.01 முதல் 2024.12.31 வரை, திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்கள் / சம்மேளங்களின் எண்ணிக்கை 123 ஆகும். 2024.12.31 ஆம் திகதி செல்லுபடியாகும் தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 2141ஆகும். 2024 ஆம் ஆண்டில், 100 தொழிற்சங்கங்கள் இல்லாது செய்யப்பட்டுள்ளன.

- **வேலை நிறுத்தங்களை தீர்ப்பதற்கான தலையீடுகள்**

தொழிற்றுறைப் பிணக்கு பணிப் பகிஷ்கரிப்பு செயற்பாட்டிற்கு வழிவகுக்கக்கூடிய நிலைமை யொன்று காணப்பட்டால், திணைக்களங்கள் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதுடன், பணிப் பகிஷ்கரிப்பு இடம்பெற்றால், அதனைத் தீர்ப்பதற்குத் தேவையான தலையீடுகள் மேற்கொள்ளப்படும். 2024.01.01 முதல் 2024.12.31 வரை அறிவிக்கப்பட்ட பணிப் பகிஷ்கரிப்புகளின் விபரங்கள் பின்வருமாறு:

அட்டவணை **2.4-** வேலைநிறுத்தம் பற்றிய அறிக்கையிடப்பட்ட தரவு – 2024.01.01. முதல் 2024.12. 31 வரை

| துறை | பதிவு செய்யப்பட்ட வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்கேற்ற பணியாளர்களின் எண்ணிக்கை | இழந்த உழைப்பு நாட்களின் |
|---|---|---|---|
| பெருந்தோட்டங்கள் | 04 | 1199 | 5879 |
| நிருமாணம் | - | - | - |
| உற்பத்தி | 06 | 4795 | 22,550 |
| சுரங்கம் மற்றும் கல்லகழ்வு | - | - | - |
| தங்குமிடம் மற்றும் உணவு விநியோகம் | - | - | - |
| பகுதியளவிலான அரசாங்கம் | - | - | - |
| ஏனைய சேவைகள் | - | - | - |
| **மொத்தம்** | **10** | **5994** | **28,429** |

- **தொழில்வழங்குநர் மற்றும் பணியாளர் ஆகிய இரு தரப்பினர்களுக்கிடையே உரையாடலைப் பேணுதல்**

இத்திணைக்களம், தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறை நிறுவனங்களின் பணியாளர்களுக்கும் தொழில் வழங்குனர்களுக்கும் இடையில் தொழிற்றுறை அமைதியை ஊக்குவிக்கின்ற வேலைச் சூழலொன்றை உருவாக்கும் நோக்கில் இத்துறைகளில் தொழில் சட்டங்கள் தொடர்பாக தொழில் வழங்குனர்களுக்கும் பணியாளர்களுக்கும் அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்திருக்கின்றது.

அட்டவணை **2.5** – 2023.01.01 இலிருந்து 2023.12.31 வரை சமூக கலந்துரையாடல் மற்றும் வேலைத்தல கூட்டுறவு ஊக்குவிப்புப் பிரிவினால் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்கள்

| நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை / பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **சமூக கலந்துரையாடலை ஊக்குவித்தல்** | சமூக கலந்துரையாடல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | 155 | 9544 |
| | சமூகத் தள நிகழ்ச்சித்திட்டங்கள் | 24 | 2140 |

மேற்கூறிய விழிப்புணர்வு திட்டங்களுக்கு மேலதிகமாக, நிறுவன மட்டத்தில் சமூக உரையாடல் மற்றும் பணியிட ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், தொடர்புடைய நிறுவனங்களுக்கு தொழில்துறை நல்லிணக்கத்திற்கான அதிசிறப்பு சான்றிதழ்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி, தொழில்துறை நல்லிணக்கத்திற்கான அதிசிறப்பு சான்றிதழ் வழங்கும் விழா 2024.11.06 ஆம் திகதி தொழில் செயலகத்தின் 10 ஆவது தளத்தில் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

தொழில்வழங்குநர்கள் பணியாளர்கள் சட்டங்களுடன் சுயமாக இணங்குவது நிலையான தொழில்வழங்குநர்கள்-பணியாளர் உறவுக்கு வழிவகுக்கின்றது, இது தொழில்வழங்குநர்களுக்கு பல பொருளாதார நன்மைகளை வழங்குகின்றது. எனவே, தொழில் திணைக்களம் எல்லா நேரங்களிலும் தொழில் சட்டங்களுடன் தொழில்வழங்குநர்கள் சுயமாக இணங்குவதை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதன்படி, தொழில் சட்டங்களுடன் தொழில்வழங்குநர்கள் சுயமாக இணங்குவதை ஊக்குவிப்பதற்கு சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில்நுட்ப உதவியைப் பெறுவதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன், அதன் எதிர்கால செயற்பாடுகள் 2025 ஆம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

### 2.6.3 கள சோதனைகளை நடத்துதல்

தொழில் வழங்குநர்களால் பணியாளர்கள் பணிக்கமர்த்தப்படுகின்றனவா என்பதை மதிப்பிடுவதற்கு 2024.01.01 இலிருந்து 2024.12.31 வரை நடத்தப்பட்ட பரிசோதனைகளின் விபரங்கள் முறையாக பின்பற்றப்பட்டுள்ளன.

**வரையுரு-பரிசோதனைகளின் செயலாற்றுகை - 2024.01.01 இலிருந்து 2024.12.31 வரையான முன்னேற்றம்**

**மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களின் தொழில் அலுவலர்களால் நடத்தப்படும் தொழில் பரிசோதனைகளின் எண்ணிக்கை** (2024.01.01முதல் 2024.10.31வரை )= 71,685

**இரவு வேலைகளில் பெண்களை வேலைக்கு அமர்த்துவது தொடர்பான பரிசோதனைகளின் எண்ணிக்கை** = 55

**மொத்தம்** =75,176

சிறுவர் தொழில் பற்றி பெறப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக நடத்தப்பட்ட பரிசோதனைகளின் எண்ணிக்கை=101

மீன்பிடித்தொழிலில் அபாயகரமான சிறுவர் தொழில் மற்றும் சிறுவர் தொழில் பற்றிய விசேட குழு பரிசோதனைகளின் எண்ணிக்கை=47

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார பரிசோதனைகளின் எண்ணிக்கை =3288

இதேபோன்று, தொழில் பரிசோதனைத் தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு தொழில் அலுவலர்களால் பயன்படுத்தப்பட்ட தொழில் பரிசோதனை அறிக்கை மேலதிக தகவல்களை வழங்குவதற்காக மீளாயப்பட்டு 2024 நவம்பர் முதல் பயன்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்தது.


தொழில் அலுவலகங்களின் நியாயாதிக்கத்திற்குள் (குறிப்பாக நகர எல்லைக்குள்) அமைந்துள்ள நிறுவனங்களை மிகவும் முறையாகவும் வினைத்திறனுடனும் ஆய்வு செய்வதற்காக, ஒரு மாவட்ட தொழிலாளர் அலுவலகம் மாதத்திற்கு 04 குழு பரிசோதனைகளையும் உப தொழில் அலுவலகங்கள் மாதத்திற்கு 02 குழு பரிசோதனைகளையும் நடத்தும் முறைமையொன்று ஆரம்பிக்கப்பட்டது.

தற்போதைய சமூக-பொருளாதார சூழலுக்கு ஏற்றவாறு தொழில் பரிசோதனை முறையை நெறிப்படுத்த தொழில்நுட்ப உதவியைப் பெறுவதற்கு சர்வதேச தொழில் தாபனத்தின் பிரதிநிதிகளுடனான ஆரம்ப கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டிருந்தன. இதன்படி, 2025 ஆம் ஆண்டுக்குள் தொழில் பரிசோதனைகளுக்கான ஒரு விரிவான கட்டுக்கோப்பு செயற்பாட்டில் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2.6.4 பணியாளர்களின் வேலைவாய்ப்பு உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டப் பாதுகாப்பு

இத்திணைக்களம், பணியாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பல சட்டங்களைச் செயல்படுத்துகின்றது. இதன்படி, இந்தச் சட்டங்களை மீறும் தொழில்தருநர்களுக்கு எதிராக தொழில் திணைக்களம் நீதித்துறை நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதன் மூலம் பணியாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்றது. இதன்படி, 2024.01.01 முதல் 2024.12.31 வரை திணைக்களத்தால் நடத்தப்பட்ட நீதித்துறை நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றம் பின்வருமாறு.

**வரைபடம்** 2.4 **-**2024.01.01 முதல் 2024.12.31 வரை நீதவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட மற்றும் மூடப்பட்ட வழக்குகள்




**அட்டவணை 2.6 -**சட்டப் பிரிவின் நேரடித் தலையீட்டின் கீழ் நடத்தப்பட்ட நீதித்துறை நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள்

| **நீதிமன்றம்** | 2024 ஆம் ஆண்டுக்கு முன் கொணரப் பட்ட மீதி | 01.01.2024 - 31.012.2024 காலப்பகுதியில் குறித்தொதுக்கப்பட்ட வழக்குகளின் | 2024.12.31 இல் நிறைவுசெய்யப்பட்ட வழக்குகள் | 2024.12. 31இல் காணப்படுகின்ற மேன் முறையீட்டு வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மேல் நீதிமன்றம் | 133 | 19 | 9 | 143 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 425 | 66 | 51 | 440 |
| உயர் நீதிமன்றம் | 107 | 23 | 26 | 104 |
| வர்த்தக உயர் நீதிமன்றங்கள் | 224 | 11 | 9 | 226 |

**அட்டவணை 2.7-** தொழில் துறை தொடர்பான சட்டங்களை திருத்துதல் மற்றும் புதிய சட்டங்களை அறிமுகம் செய்வதில் முன்னேற்றம்

| **சட்டத்தின் பெயர்** | **திருத்துவதன் நோக்கம்** |
|---|---|
| 2024 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலக பணியாளர் (தொழில் மற்றும் ஊதியத்தை ஒழுங்கமைத்தல்) (திருத்தம்) | தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட வர்த்தக மற்றும் அறிவுச் செயன்முறைகளுக்கான வெளிவள நிறுவனங்களில் இரவு நேரத்தில் பெண் பணியாளர்களுக்கு தொழில் வழங்குகுவதற்காக 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை மற்றும் அலுவலகப் பணியாளர் சட்டத்தைத் திருத்துதல் |

| | |
|---|---|
| 2024 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச | 2024.09.11 ஆம் திகதியிலிருந்து பணியாளர்களின் மாதாந்த குறைந்தபட்ச சம்பளத்தை 12,500.00 ரூபாவிலிருந்து 17,500.00 ரூபாவாகவும், நாட் சம்பளத்தை 12,500.00 ரூபாவிலிருந்து 17,500.00 ரூபாவாகவும், அதிகரித்தல் |

### 2.6.5 தொழில் நியமங்களைப் பாதுகாத்தலும் ஊக்குவித்தலும்

தனியார் துறை பணியாளர்களின் வேதனங்களையும் மற்றும் பணி தொழில் நிபந்தனைகளை புதுப்பித்தல் மற்றும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது திணைக்களத்தின் முன்னுரிமையாகும். இதன்படி, 2024.01.01 முதல் 202412.31 வரை அந்தப் விடயப்பரப்புடன் தொடர்பான பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**அட்டவணை 2.8-** சம்பளச் சபைகளினால் குறைந்தபட்ச சம்பளங்களை இற்றைப்படுத்தல்

| சம்பளச் சபை | குறைந்தபட்ச சம்பளங்களை இற்றைப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|
| 1. தேயிலை பெருந்தோட்டம் மற்றும் உற்பத்தித் தொழில் | நேரத்தின் அடிப்படையிலான வேலைக்கு வழங்கப்பட வேண்டிய குறைந்தபட்ச நாட் சம்பளம் 1350.00 ரூபா என்பதுடன் , தரமான அளவை விட அதிகமாக (கிலோ விலைக்கு மேல்) அறுவடை செய்யப்படும் ஒவ்வொரு 01 கிலோ தேயிலைக்குமான தினசரி கொடுப்பனவு 50.00 ரூபா (இந்த தீர்மானம் 2024.09.10 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும்) |
| 2. இறப்பர் பெருந் தோட்டம் மற்றும் மொத்த இறப்பர் பதப்படுத்தும் தொழில் | நேர அடிப்படையிலாவேலைக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச நாட்கூலி 1350.00 ரூபா என்பதுடன், நிலையான தொகையை விட அதிகமாக (கிலோவுக்கு மேற்பட்ட வீதத்தில்) கொண்டு வரப்படும் ஒவ்வொரு 01 கிலோ மரப்பாலுக்கும் நாட் கொடுப்பனவு 50.00 ரூவாவாகும் (இந்த தீர்மானம் 2024.09.10 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும்) |

**அட்டவணை 2.9-** நாள் வேலை வாரத்திற்கு அங்கீகாரம் வழங்குதல்

| **2024.01.01 முதல் 2024.12.31 வரை** | | | **2024.12.31 இல் மீளாய்வின் கீழுள்ளவற்றின்** |
|---|---|---|---|
| **பெறப்பட்ட கோரல்களின் எண்ணிக்கை** | **வழங்கப்பட்ட அனுமதிகளின் எண்ணிக்கை** | **நிராகரிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை** | |
| 339 | 320 | (08) | 11 |

**அட்டவணை 2.10-** கூட்டு உடன்படிக்கைகளின் சட்ட செல்லுபடித்தன்மையை பரீட்சித்தல்

| **2024.01.01 முதல் 2024.12.31 வரை** | | | **2024.12.31 இல் மீளாய்வின் கீழுள்ளவற்றின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| **பெறப்பட்ட கோரல்களின் எண்ணிக்கை** | **வழங்கப்பட்ட அனுமதிகளின் எண்ணிக்கை** | **நிராகரிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை** | |
| 39 | 21 | - | 18 |

அட்டவணை 2.11 -சம்பள சபைக் கட்டளைச்சட்டம் மற்றும் கடை, அலுவலக பணியாளர் சட்டத்தின் கீழ் வேதனக் கழிவுகளுக்கான கோரிக்கைகளுக்கு அங்கீகாரம் அளித்தல்

| 2024.01.01 இலுள்ளவாறு நிலுவை | 2024.01.01 முதல் 2024.12.31 வரை | | | 2024.12.31 இலுள்ளவாறு நிலுவை |
|---|---|---|---|---|
| | பெறப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட அனுமதிகளின் எண்ணிக்கை | நிராகரிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை | |
| 119 | 262 | 124 | (128) | 129 (பூர்தியடையாத ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ள இந்த 129 நிறுவனங்கள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளன) |

அட்டவணை 2.12 -சட்டங்கள் மற்றும் கட்டளைச்சட்டங்கள் தொடர்பாக தொழில்வழங்குநர்கள் மற்றும் பணியாளர்களால் செய்யப்படும் விசாரணைகளுக்கு விளக்கங்கள் மற்றும் பொருள்கோடல்களை வழங்குதல்

| 2024.01.01 முதல் 2024.12.31 வரை | | 2024.12.31 இலுள்ளவாறு பதில்கள் தயாரிக்கப்பட்டுகொண்டு நலுவையிலுள்ளவை |
|---|---|---|
| பெறப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | பதிலளிக்கப்படாதவை | |
| 70 | 69 | 01 |

## 2.6.6 தொழில்புரிகின்ற பெண்கள் மற்றும் இளைஞர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல்

தொழில் திணைக்களம், தொழில் புரிகின்ற பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தொழில் சட்டங்களை செயல்படுத்தவும், அத்தகைய சட்டங்களை உரிய நேரத்தில் மதிப்பாய்வு செய்து தேவையான திருத்தங்களை பரிந்துரைப்பதன் மூலம் நாட்டிற்கு பயனுள்ள பெண் பணியாளர்களின் பங்களிப்பை வழங்கவும், இலங்கையில் இருந்து சிறுவர் தொழிலை இல்லாதொழிக்கவும் உறுதிபூண்டுள்ளது.

இதன்படி, 2024.01.01 இலிருந்து 2024.12.31 வரை பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

அட்டவணை 2.13 - சிறுவர் தொழில் பற்றி பெறப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை நடத்துதல்

| 2024.012.01 இலுள்ளவாறு நிலுவை | 2024.01.01 இலிருந்து 2024.12.31 வரை | | 2024.12. 31 இலுள்ளவாறு நிலுவை |
|---|---|---|---|
| | பெற்றப்பட்ட முறைப்பாடுகள் | தீர்க்கப்பட்ட முறைப்பாடுகள் | |
| 13 | 100 | 101 இவற்றில் 02 முறைப்பாடுகள் சிறுவர் தொழில் பற்றிய முறைப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்டதுடன், இது தொடர்பில் தேவையான மேலதிக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன) | 12 |

அட்டவணை 2.14 - இரவு நேரங்களில் பெண்களை வேலைக்கு அமர்த்துவது தொடர்பான வேலை நிபந்தனை மீறல் தொடர்பாக பெறப்பட்ட முறைப்பாடுகள் மீதான விசாரணைகள்

| 2024.012.01 இலுள்ளவாறு நிலுவை | 2024.01.01இலிருந்து 2024.12.31 வரை | | 2024.12. 31 இலுள்ளவாறு நிலுவை |
|---|---|---|---|
| | பெற்றப்பட்ட முறைப்பாடுகள் | தீர்க்கப்பட்ட முறைப்பாடுகள் | |
| 02 | **07** | **09** | **-** |

- இரவு வேலைகளில் பெண்களை ஈடுபடுத்துவதற்கு அங்கீகாரம் அளித்தல்
    - வழங்கப்பட்ட அங்கீகாரம் – 751

- **2024.01.01 இலிருந்து 2024.12.31 வரை இலங்கையில் சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்கள்**

**(அ) சமூக பொலிஸ் குழுக்களுடன் ஒருங்கிணைந்து சிறுவர் தொழில் முறைமையை இல்லாதொழித்தல்**

இலங்கை பொலிஸ் துறையின் சமூக பொலிஸ் குழுக்களூடாக சிறுவர் தொழிலைஇல்லாதொழித்தல் மற்றும் குடிமைப் பொறுப்பு பற்றிய செய்தியை அடிமட்ட மக்களுக்கு எடுத்துச் செல்வது மிகவும் நடைமுறைச் சாத்தியமானதென்று இனங்காணப்பட்டது. இதன்படி, இந்த தேசிய பொறுப்பில் 2024 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தை உள்ளடக்கியும், 2025 ஆம் ஆண்டில் நாடளாவியரீதியில் துழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப கட்டமாக, கொழும்பு மாவட்டத்தில் சமூக பொலிஸ் பிரிவுகளுக்குப் பொறுப்பான அலுவலகப் பொறுப்பதிகாரிகளுக்கும், அதன் கீழ் இயங்குகின்ற சமூக பொலிஸ் அலகுகளின் அலுவலகப் பொறுப்பதிகாரிகளுக்கும் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி அமர்வுகள் நடத்தப்பட்டிருந்தன. தொழில் திணைக்களத்தின் தொழில் ஆணையாளர்கள் அவர்களுக்கு தெரியப்படுத்துவதன் மூலம், இலங்கை பொலிஸ் துறையின் சமூகப் பொலிஸ் குழுக்களை இணைப்பதற்கும், 2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் தொழிலை இலங்கையிலிருந்து முற்றாக இல்லா தொழிக்கின்ற செய்தியை அடிமட்டத்திற்கு எடுத்துச்செல்ல முடியும்.

இரண்டாவது கட்டத்தில், தொழில் திணைக்களத்தின் உரிய அலுவலர்கள் கொழும்பிலுள்ள ஒவ்வொருபொலிஸ் நிலையத்துடனும் தொடர்புபட்ட 52 சமூக பொலிஸ் ஆலோசனைக் குழுக்களுடனும் தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன், பொலிஸ் நிலைய மட்டத்தில் அனைத்து ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கும் அறிவூட்டுவதற்கு நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்தன.

2024.12.10 ஆம் திகதி நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் மூலம் இந்தத் திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மூன்றாம் கட்டமாக, 2025 ஆம் ஆண்டில் நாடளாவியரீதியில் இந்தப் பொறுப்பை செயல்படுத்து வதற்கான செயல்முறையை விளக்கும் விசேட நிகழ்ச்சித்திட்டம் 2024.12.18 ஆம் திகதி நடைபெற்றது. இலங்கை பொலிஸ் துறையின் சமூக பொலிஸ் பிரிவின் சிரேஸ்ட பிரதி பரிசோசதகர் நாயகம், சமூக பொலிஸ் மற்றும் சமூகப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபதி, நாட்டின் அனைத்து பொலிஸ் பிரிவுகளிலுமுள்ள சமூக பொலிஸ் குழுக்களின் பொறுப்பான அனைத்து நிலையப் பொறுப்பதிரிகள் மற்றும் தொழில் திணைக்களத்தின் அனைத்து வலய உப தொழில் ஆணையாளர்கள், மாவட்ட உதவி தொழில் ஆணையாளர்கள் மற்றும் சிரேஸ்ட தொழில் அலுவலர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.




**படம் 2.1 -** இலங்கையில் சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கு சமூக பொலிஸ் குழுக்களுடன் இணைந்து நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்

(ஆ) முறைசார் துறைகளில் சிறுவர் தொழிலாளர்களைப் பயன்படுத்தக்கூடாது என்ற உறுதிமொழிகளைப் பெறுதல்

தொழில் திணைக்களம், ஒவ்வொரு ஆண்டும் யூன் 12 ஆம் திகதி வருகின்ற 'சிறுவர் தொழில்களுக்கு எதிரான உலக தினம்' என்பதுடன் இணைந்து 2024.06.18 ஆம் திகதி ஞாபகார்த்த நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. அந்த நேரத்தில், முறைசார் துறை நிறுவனங்களின் தொழில் தருநர்களிடமிருந்து, குறிப்பாக கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் தொழிற் பேட்டைகளில் தாபிக்கப்பட்ட தமது நிறுவனங்களில் சிறுவர் தொழிலாளர்களைப் பயன்படுத்தாது என்ற உறுதிமொழிகளைப் பெறுவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கு இணையாக, திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளம் வழியாக QR குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டதுடன், அவர்கள் சிறுவர் தொழிலாளர்களைப் பயன்படுத்த மாட்டார்கள் என்று நாட்டின் அனைத்து நிறுவனங்களிடமிருந்தும் உறுதிமொழியைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இதேபோல், களப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் தொழில் அலுவலர்கள் ஏனைய எல்லா துறைகளிலும், முறைசாரா துறையை மையமாகக் கொண்டு, சிறுவர் தொழிலாளர்களைப் பயன்படுத்துதலாகாது என்று ஏனைய அனைத்து துறைகளிலும் தொழில் தருநர்களிடமிருந்து உறுதிமொழிகளைப் பெறுவதற்கு ஆரம்பித்திருந்தனர்.

**அட்டவணை 2.15.-** பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவினால் 2024.01.01 இலிருந்து 2024.12.31 வரை நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்கள்

| நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நடத்தப் பட்ட நிகழ்வு களின் எண்ணிக் கை | பங்குபற்றி யவர் களின்/ பயனாளிக ளின் எண்ணிக் கை |
|---|---|---|---|
| பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான தொழில் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழிலை இல்லா தொழித்தல் | பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான தொழில் சட்டங்கள் பற்றி தனியார் துறை பணியாளர்களுக்கான விழிப்புணர்வு திட்டங்கள் | 12 | 418 |
| | அபாயகரமான சிறுவர் தொழில் மற்றும் சிறுவர் தொழில் சட்டங்கள் மீதான விசேட குழு விசாரணைகளுக்கு இணையாக, மீன்பிடி சமூகத்தில் அபாயகரமான சிறுவர் தொழில் மற்றும் சிறுவர் தொழில் சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு | 47 | 2176 |
| | தேயிலை மற்றும் பெருந்தோட்டம், பயிர் துறை மற்றும் தொழில்துறை துறையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்வழங்குநர் களுக்கான அபாயகரமான சிறுவர் தொழில் மற்றும் சிறுவர் தொழில் சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு | 62 | 1532 |
| | சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல் மற்றும் கொழும்பு மாவட்டத்திலுள்ள சமூக பொலிஸ் பிரிவுகளுக்கு பொறுப்பான நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கான அடிமட்ட நிலைக்கு குடிமைப் பொறுப்பின் செய்தியை எடுத்துச் செல்வது அவற்றின் கீழ் செயல்படும் சமூக பொலிஸ் பிரிவுகளின் அலுவலகப் பொறுப்பதிகாரிகள், தொழில் திணைக்களத்தின் உரிய உப தொழில் ஆணையாளர்கள் மற்றும் உதவித் தொழில் ஆணையாளர்கள் பற்றிய விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 01 | 142 |
| | சமூக பொலிஸ் ஆலோசனைக் குழுக்களுடன் இணைந்து, அபாயகரமான சிறுவர் தொழில் மற்றும் சிறுவர் தொழில் சட்டங்கள் பற்றிய ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கு அறிவூட்டுவதில் தொழில் திணைக்கள அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர் | 14 | 587 |

### 2.6.7 பணியாளரின் தொழில்சார் பாதுகாப்புக்கு சீரிய வேலைச் சூழலை உறுதிப்படுத்தல்

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஏதேனும் உடல் காயம் அல்லது விபத்து ஏற்படுவதைக் குறைப்பது திணைக்களத்தின் பொறுப்பாகும். இலங்கையிலுள்ள தொழிற்சாலை களிலுள்ள தொழிலாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரி 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தால் நிருவகிக்கப்படுகின்றது.

திணைக்களமானது, பாதுகாப்பான பணிச்சூழலை உறுதிப்படுத்துவதற்காக, முக்கியமாக 2024 01.01 முதல் 2024.12.31 வரை பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.




**2024.01.01 முதல் 2024.12.31 வரை தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் புதிய ஒழுங்குவிதிகளின் கீழ் 2221 தொழிற்சாலைகளின் பதியப்பட்டிருந்தன. இதன்படி, தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் புதிய ஒழுங்குவிதிகளின் கீழ் 2024.12.31 இலுள்ளவாறு பதியப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 6614 ஆகும்.**

**2024.01.01 முதல் 2024.12.31 வரை பரிசோதிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட கட்டட வரைபடங்களின் எண்ணிக்கை 244 ஆகும்.**






**2024.01.01 முதல் 2024.12.31 வரை மாவட்டதொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர்களால் பரிசோதிக்கப்பட்ட தொழிற்சாலைகள் 2578 ஆகும்.**

2024.01.01 முதல் 2024.12.31 வரை அறிக்கையிடப்பட்ட மற்றும் விசாரிக்கப்பட்ட மரணத்தை ஏற்படுத்தும் விபத்துக்களின் எண்ணிக்கை 47 என்பதுடன் அறிக்கையிடப்பட்ட மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்களின் எண்ணிக்கை1606 ஆகும்.





**2024.01.01 முதல் 2024.12.31 வரை அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களால் பரிசோதிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அதிக ஆபத்துள்ள இயந்திர பரிசோதனை அறிக்கைகள் 11,965 ஆகும்.**

**அட்டவணை 2.13 -** 2024.01.01 முதல் 2024.12.31 வரை கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவினால் நடத்தப்பட்ட பணியாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| நிகழ்ச்சித்திட்டங்கள் | நிகழ்ச்சித்திட்டங்களின் பெயர் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய வர்களின் / பயனாளி களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **தொழில்சார் பாதுகாப்பை ஊக்குவித்தல்** | தொழில்சார் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் (ஆடைகள், உற்பத்தி, தோட்டங்கள், கட்டுமானம் போன்ற அத்தகைய துறைகளை உள்ளடக்கியது) | 115 | 5288 |

- **பணியாளரின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு முறையான பாதுகாப்பு குழுக்களைத் தாபித்தல்**

இருதரப்பு பாதுகாப்பு குழுக்களை தாபித்ததன் பிரதான குறிக்கோள் தொழிற்சாலைகளில் தொழில்சார் பாதுகாப்பை உறுதி செய்வதன் மூலம் பாதுகாப்பான கலாசார மொற்றிற்கு வழி வகுத்தலாகும்

2024.01.01 முதல் 2024.12.31 வரையிலான காலகட்டத்தில் அனைத்து தொழில் துறைகளையும் உள்ளடக்கி 202 இருதரப்பு பாதுகாப்புக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. அதன்படி, 2024.12.31 இல் தாபிக்கப்பட்ட இருதரப்பு பாதுகாப்புக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை 877 ஆகும்.

- **தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி பயிற்சி தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்குப் பயன்படுத்துவதற்கான பயிற்சி தொகுதிகளை விருத்திசெய்தல்**

கட்டுமானத் துறையில் தொழில்சார் பாதுகாப்பு, மின் பாதுகாப்பு, இயந்திரப் பாதுகாப்பு மற்றும் இரசாயனப் பாதுகாப்பு ஆகிய 04 பகுதிகள் குறித்து தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்காக தனியான பயிற்சி தொகுதி வரைவுகள் தயாரிக்கப்பட்டன. அதன் மேலதிக வேலைகள் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.6.8 பணியாளரின் தொழில்சார் சுகாதாரத்தை உறுதிசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

வேலைத்தளங்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, வேலைத்தளத்தில் உடல்நலப் பிரச்சினைகள் அல்லது விபத்துகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்பதை அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்வதும், அத்தகைய விபத்துகளைத் தடுப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுவதற்கும் திணைக்களம் நடவடிக்கை எடுக்கின்றது. இதன்படி, பின்வரும் செயற்பாடுகள் 2024.01.01 முதல் 2024.12.31 வரை பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- **2024.01.01 முதல் 2024.12.31 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்**
  - சூழல் அளவீடுகளின் எண்ணிக்கை = 233
  - பௌதீக பரிசோதனைகளின் = 236
  - தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆய்வு களின் எண்ணிக்கை = 241

**அட்டவணை 2.17 –** தலையீடுகள் மூலம் தீர்க்கப்பட்ட பிரச்சினையான சூழ்நிலைகள் பற்றிய தகவல்கள்

| தலையீட்டினூடாக தமது பிரச்சினையான நிலைமைகளைத் தீர்த்துக்கொண்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை | செயற்பாட்டின் பெறுபேறு |
|---|---|
| 08 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளுக்கு பிரதானமாக 08 நிறுவனங்களில் தீர்வு காண்பதற்குத் தேவையான தலையீடுகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 1752 பணியாளர்களின் தொழில் பாதுகாப்பும், சுகாதாரமும் பாதுகாக்கப்பட்டது. |

**அட்டவணை 2.18-** 2024.01.01. முதல் 2024.12.31 வரை தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பிரிவினால் நடத்தப்பட்ட பணியாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் விபரங்கள்.

| நிகழ்ச்சித்திட்டங்கள் | நிகழ்ச்சித்திட்டங்களின் பெயர் | நடத்தப் பட்ட நிகழ்ச்சித் திட்டங் களின் எண்ணிக்கை | பங்குபற்றிய வர்களின் / பயனாளி களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தொழில்சார் சுகாதாரத்தை மேம்படுத்துதல் | தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கமைத்து, நடத்தப்பட்டது | 92 | 1101 |
| | தளப் பரிசோதனைகளைத் தொடர்ந்து தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்காக நடத்தப்பட்ட களப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 173 | 2832 |

மேலும், மேல்மாகாணத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் பணிச்சூழலை (இரைச்சல், ஒளி, வெப்பம், காற்றோட்டம் போன்றவை) தரப்படுத்துவதற்கான திட்டம் 2024 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி, இக்கருத்திட்டம், மேல் மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் பின்வரும் தொழில்துறைப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

- **கொழும்பு மாவட்டம்** - தொழில்துறை அபிவிருத்திச் சபையின் பனகுவா  தொழில்பேட்டை மற்றும் பனகோடாரெம்பில்பேர்க் தொழில்பேட்டை
- **கம்பாஹா மாவட்டம்** - தொழில்துறை மேம்பாட்டுக் வாரியத்தின் எகலா தொழில்துறை எஸ்டேட்
- **களுத்துறை மாவட்டம்** - நாகோட புல்லர்டன் தொழில்பேட்டை, ஹோரணை வவுலகல தொழில்பேட்டை மற்றும் ஹோரணை அரமனகொல தொழில்பேட்டை

இந்த கருத்திட்டத்தின் ஆரம்ப ஆய்வுகள், தொழிற்சாலைகள், உற்பத்தி, மூலப்பொருட்கள், வேலை நேரம், பணியாளர் நல வசதிகள் மற்றும் சுற்றுச்சூழல் நிலைமைகள் (ஒளி நிலை, இரைச்சல் நிலை, வெப்ப சிதறல் ஈரமான விளக்கை பூகோள வெப்பநிலை - WBGT போன்றவை) மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்களை சேகரித்திருந்தன. அதேபோன்று, சுற்றாடல் நிலைமைகள் பற்றி எடுக்கப்பட்ட அளவீடுகளின்படி, தரநியமங்களிலிருந்து மாறுபடுவதான இனங்காணப்பட்ட சந்தர்ப்பங்களால் எவ்வாறு வேலைச் சூழலைச் செம்மைப்படுத்துவது என்பது பற்றிதொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக் அறிவிக்கப்பட்டு, பரிந்துரைகள் மேற்கொள்ளப் பட்டப்பட்டிருந்தன.

## 2.6.9 தொழில் திணைக்களத்தின் இணையத்தளமும் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ சமூ ஊடகச் செயற்பாடுகள்




I. தொழில் திணைக்களத்தின் புதிய உத்தியோகபூர்வ வலைத்தளம் (www.labourdept.gov.lk) 2024.06.18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. விண்ணப்பப் படிவங்கள், மாதிரி படிவங்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் தொழிலாளர் சட்டங்கள் மற்றும் கட்டளைகள் மற்றும் தொழில்தருநர்கள் பின்பற்ற வேண்டிய சம்பளச் சபை தீர்மானங்கள் உள்ளடங்கலாக வாடிக்கையாளர்களுக்குத் தேவையான ஆவணங்களை இந்த இணையதளத்தில் பதிவிறக்கம் செய்ய முடியும் என்பதுடன், தகவல்கள் வழக்கமான அடிப்படையில் இற்றைப்படுத்தப்படும். இதேபோன்று, திணைக்களத்தின் இ-சேவை வசதி இங்கே ஒருங்கிணைக்கப்பட்டு உருவாக்கப்பட்டு வருகின்றது.

II. பொது மக்களுக்கு இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்கு உத்தியோகபூர்வ யூரியூப், முகநூல் பக்கம் மற்றும் ரூவீட்டர் கணக்கு போன்றவற்றை திணைக்களம் பேணுகின்றது.

| | |
|---|---|
| யூரியூப் அலைவரிசை | சந்தாதாரர்: 1.87K<br>உள்ளடக்கப்பட்ட வீடியோக்களின் எண்.: 130 |
| முகநூல் பக்கம் | பின்தொடர்பவர்கள்: 1.5K |
| ரூவீட்டர் | பின்தொடர்பவர்கள் : 105 |

## 2.6.10 தகவல் பரப்புகைச் செயற்பாடுகள்

- **தொழில் திணைக்களத்தின் நூலகம்**

தொழில் திணைக்களம், தொழில் துறைடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகள், புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் தொடர்பாக இலங்கையின் பிரதான நூலகத்தை பராமரித்து வருகின்றது. தொழில் திணைக்களம், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள ஏனைய நிறுவனங்களின் பணியாளர்களும், வெளி வாசகர்களும் தொழில் சட்டத் துறை தொடர்பான அனைத்து கட்டளைச் சட்டங்கள், புத்தகங்கள், வெளியீடுகள் போன்றவற்றைப் பார்வையிடுவதற்கு இது உதவும்.

நூலக வசதிகளை மேலும் விருத்தி செய்வதற்கு, நூலக தரவு முகாமைத்துவ முறைமையை (KOHA மென்பொருள்) தாபிப்பதனை 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்படுகின்றது..

- **வெளியீடுகள்**

**"கத்திகாவத்தை" சஞ்சிகை**

நிறுவனங்களில் தொழில் வழங்குனர்களுக்கும் பணியாளர்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான அறிவை வழங்குவதன் மூலம் பிணக்குகளைக் குறைப்பதில் பங்களிப்பதே "கத்திகாவத்தை" சஞ்சிகையின் நோக்கமாகும். இதன்படி, "கத்திகாவத்தை" சஞ்சிகையின் தொகுதி 23 , 2024 டிசெம்பர் மாதம் வெளியிடப்பட்டது.





- தொழில் திணைக்களத்தினால் வகிக்கப்பட்ட பங்கு தொடர்பான விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும், தொழில் சட்டத் துறை தொடர்பாக அலுவலர்களின் அறிவை அதிகரிக்கின்ற சுய கற்றல் தொகுதியொன்றை விருத்தி செய்வதற்கும் சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான சாட்போட்டைக் கொண்ட முறைமையொன்றை விருத்தி செய்வதற்கு கருத்திட்ட முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு 2025 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

- **தொழில் துறை தொடர்பான ஆய்வுகளும் கற்கைகளும்**

**பணிபுரிந்த மணித்தியாலங்கள் மற்றும் தொழில் செலவு பற்றிய கணக்கெடுப்பு**

இந்த கணக்கெடுப்பின் மூலம், நாட்டின் அபிவிருத்தி உத்திகளை வகுப்பதற்குத் தேவையான தொழில் செலவு, பணி புரிந்த மணித்தியாலங்கள் மற்றும் பொது வான வருவாய் ஆகியவற்றின் அடிப்படையில் தரவுகள் பெறப்படுகின்றன. இது, அரச மற்றும் தனியார் துறைகளில் முடிவெடுப்பதனையும், திட்டங்களை உருவாக்குவதனையும் இயலச்செய்து, தொழில் வழங்குநர்கள் மற்றும் பணியாளர்களின் முன்னேற்றத்திற்காக வடிவமைக்கப்பட்ட திட்டங்களுக்குத் தேவையான தகவல்களை வழங்கச் செய்கின்றது.


2023 ஆம் ஆண்டுக்காக ஆய்விலிருந்து பெறப்பட்ட வேலை நேரம் மற்றும் தொழில் செலவு பற்றிய தரவுகள் தொகுக்கப்பட்டுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டுக்கான உரிய தகவல்களைப் பெறப்பட்ட பெறுவதற்கு வினாக்கொத்து பதிவிடப்பட்டுள்ளது. தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டு 2023.09.30 ஆம் திகதிக்குள் அனுப்பப்பட்டிருந்தன.




- **தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறை வேலைவாய்ப்புக்கான வருடாந்த கணக்கெடுப்பு - 2022**

சராசரி வாராந்த வேலை நேரம், சராசரி மாதப் பெயரளவு வருமானம், சராசரி மாதாந்த மொத்த வருமானம், தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறை பணியார்களின் தொழில் செலவுகள், பாலினம் மற்றும் தொழிலின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட தகவல்களை அறிக்கை வெளியிடுகின்றது.

- **சிறுவர் தொழில் பற்றிய ஆய்வு 2024 - கொழும்பு மாவட்டம்**



2024 ஆம் ஆண்டு கொழும்பு மாவட்டத்தில் சிறுவர் தொழில் களைப் பற்றிய புரிதலைப் பெறுதல், சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுதல், சிறுவர் தொழில்களைக் கொண்ட குடும்பங்களின் சமூக-பொருளாதார நிலை குறித்த தரவுகளைச் சேகரித்தல் மற்றும் சிறுவர் தொழில் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சிறுவர் தொழில் முறையை இல்லாதொழிப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆய்வுசெய்தல்.

ஆய்வின் முடிவுகள், தரவுகளைச் சேகரித்த பின்னர் சிறுவர் தொழில்களை இல்லாதொழிப்பது பற்றி தேசிய வழிநடத்தல் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், "சிறுவர் தொழில் 2024 - கொழும்பு மாவட்டம் குறித்த ஆய்வு" தயாரிக்கப்பட்டு அச்சிடப்பட்டது.

- **இலங்கை முதலீடுகள் மற்றும் இறப்பர் தொழிற்சாலைகளின் கீழுள்ள தேயிலை தொழிற்சாலைகளில், தொழிற்சாலைகளில் மற்றும் இறப்பர் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு அறிவுறுத்தல்களின் இணக்கப்பாடு மீதான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பரிசோதனை மீதான தாக்கம் குறித்த ஆய்வு**

இந்த ஆய்வு, விபத்து தகவல்களைப் பதிவுசெய்யப் பயன்படுத்தப்படும் பொதுப் பதிவேட்டைப் பராமரிப்பதிலுள்ள பலவீனங்கள் மற்றும் முதலுதவி வசதிகளிலுள்ள குறைபாடுகள் போன்ற அத்தகைய தொழிற்சாலை பதிவிலுள்ள பலவீனமான பகுதிகளை இனங்கண்டுள்ளது. இதன்படி, எதிர்காலத்தில் தொழிற்சாலைகளில் இந்த பலவீனங்களைக் குறைப்பதற்காக, இந்த அறிக்கையில் கூறப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதை செயல்படுத்த திட்டங்கள் 2025 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **2020 முதல் 2024 வரை தொழில் திணைக்களத்தின் கைத்தொழில் உறவுகள் பிரிவினால் கைத்தொழில் பிணக்குகள் பற்றிய ஆய்வு**

இந்த ஆய்வு, இலங்கை போக்குவரத்து சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, லங்கா சதோசா லிமிடெட், இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை போன்ற அத்தகைய பகுதியளவிலான அரச துறை நிறுவனங்கள் தொடர்பாக திணைக்களத்தால் பெறப்பட்ட 124 கைத்தொழில் பிணக்குக் கோப்புகளை ஆய்வு செய்தது. 2020 - 2024 காலத்திற்கு. அதில் இனங்காணப்பட்ட கைத்தொழில் பிணக்குகளின் முக்கிய காரணங்கள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நிருவாக நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகளைக் கொண்ட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது.

- **இலங்கையில் குறைந்தபட்ச சம்பளம் மற்றும் அமைய சம்பளத்திற்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கான பகுப்பாய்வு**

இந்த ஆய்வு, தேசிய குறைந்தபட்ச சம்பளம் (மாதாந்த) குறைந்தது 24,120.00 ரூபாவாக பரிந்துரைக்கப்பட்டு, தொழில் தரநியமங்கள் பிரிவினால் மற்றும் புள்ளிவிபரப் பிரிவினால் இணைந்து நடத்தப்பட்டது. இதன்படி, தனியார் துறையில் எதிர்கால சம்பள மீளாய்வுகளில் மாற்றங்களைச் செய்வதற்கு இந்த பரிந்துரைகளைப் பயன்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

- **முக்கிய நினைவு தினங்களை அனுஷ்டித்தல்**

**மகளிர் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித்திட்டம் – 2024**

2023.03.08 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தொழில் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தினக் கொண்டாட்டங்கள் 2024.03.07 ஆம் திகதி தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

"பெண்களைப் பாதிக்கின்ற தொழில் சட்டங்கள்" என்ற தொனிப்பொருளில் கீழ் சமூக ஊடகங்கள் மூலம் சமூகத்தில் விழுப்புணர்வை ஏற்படுத்துவதற்காக குறுகிய கட்புல படைப்புப்போட்டியொன்று நடத்தப்பட்டது. பெண்களைப் பாதிக்கின்ற சட்டங்கள் பற்றி பல்கலைக்கழக மாணவர்களிடையே திறந்த விவாதமொன்று நடத்தப்பட்டது. சிரம வாசனா நிதியமும் இதற்கு பங்களிப்புச் செய்திருந்தது.



படம் 2.2 - சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித்திட்டம் 2024

**உலக சிறுவர் தொழிலுக்கு எதிரான தினம் - 2024**

2025 ஆம் ஆண்டளவில் இலங்கையிலிருந்து சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதற்கான திட்டத்தின் கீழ், யூன் 12 ஆம் திகதி வீழ்ச்சியடைந்த "சிறுவர் தொழில்களுக்கு எதிரான உலக நாள்" க்கு இணையாக தொழில் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட திட்டம் 2024.06.18 ஆம் திகதி 10 ஆவது தளத்தில் நடைபெற்றது. தொழில் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் சிறுவர் தொழிலை இல்லாதொழிப்பதை ஊக்குவிப்பதற்காக தொழில் திணைக்களத்திற்கும் கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட துடன், மற்றும் தொழில் திணைக்கள அபிவிருத்திக் குழுவின் கீழ் செயல்படும் 61 கைத்தொழில் பூங்காக்களின் தொழில்தருநர்கள் தமது நிறுவனங்களை சிறுவர் தொழில்கள் இல்லாத நிலையைப் பேணுவதாக உறுதியளித்துள்ளனர். சிறுவர் தொழில்களை இல்லாதொழிப்பதற்கு குறித்து முறையான திணைக்கள நிறுவனங்களிடமிருந்து உறுதிமொழிகளைப் பெறுவதற்காக தொழில் திணைக்களத்தின் புதிய இணையத்தளம் வழியாக QR குறியீடொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தின் சார்பாக தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி மூன்று செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

**அட்டவணை 2.19** - தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்திற்காக நடத்தப்பட்ட பயிற்சி பட்டறைகள் பற்றிய தகவல்கள்

| பயிற்சி செயலமர்வு நடைபெறும் தினம் | பயிற்சி பட்டறைகள் நடைபெறும் இடம் | பங்குபற்றியுள்ள தொழில் தருநர்கள்/ பணியாளர்கள் |
|---|---|---|
| 23.10.2024 | கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பனலுவ கைத்தொழில் பேட்டை | 35 |
| 29.10.2024 | ஹொரண, அரமனகொல்லவிலுள்ள கைத்தொழில் பேட்டை | 45 |
| 25.10.2024 | வவுனியா பிரதேச செயலகம் (தமிழ் மொழியில்) | 33 |

## 2.6.11 மனித வள முகாமைத்துவம்

தொழில் திணைக்களத்தின் பணியாட்டொகுதியின் தேவைகளை இனங்காணுதல், தேவைக்கேற்ப ஆட்சேர்ப்பு செய்தல், அலுவலர்களின் பதவியுயர்வு, வினைத்திறன் பரீட்சைகளை நடத்துதல், செயலாற்றுகை மதிப்பீடு, சம்பள உயர்வு வழங்குதல், இடமாற்றங்கள், அலுவலர்களின் ஓய்வு, அலுவலர்களின் விடுமுறை நடவடிக்கைகள் மற்றும் பணியாட்டொகுதியின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்பனவும் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**அட்டவணை 2.20** - 2023.12.31 இலுள்ளவாறு தொழில் திணைக்களத்தின் பதவியணி பற்றிய தகவல்

| பதவி | அனுமதிக்கப் பட்ட பதவியணி | 2024.12.31 இலுள்ளவாறு பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 217 | 126 | 91 |
| உயர் மட்டம் | 668 | 504 | 164 |
| இரண்டாவது மட்டம் | 1928 | 1671 | 257 |
| ஆரம்ப மட்டம் | 476 | 410 | 66 |
| **மொத்தம்** | **3289** | **2711** | **578** |

**அட்டவணை 2.21** - அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்-2024.01.01 முதல் 2024.12.31 வரை

| பதவி | நிரப்பப்படவேண்டிய பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை | பரீட்சை நடத்து வதற்கு திட்மிடப் பட்ட திகதி | பரீட்சை நடத்தப்பட்ட திகதி | இதன்படி, | |
|---|---|---|---|---|---|
| | | | | ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதி | ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதி |
| தொழில் அலுவலர் - (தரம் II) | 59 | 2022 மார்ச் | 29.04.2023 | 07.05.2024 | 57 |

புதிதாக ஆட்சேர்ப்புச்செய்யப்பட்ட தொழில் அலுவலர்கள் 57 பேருக்கு 2024.05.05 முதல் 2024.09.06 வரை பயிற்சி வழங்கப்பட்டதுடன், திணைக்ளைத்தின் பிராந்திய அலுவலகங்களுக்கு, பிரிவுகளுக்கு 2024.09.09 ஆம் திகதி இணைக்கப்பட்டிருந்தனர்.

**அட்டவணை 2.22** – 2024.01.01 முதல் 2024.12.31 வரை நடத்தப்பட்ட வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| பதவி | வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளின் பெயர் | பரீட்சை எழுதுவதற்கு தகைமை யுள்ள அலுவலர் களின் எண்ணிக்கை | பரீட்சையின் திகதி | பரீட்சைக்குத் தோற்றிய அலுவலர் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| உதவித் தொழில் ஆணையாளர் (திணைக்களம் சார்ந்தது) | முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் | 11 | 16.12.2024, 17.12.2024 மற்றும் 18.12.2024 | 09 |
| தொழில் அலுவலர் - தரம் II | முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் | 06 | 30.09.2024 மற்றும் 01.10.2024 | 02 |
| மனித வள அபிவிருத்தி அலுவலர் - தரம் II | இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் | 01 | 26.08.2024 | - |
| மனித வள அபிவிருத்தி அலுவலர் - தரம் II | இரண்டாவதுவினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் | 01 | 25.11.2024 | 01 |
| அலுவலக பணியாளர் சேவை - தரம் III, II மற்றும் I | முதலாவது இரண்டாவதுமற்றும் மூன்றாவது வினைத் திறன்காண் தடைப் | 44 | 18.12.2024 மற்றும் 19.12.2024 | 42 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பரீட்சைகள் | | | |
| இணைந்த சாரதி சேவை - தரம் II | இரண்டாவதுவினைத்திறன்காண்தடைப் பரீட்சைகள் | 03 | 17.01.2024 | 03 |
| மரவேலை செய்பவர் - தரம் II | இரண்டாவதுவினைத்திறன்காண்தடைப் பரீட்சைகள் | 01 | 18.07. 2024 | 01 |

**அட்டவணை 2.23** -2024.01.01 முதல் 2024.12.31 வரை நேர்காணல் மூலம் அலுவலர்கள் ஆட்சேர்ப்பு

| **பதவி** | **நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **இதன்படி,** | |
|---|---|---|---|
| | | **ஆட்சேர்ப்பு திகதி** | **ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை** |
| அலுவலக பணியாளர் சேவை - தரம் III | 35 | 02.08.2024 | 09 |

இதேபோன்று, திணைக்களத்தின் முழு பதவியினர்களின் பயிற்சித் தேவைகளைக் கண்டறிந்து, உள்ளகப் பயிற்சித் திட்டங்களை ஒழுங்கமைத்து நடத்தியிருந்தது, அலுவலர்களை வெளி நிறுவனங்களால் நடத்தப்படும் பயிற்சி வகுப்புகளுக்கு அனுப்பியிருந்தது, அதிகாரிகளுக்கு இளமாணி மற்றும் முதுகலை பட்டப்படிப்புகளைத் தொடர்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்கியிருந்ததுடன். வெளிநாட்டு பயிற்சிக்கு தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

2024 ஆம் ஆண்டிற்காக 2024.12.31 இலுள்ளவாறு செலவீனம் 8,546,920.00 ரூபாவிலிருந்து 10,400,000.00 ரூபா ஒதுக்கீடுகள் உள்நாட்டுப் பயிற்சி திட்டங்களுக்காக பெறப்பட்டிருந்ததுடன், ஒதுக்கீடுகளின் சதவீதம் 82% ஆகும்.

**அட்டவணை 2.24 -** 2024.01.01 முதல் 2024.12.31 வரை அலுவலர்களுக்காக திணைக்களத்தால் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

| **இல.** | **நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | **நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை** | **பங்பற்றிய அலுவலர் களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| 1 | உள்நாடு | அறிமுகப் பயிற்சிகள் | | 01 | 57 |
| 2 | | விடயம்-சார்ந்த பயிற்சி திட்டங்கள் | பௌதீக ரீதியாக நடைபெறும் நிகழ்ச்சித்திட்டங்கள் | 16 | 2 |
| | | | இணைய மூலம் நிகழ்ச்சித்திட்டங்கள் | 09 | Conducted via Zoom |
| 3 | | வெளி நிறுவனங்களால் நடத்தப்படும் பயிற்சி செயலாமர்வுகளுக்கு அலுவலர் களை அனுப்புதல் | | 08 | 142 |
| 4 | வெளிநாடு | வெளிநாட்டு பயிற்சி திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி செயலாமர்வு | | 10 | 14 |

மேலும், திணைக்களமானது, சேவையின் தேவைப்பாட்டிற்கேற்ப பட்டப்பிற்படிப்பு பட்டங்கள், பட்டங்கள், டிப்புளோமாக்கள் மற்றும் பயிற்சி செயலாமர்வுகளுக்காக இருபது அலுவலர்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளது.

பிராந்திய தொழில் அலுவலகங்களின் பதவியினர்களுக்கான செயல்திறன் மதிப்பீட்டு முறைமை மற்றும் நிதிசாரா வெகுமதி முறைமை ஒன்றைத் தயாரிப்பதற்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்திடமிருந்த (SLIDA) தொழில்நுட்ப உதவியைப் பெறுவதற்கு கோரிக்கையொன்று விடுக்கப்பட்டதுடன், அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்தின்படி, எதிர்கால வேலைகளை 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்படுகின்றது.

அதேபோன்று, சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் தொழில் திணைக்களத்தின் சேவை வழங்கல் அலுவலர்களுக்கான ஒழுக்கநெறிமுறைகள் தயாரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டு, அதன் எதிர்கால வேலைகளை 2025 ஆம் ஆண்டில் தயாரிப்பதற்கு திட்டமிடப்படுகின்றது.

தொழில் திணைக்களத்தின் கிளைகளுக்கான பயிற்சி தொகுதிகளை உருவாக்கும் பணி 2024 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த வரைவு பயிற்சித் தொகுதிகளை 2025 ஆம் ஆண்டில் ஒரு குழு மூலம் இன்னும் சரியான முறையில் தயாரிப்பதற்குத் திட்டமிடப்படுகின்றது.

## 2.6.12 உட்கட்டமைப்பு அபிவிருத்தி

நாடு பூராவும் பரவியுள்ள வாடிக்கையாளர்களுக்கு மிகவும் பயனுள்ள சேவைகளை வழங்கும் நோக்கத்துடன், நாடு பூராவும் அமைந்துள்ள திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி, பிராந்திய அலுவலகங்களில் தேவைக்கேற்ப சிறிய பழுதுபார்ப்பு மேற்கொள்ளப்பட்டதுடன், மெஹேவர பியெச கட்டடம் மற்றும் தொழில் செயலக்க கட்டடத்தில் உட்கட்டமைப்பு பழுதுபார்ப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி, 2024.12.31 இலுள்ளவாறு, தொழில் செயலகத்தின் 3, 4 மற்றும் 5 ஆவது தளங்களில் உட்கட்டமைப்புகளில் பழுதுபாரப்புகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை, மெஹேவர பியெச கட்டடத்தின் 16 ஆவது தளத்தில் உள்ளக கட்டமைப்புகளை சரிசெய்வதற்கு பெறுகைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மேலும், ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான சேவைகளை ஒரே இடத்தில் பயனாளிகளுக்கு வழங்குவதற்காக தொழில் செயலக்க கட்டடத்தின் முதல் தளத்தில் புதிய அலுவலக வளாகம் 2024.08.06 ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

## 2.6.13 தொழில் திணைக்களத்தின் பணிகளை கண்காணிப்பதன் மூலம் இலக்குகளை நோக்கி செல்லுதல்

2024 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் வருடாந்த செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்கு திணைக்களத்தின் கிளைகள் செயல்படும் விதம் மற்றும் முன்னேற்றம் ஆராயப்பட்டது. இதன்படி, ஒவ்வொரு கிளையின் முன்னேற்றம் மற்றும் கிளைகளின் பணிகளை ஆற்றுவதில் எழுந்துள்ள நிருவாக பிரச்சினைகள் குறித்து ஆலோசனைகளையும், தீர்வுகளையும் வழங்குவதற்காக தொழில் ஆணையாளர் அதிபதி தலைமையிலான சிரேஸ்ட பதவி அலுவலர்களின் கூட்டம் நடத்தப்பட்டது.

வலயங்களுக்குப் பொறுப்பான உப தொழில் ஆணையாளர்கள் 2024 ஆம் ஆண்டின் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளில் செய்யப்பட்ட முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களில் முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் மேற்கொண்டிருந்தனர்.

மாவட்ட தொழில் அலுவலகங்கள் மற்றும் உப தொழில் அலுவலகங்கள் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கான வழிமுறையைத் தயாரிப்பதற்கு திணைக்களத்தின் அலுவலர்கள் உள்டங்கிய குழு வலய உப தொழில் ஆணையாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளதுடன், பரிந்துரைகளும் பெறப்பட்டுள்ளன இதன்படி, வழங்கப்பட்ட பரிந்துரைகளின்படி 2025 ஆம் ஆண்டில் முன்னேற்ற கண்காணிப்பினை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதே நேரத்தில், பிராந்திய அலுவலகங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு முறையான முறையைத் தயாரிப்பதற்கு திணைக்கள அலுவலர்களைக் கொண்ட குழுவொன்று தலைமை அலுவலகத்தால் தாபிக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இக்குழுவால் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு, குழுவின் பரிந்துரைகளின்படி 2025 ஆம் ஆண்டில் மேலும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.6.14. நிதி முகாமைத்துவம்

திணைக்களமானது, அரசாங்க கொள்கைகளுக்கிணங்க, உரிய குறிக்கோள்களை பயனுறுதியுடனும். வினைத்திறனுடனும் அடைவதற்காக 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவுசெலவுத்திட்டத் தினூடாக திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

இதன்படி, 2024.12.12. இலுள்ளவாறு, மீணடெழும் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளில் 99.51% மற்றும் மூலதன செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட 22.52% நிதி முகாமைத்துவ இலக்குகளை அடைவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.25** - 2024.12.31 இலுள்ளவாறு மீண்டெழும் மற்றும் மூலதன செலவினம்

| | 2024 **ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகள்** (ரூபா) | **பெறப்பட்ட மேலதிக ஒதுக்கீடு** (ரூபா) | 2024.12.31 **இலுள்ளவாறான செலவீனம்** (ரூபா) | **ஒதுக்கீட்டின் வீதமாக உண்மையான செலவினம்** |
|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவீனம் | 2,895,981,140 | 127,000,000 | 3,008,102,293 | 99.51 % |
| மூலதன செலவீனம் | 1,396,000,000 | 7,925,000 | 316,149,882 | 22.52 % |

ஐம்பது கட்டட பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் மூலதன செலவினங்களின் கீழ் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருந்தபோதிலும், தொழில் திணைக்களத்தில் தொழில்நுட்பப் பணிகள் தொடர்பான பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாக, அந்தப் பணிகளை வெளிவள நிறுவனங்களால் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், அந்த நிறுவனங்களின் அளவுகள் மற்றும் விலைகோரல் ஆவணங்களின் விலைப்பட்டியல்கள், தயாரிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் பழுதுபார்ப்பு தொடர்பான நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க காலதாமத்தை ஏற்படுத்தியிருந்தது. இதன் விளைவாக 2024 ஆம் ஆண்டில் மூலதன செலவினங்களுக்கான ஒதுக்கீடுகளை செலவழிப்பதில் முன்னேற்றமில்லாத நிலையை ஏற்படுத்தியிருந்தது.

இந்தப் பிரச்சினைக்களுக்குத் தீர்வாக, பரிந்துரைக்கப்பட்ட பெறுகைச் செயன்முறையைப் பின்பற்றி, 2025 ஆம் ஆண்டில் பொருத்தமான ஆலோசனை நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இந்த நடவடிக்கைகள் மிகவும் வினைத்திறனான வகையில் மேற்கொள்ளப்படுகின்றது.

## 2.7 மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

### 2.7.1 தொழில் வழிகாட்டுதல், தொழில் சந்தை தகவல் மற்றும் அரச வேலைவாய்ப்பு சேவைகளை பேணுதல்

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களமானது நாட்டின் மனிதவள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்திற்கான பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துகின்றது.

- **ஆண்டு காலப்பகுதியில் நடத்தப்பட்ட தொழில் வழிகாட்டுதல் நிகழ்ச்சித்திட்டங்கள்**

**தரம் 9 மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டுநெறி**

இந்த நிகழ்ச்சித்திட்டம், பல்நுண்ணறிவு சோதனையின் அடிப்படையில் பிள்ளையின் அறிவுசார் திறன்களையும் எதிர்கால இலக்குகளையும் இனங்காணும் நோக்கத்துடன் நடத்தப்படுவதுடன், க.பொ.த. சா/த பரீட்சைக்கான துல்லியமான வழிகாட்டுதல்களை வழங்குதன் மூலம் நடத்தப்படுகின்றது.

2024.01.01 முதல் 2024.12.31 வரை 71,477 பாடசாலைப் பிள்ளைகளுக்கு நாடளாவியரீதியில் 2,174 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

சாதாரண தர மாணவர்களுக்கு கற்பித்தல்

மாணவர்களின் திறன்கள் மற்றும் ஆர்வங்களுக்கு ஏற்ப உ/த பாடப் பகுதியைத் தேர்ந்தெடுப்பதற்கும், எதிர்கால தொழில் இலக்குகளை இனங்காண்பதற்கும், மாற்றுக் கல்வி அல்லது மாற்றுத் தொழில் தேவைகள் குறித்த வழிகாட்டுதலை வழங்குவதற்கும் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்படுகின்றது. ஆர்வங்கள் மற்றும் திறன்களைக் கண்டறிந்து உ/த பாடங்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் கல்வி இலக்குகளை அடைவதற்கும் வழிகாட்டுதல்களை வழங்குவதும் இதில் உள்ளடங்கும்.

2024.01.01 முதல் 2024.12.31 வரை 71,477 பாடசாலைப் பிள்ளைகளுக்கு நாடளாவியரீதியில் 2,174 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

**உயர்தர மாணவர்களுக்கு கற்பித்தல்**

இந்த நிகழ்ச்சித்திட்டமானது, மாணவர்கள் அவர்களை சுய மதிப்பீடு மற்றும் அவர்களின் வாழ்க்கை இலக்குகளை திட்டமிடுவதன் மூலம், அதிக போட்டித்தன்மை கொண்ட கல்வி முறைமையுடன் இணைந்திருக்கும் பாடசாலை மாணவர்களுக்கு வழிகாட்டுதல், தலையீடு அல்லது ஆளுமை விருத்தி ஆகியவற்றின் மூலம் எதிர்கால தொழில் உலகில் நுழைவதற்குத் தேவையான மன வலிமையை விருத்திசெய்வதற்கு உதவும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகின்றது.

இது, சுய மதிப்பீடு மற்றும் தனிப்பட்ட அடையாளம், வாழ்க்கை இலக்குகளை நிர்ணயித்தல் மற்றும் உயர்கல்வி, தொழில் பயிற்சிநெறிகளை அணுகுதல் மற்றும் பாடசாலையின் பின்னரான வேலைவாய்ப்பு பற்றிய புரிதலை வழங்குகின்றது.

2024.01.01 முதல் 2024.12.31 வரை 51,335 பாடசாலைப் பிள்ளைகளுக்கு நாடளாவியரீதியில் 1,381 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, பயிற்சிக்காக 19,927 பேர் அனுப்பப்பட்டதுடன், 55,264 தனிப்பட்ட தொழில் வழிகாட்டுதல் அமர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

- **வேலை உருவாக்கம், பதவி உயர்வு மற்றும் அரச வேலைவாய்ப்பு சேவை நிகழ்ச்சித்திட்டங்கள்**

**அட்டவணை 2.26 -** வேலை உருவாக்கம், பதவி உயர்வு மற்றும் அரச வேலைவாய்ப்பு சேவை நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துவதில் முன்னேற்றம் – மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்.

| செயற்பாடு | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| வேலை தேடுபவர்களின் பதிவு | 74,451 |
| தொழில் வெற்றிடப் பதிவு | 54,194 |
| வேலை தேடுபவர்களை வேலைகளுக்குப் பரிந்துரைத்தல் | 67,515 |
| வேலை தேடுபவர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குதல் | 11,520 |
| தொழில்முயற்சியாளர் மற்றும் சுயதொழில் செய்பவர்களை உருவாக்குதல் | 523 |

**அட்டவணை 2.27** – மாவட்ட தொழில் சந்தை மற்றும் பிராந்திய தொழில் சந்தைகளை நடத்துவதில் முன்னேற்றம் – மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்

| நிகழ்ச்சித்திட்டங்கள் | முன்மொழியப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | செயல்பாட்டில் உள்ள நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பயனாளி களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| மாவட்ட தொழில் சந்தை மற்றும் தொழில் சந்தை | 25 | 25 | 7,412 |
| பிராந்திய தொழில் சந்தை மற்றும் தொழில் சந்தை | 100 | 133 | 15,442 |

- **தொழில் சந்தை தகவல் மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

**இலங்கையில் பசுமையான வேலை வாய்ப்புகள் மற்றும் வேலை பற்றிய விபரங்கள்**

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களமானது. வினைத்திறனுடனான மற்றும் உற்பத்தித் திறன் கொண்ட தொழிலாளர் சந்தையை உருவாக்குவதற்கும் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கும் தொழிலாளரின் தேவைக்கும் வழங்கலுக்கும் இடையிலான ஒருங்கிணைப்பை எளிதாக்கும் நோக்கத்துடன் செயல்படும் நிறுவனமொன்றாகும்.

சூரிய ஆற்றல், காற்று, அலை மற்றும் உயிரியல் எரிபொருள் போன்ற இலங்கையின் அபரிமிதமான எரிசக்தி ஆதாரங்களின் நிலையான அபிவிருத்தியானது, பசுமை வேலைகளை உருவாக்கும் போக்கை அதிகரிக்கும். முன்மொழியப்பட்ட பசுமைப் பொருளாதாரத்தை ஆதரிக்கும் பசுமை வேலை வாய்ப்புகள் மற்றும் வேலை விபரங்கள் பற்றிய கருப்பொருள் ஆய்வை நடத்துவதற்கு திணைக்களம் முடிவு செய்துள்ளது. இதற்காக, உலகப் பொருளாதாரப் போக்குகளில் எதிர்பார்க்கப்படும் போக்குகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆய்வானது, இலங்கை தொழிலாளர் சந்தையில் பசுமை வேலைகளையும் மற்றும் எதிர்காலத்தில் பசுமையான வேலைகளை உருவாக்கக்கூடிய துறைகளையும் இனங்கண்டு, பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் பாடவிதானங்களில் உள்ளடங்கிய கூறுகளை இனங்காண்பதற்கும், பசுமைக்கு தேவையான தகுதிகள் மற்றும் திறன்களை இனங்காண்பதற்கும், வேலைகள் மற்றும் நிறுவன மட்டத்தில் (சம்பளம், பதவி உயர்வுகள் போன்றவை) பெறப்பட்ட நன்மைகளை இனங்காண்பதற்குமான அடிப்படை தரவுகளை சேகரிக்கும்.

இந்த ஆய்வினால் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், வேலை தேடுபவர்கள், தொழில் ஆலோசகர்கள், சிற்றின மற்றும் சிறிய தொழில்முயற்சியாளர், பெற்றோர்கள் மற்றும் பொது மக்களுக்கு திணைக்களத்தின் கள அலுவலர்கள் மூலம் அறிவூட்டுவதற்கு உதவும்.

பசுமையான வேலை வாய்ப்புகள் உள்ள 30 நிறுவனங்களில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, தரவு சேகரிப்பு முடிக்கப்பட்டுள்ளது. தரவு பகுப்பாய்வு முடிக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. பேராசிரியர் சுனில் சந்திரசிறியின் மேற்பார்வையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

- **தொழில் சந்தை தகவல் மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

**இலங்கையில் பசுமையான வேலை வாய்ப்புகள் மற்றும் வேலை பற்றிய விபரங்கள்**

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களமானது. வினைத்திறனுடனான மற்றும் உற்பத்தித் திறன் கொண்ட தொழிலாளர் சந்தையை உருவாக்குவதற்கும் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கும் தொழிலாளரின் தேவைக்கும் வழங்கலுக்கும் இடையிலான ஒருங்கிணைப்பை எளிதாக்கும் நோக்கத்துடன் செயல்படும் நிறுவனமொன்றாகும்.

சூரிய ஆற்றல், காற்று, அலை மற்றும் உயிரியல் எரிபொருள் போன்ற இலங்கையின் அபரிமிதமான எரிசக்தி ஆதாரங்களின் நிலையான அபிவிருத்தியானது, பசுமை வேலைகளை உருவாக்கும் போக்கை அதிகரிக்கும். முன்மொழியப்பட்ட பசுமைப் பொருளாதாரத்தை ஆதரிக்கும் பசுமை வேலை வாய்ப்புகள் மற்றும் வேலை விபரங்கள் பற்றிய கருப்பொருள் ஆய்வை நடத்துவதற்கு திணைக்களம் முடிவு செய்துள்ளது. இதற்காக, உலகப் பொருளாதாரப் போக்குகளில் எதிர்பார்க்கப்படும் போக்குகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆய்வானது, இலங்கை தொழிலாளர் சந்தையில் பசுமை வேலைகளையும் மற்றும் எதிர்காலத்தில் பசுமையான வேலைகளை உருவாக்கக்கூடிய துறைகளையும் இனங்கண்டு, பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் பாடவிதானங்களில் உள்ளடங்கிய கூறுகளை இனங்காண்பதற்கும், பசுமைக்கு தேவையான தகுதிகள் மற்றும் திறன்களை இனங்காண்பதற்கும், வேலைகள் மற்றும் நிறுவன மட்டத்தில் (சம்பளம், பதவி உயர்வுகள் போன்றவை) பெறப்பட்ட நன்மைகளை இனங்காண்பதற்குமான அடிப்படை தரவுகளை சேகரிக்கும்.

இந்த ஆய்வினால் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், வேலை தேடுபவர்கள், தொழில் ஆலோசகர்கள், சிற்றின மற்றும் சிறிய தொழில்முயற்சியாளர், பெற்றோர்கள் மற்றும் பொது மக்களுக்கு திணைக்களத்தின் கள அலுவலர்கள் மூலம் அறிவூட்டுவதற்கு உதவும்.

பசுமையான வேலை வாய்ப்புகள் உள்ள 30 நிறுவனங்களில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, தரவு சேகரிப்பு முடிக்கப்பட்டுள்ளது. தரவு பகுப்பாய்வு முடிக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. பேராசிரியர் சுனில் சந்திரசிறியின் மேற்பார்வையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

**சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வேலைவாய்ப்பின் இணக்கம் குறித்த ஆய்வு**

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களமானது, தனியார் துறையில் சீரிய வேலை பற்றிய கொள்கைகளை செயல்படுத்துவது குறித்து ஆய்வு நடத்தி வருகின்றது. அதிக கவனம் பெறாத சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை அடிப்படையாக வைத்து ஆய்வு நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் இலங்கையில் சுமார் 58% தொழில்வாய்ப்பு முறைசாரா துறையைச் சார்ந்தது. இந்த ஆய்வு, சுதந்திரம், சமத்துவம், பாதுகாப்பு மற்றும் மனித கௌரவம் போன்றவற்றில் தரங்கள் பற்றி பரந்தளவில் குறிக்கின்றது. இதன் கீழ், சீரிய வேலை மற்றும் அதன் கூறுகள் பற்றிய பொதுவான விழிப்புணர்வு, நடைமுறையில் பிரயோகிக்கப்படும் சீரிய வேலை எண்ணக்கருவின் எண்ணிக்கை மற்றும் இந்த எண்ணக்கருக்கள் முறைசாரா துறையில் எந்த அளவிற்கு செயல்படுத்தப்படுகின்றன என்பது பற்றி விரிவாக ஆய்வு செய்யப்படுகின்றது.

இந்த ஆய்வு பல்கலைக்கழகமொன்றில் தொழில்சார் ஆராய்ச்சி அணியால் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், விலை மனுதாரர்கள் யாரும் விண்ணப்பிக்காததால், திணைக்கள அலுவலர்களால் தரவு சேகரிக்கப்பட்டது. இந்த ஆய்வு, பேராசிரியர் சுனில் சந்திரசிறியின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டு, இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது.

**இலங்கையில் மாற்றுத்திறனாளி சமூகத்தின் வேலை வாய்ப்பு பற்றிய ஆய்வு**

இலங்கையின் மக்கள் தொகை சுமார் 20.3 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கையில், சுமார் 10% பேர் ஏதோவொரு இயலாமையால் பாதிக்கப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மக்கள் தமது இயலாமையின் தன்மையைப் பொறுத்து மாறுபடும். இந்த குழுமத்துல் ஒரு சதவீதத்தை பணிக்கமர்த்த முடியும், இனங்காண முடியும் மற்றும் அவர்களை வேலைக்கு அமர்த்த முடிந்தால், அவர்களை பராமரிக்கும் செலவைக் குறைக்க முடியும் என்பதுடன், அவர்கள் தேசிய உற்பத்திக்கு பங்களிப்புச் செய்யவும் முடியும். தேசிய பொருளாதாரத்தில் மாற்றுத்திறனாளிகளைப் பராமரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட தீர்வுகளையும் குறைக்க முடியும்.

எனவே, இந்த முன்னோடி ஆய்வு, மாற்றுத்திறனாளிகள் சமூகத்தின் அடிப்படையில் வேலைவாய்ப்புக்கான அணுகுமுறைகள், திறன்கள் மற்றும் பயிற்சித் தேவைகள் குறித்த தகவல்களைப் பெற்று அறிக்கையிடுவதற்கு கம்பஹா மாவட்டத்தின் எழுந்தமான மாதிரியைத் தேர்ந்தெடுத்து கணக்கெடுப்பை நடத்துகின்றது. இந்த ஆய்வு, திணைக்களத்தின் அலுவலர்களால் நடத்தப்படும். இந்த கணக்கெடுப்பு நிறைவடைந்து இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

**செய்தித்தாள்களில் வெற்றிடங்கள் பற்றிய பகுப்பாய்வு**

திணைக்களத்தின் பொது வேலைவாய்ப்பு சேவையால் ஓகஸ்ட் மாதம் முதல் சேகரிக்கப்பட்ட வெற்றிடங்கள் மற்றும் வேலையின் பொருத்தமாந் தன்மைக்காக அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு சேவை நிலையங்களுக்கும் நியோகிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நிலையான முறையின்படி வகைப்படுத்தப்படுகின்றது. இந்தத் தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, தொழில் சந்தையின் போக்குகள், அதாவது தேவையின் போக்குகள் பற்றிய தகவல்களைத் தொகுத்து அறிக்கையிடுவதற்கு திட்டமிடப்பட வேண்டும். இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

**அரச வேலைவாய்ப்பு சேவைகளை உருவாக்குவதற்கும், மேம்படுத்துவதற்கும் வேலையின் பொருத்தமாம் தன்மை பற்றிய தகவல்களை சேகரித்தல்**

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அரச வேலை வாய்ப்பு சேவை நிலையத்தினூடாக தொழில்வழங்குநர்களை மற்றும் வேலை தேடுபவர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை அதிகபட்ச செயல்திறனுடன் வழங்கப்படுவதை உறுதிசெய்வதற்கான முன்மொழிவு களை சமர்ப்பிப்பதற்காக, திணைக்களத்தின் தொழில் சந்தை தகவல் மற்றும் ஆராய்ச்சி அலகு, நிறுவனத்தால் பெறப்பட்ட வெற்றிடங்கள், வேலை தேடுபவர்கள் எதிர்பார்க்கும் வேலைகள் மற்றும் அந்த வேலைகள் பற்றிய குறித்த அவர்களின் அணுகுமுறை ஆகியவற்றைப் ஆய்வுசெய்வதற்காக எதிர்பார்க்கின்றது. இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

- **ஏனைய விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

**உ/த மாணவர்களுக்கு திறமையுடன் தொழில் உலகில் நுழைவதற்கான நடைமுறை அனுபவத்தை வழங்குதல்**

இலங்கைப் பாடசாலைக் கல்வி முறையில், அரச பல்கலைக்கழகங்களில் உயர்தரப் படிப்பை முடித்த பின் மிகக் குறைந்த சதவீத மாணவர்களே அனுமதிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும், 120,000 பிள்ளைகள் எந்த திறன் விருத்தியுமின்றி தொழில் உலகில் நுழைகின்றார்கள். குறிப்பாக, தொழிற்கல்வியை தேர்வு செய்வது, பரீட்சையில் தோல்வியடைந்ததன் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவாக இருத்தலாகாது. இருப்பினும், பாடசாலைக் கல்வியின் போது திறன்களுடன் தொழில் உலகில் சேர்வதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டால், பாடசாலைக்குப் பின்னர் உயர்கல்விக்குத் தகுதி பெறாத மாணவர்கள் தொழிற்கல்வி படிப்பைத் தேர்ந்தெடுப்பதற்கு ஊக்குவிக்கப்படுவார்கள்.

2023 ஆம் ஆண்டில், வடகிழக்கு பிரதேசங்களில் பல முன்னோடித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதுடன், மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்ததில், அவர்களில் பெரும்பாலோர் தொழிற்பயிற்சி வாய்ப்புகளைப் பற்றிய போதிய அறிவினைக் கொண்டிருக்கவில்லை என்பது தெரியவந்தது. இதன்படி, க,பொ,த உ/த மாணவர்கள் நடைமுறையில் தொழில் உலகில் பிரவேசிப்பதற்கு முன் தொழில் பயிற்சி பெறுவதன் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டுள்ளனர், மனிதவள மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களம் 2024 ஆம் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் 23 நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்திருந்துடன், பயனாளிகளின் எண்ணிக்கை 1,692 ஆக காணப்பட்டது.

**வேலை, கல்வி அல்லது பயிற்சியில் (NEET) ஈடுபடாத இலங்கையிலுள்ள இளைஞர்களை செயலிலுள்ள தொழில் அணியில் ஒருங்கிணைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல்**.

வேலை, கல்வி அல்லது பயிற்சி ஆகியவற்றில் ஈடுபடாத இலங்கை இளைஞர்களை செயலிலுள்ள தொழில் அணியில் ஒருங்கிணைக்கும் நோக்கில் 25 மாவட்டங்களை உள்ளடக்கிய கணக்கெடுப்பில் 3528 பயனாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். இந்த 6 நிகழ்ச்சித்திட்டங்களும் அந்த பயனாளிகளை செயலிலுள்ள தொழில் அணியில்

ஒருங்கிணைத்து ஆக்கத்திறன் கொண்ட தொழில் அணியை உருவாக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டதுடன், பயனாளிகளின் எண்ணிக்கை 304 ஆகும்.

**இளைஞர்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல்**

இந்த வேலைத்திட்டம், எதிர்கால சவால்களை வினைத்திறனுடன் எதிர்கொள்ளும் வகையில் ஒவ்வொரு கிராமத்திலும் தலைமைத்துவம் மற்றும் படைப்பாற்றல் கொண்ட வலுவான இளம் குழுமத்தை உருவாக்குவதன் மூலம் இலங்கையில் வேலையின்மை இடைவெளியை குறைப்பதற்காக நடத்தப்படுகின்றது. இந்த இளைஞர்களுக்கு எதிர்காலம் குறித்த நம்பிக்கையை ஏற்படுத்தவும், தொழில் உலகில் நுழைவதற்கான சுய உந்துதலை உருவாக்குவதற்காகவும், வேலை செய்யும் உலகத்தைப் பற்றிய புரிதலை ஏற்படுத்தவும் முதல் நாளில் இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைபெறும். இந்த இளைஞர்களுக்கு தொழில் உலகின் நேரடி அனுபவத்தை வழங்கும் நோக்கத்துடன், சர்வதேசரீதியில்/உள்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களைக் கண்காணிப்பதற்கு வாய்ப்பொன்று வழங்கப்படுகின்றது. இந்த ஆண்டு 97 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டதுடன், பயனாளிகளின் எண்ணிக்கை 3,609 ஆகும்.

**மாற்றுத்திறனாளிகளின் வேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் கருத்திட்டம்**

இது, சமூக சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து மாற்றுத்திறனாளிகளின் வேலை வாய்ப்பை ஊக்குவிக்கும் திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்றது. இந்த ஆண்டு, 309 பயனாளிகளுடன், 8 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

**வேலை உருவாக்கல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல்**

இத்திட்டம், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நோக்குடன், நாட்டின் மாவட்டங்களின் தனித்துவமான தேவைகளைக் கண்டறிந்து, ஒரு துறையைத் தேர்ந்தெடுத்து (ஏற்றுமதித் துறை, உள்ளூர் சந்தைப் பொருட்கள், மீன்பிடி, டிஜிட்டல் சந்தைப்படுத்தல் போன்றவை) சொந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கு ஆர்வமுள்ள இளைஞர்களை இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம், இந்த ஆண்டு நடத்தப்பட்டதுடன், பயனாளிகளின் எண்ணிக்கை 792 ஆகும்.

**டிஜிட்டல் தொழில்முயற்சியாண்மை மற்றும் திறன்கள் விருத்தி நிகழ்ச்சித்திட்டம்**


இந்த திட்டம், டிஜிட்டல் சந்தைப்படுத்தல், இணையவழி சந்தைப்படுத்தல் மற்றும் இ- வணிகம் போன்ற அத்தகைய சந்தைப்படுத்தல் தளங்களை அறிமுகப்படுத்தியிருந்ததுடன், வேலை தேடும் இளைஞர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர் தகுதிகளுடனுள்ள இளைஞர்களுக்கான அறிவையும் மேம்படுத்தியிருந்தது. இந்த ஆண்டு 6 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு, 224 பயனாளிகள் பயனடைந்திருந்தனர். இந்தத் திட்டம் 2025 ஆம் ஆண்டளவில் நாட்டின் அனைத்து 25 மாவட்டங்களையும் உள்ளடக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2.7.2 நிதிசார் முன்னேற்றம்


**அட்டவணை 2.28** - 2024.12.31 இலுள்ளவாறு மீணடெழும் மற்றும் மூலதனச் செலவீனங்கள்

| விடயம் | 2024 வரவு செலவுத்திட்ட ஏற்பாடு (ரூ.மில்.) | மேலதிக ஒதுக்கீடு (ரூ.மில்.) ஏற்பாடு (ரூ.மில்.) | நி.ஒ | 2024 இற்கான மொத்த ஒதுக்கீடு (ரூ.மில்.) | செல வீனம் (ரூ.மில்.) | எஞ்சி யுள்ள ஒதுக்கீடு (ரூ.மில்.) | விகிதம்e (%) |
|---|---|---|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவீனம் | 573.000 | 25.640 | (5.725) | 592.915 | 580.091 | 12.824 | 97% |
| மூலதனச் செலவீனம் (1+2) | 24.000 | - | 5.725 | 29.725 | 19.829 | 9.896 | 66% |
| 1.அபிவிருத்தி | 16.000 | - | | 16.000 | 9.612 | 6.388 | 60% |
| 2.ஏனையவை | 8.000 | - | 5.725 | 13.725 | 10.217 | 3.508 | 74% |
| மொத்தம் | 597.000 | 25.640 | | 622.640 | 599.920 | 22.720 | 96% |

**வரைபடம்** 2.5 - வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவினம் - மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்




**வரைபடம் 2.6** அபிவிருத்தி மற்றும் ஏனைய செலவினம் – மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்




## 2.8 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

### 2.8.1 சிறந்த தொழிற்றுறை உறவுகளுக்காக முத்தரப்பு அக்கறைதாரர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்

- **தொழில் சட்டம், தொழில்துறை உறவுகள் மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றி அறிவூட்டுதல்**

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் அதன் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தொழில் சட்டமும், தொழிற்றுறை உறவுகளும், மனிதவள முகாமைத்துவம் மற்றும் வேலைத்தல உற்பத்தித்திறன் ஆகிய மூன்று பிரதான துறைகளில் கற்கைநெறிகளை நடத்தி வருகின்றது: இந்நிறுவனம் தற்பொழுது அரச துறை மற்றும் தனியார் துறை சேவைநாடுநர்களுக்கு தரமான சேவையாக மூன்று மொழிகளிலும் இந்த கற்கைநெறிகளை வழங்கி வருகின்றது. இக்கற்கை நெறிகள், டிப்புளோமா மற்றும் குறுகிய கால கற்கைநெறிகள், சான்றிதழ்கள், பயிற்சிகள் மற்றும் பயிலரங்குகளாக வழங்கப்படுகின்றன.

**டிப்புளோமா கற்கைநெறிகள்**

**அட்டவணை 2.29 -** நீண்ட காலப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் நடத்தப்பட்ட டிப்புளோமாக்களின் விபரங்கள்

| | **டிப்புளோமாவின் பெயர்** | **கற்கைநெறிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | தொழிற்றுறை உறவுகளும், தொழில் சட்டமும் – சிங்கள மொழி மூலம் | 1 |
| 2 | தொழிற்றுறை உறவுகளும், தொழில் சட்டமும் – ஆங்கில மொழி மூலம் | 1 |
| 3 | மனித வள முகாமைத்துவம் - சிங்கள மொழி மூலம் | 1 |
| 4 | மனித வள முகாமைத்துவம் - தமிழ் மொழி மூலம் | 2 |
| 5 | அரச பெறுகையும் ஒப்பந்த நிருவாகமும் | 1 |
| 6 | வேலைத்தல ஆக்கத்தித்திறனில் தொழில்சார் டிப்புளோமா | 2 |
| 7 | தொழில் சட்டத்தின் நடைமுறைப் பிரயோகங்களில் டிப்புளோமா | 1 |

**சான்றிதழ் கற்கைநெறிகள்**

அரசு, பகுதியளவலான அரச மற்றும் தனியார் துறை அலுவர்களின் அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், தொழில் சட்டங்களும், தொழிற்றுறை உறவுகளும், மனிதவள முகாமைத்துவம், அலுவலக முகாமைத்துவம், பெறுகை, அகக் கணக்காய்வு ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் ஆகியவற்றை உள்ளடக்கி ஒவ்வொரு விடயப்பரப்பிலும் நடத்தப்பட்ட பத்து நாள் சான்றிதழ் கற்கைநெறிகளினதும், உயர் சான்றிதழ் கற்கைநெறிகள் படிப்புகளினதும் எண்ணிக்கை 30 ஆகும்.

**அட்டவணை 2.30 -** சான்றிதழ் கற்கைநெறிகளின் விபரங்கள்

| **சான்றிதழ் கற்கைநெறியின் பெயர்** | **நடத்தப்பட்ட கற்கைநெறிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| புலம்பெயர்வும், பொது நிருவாகமும் | 21 |
| தொழில்துறை உறவுகளும் தொழில் சட்டமும் | 4 |
| மனித வள முகாமைத்துவம் | 1 |
| அரசபெறுகை | 1 |
| அலுவலக முகாமைத்துவம் | 1 |
| சுகாதார அலுவலக முகாமைத்துவம் | 2 |

**குறுகிய கால பயிற்சி கற்கைநெறிகள்**

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம், ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள் மற்றும் ஐந்து நாள் குறுகிய கால கற்கைநெறிகளை தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பயிற்சி நிலையத்திலும், சேவைநாடுநர் நிறுவனங்களின் வேண்டுகோளின்பேரில், இலக்குக்கு வைக்கப்பட்ட குழுமங்களுக்காக உரிய வேலைத்தலங்களிலும் நடத்துகின்றது. இதன்படி, தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் கற்கைநெறிகளின் எண்ணிக்கை 43 ஆகும். சேவைநாடுநர்களின் நிறுவனங்களின் வேண்டுகோளின்பேரில் பேரில் நடத்தப்பட்ட கற்கைநெறிகளின் எண்ணிக்கை 25 ஆகும்.

**அட்டவணை 2.31 -** சான்றிதழ் கற்கைநெறிகளின் விபரங்கள்

| கற்கைநெறியின் பெயர் | நடத்தப்பட்ட கற்கைநெறிகளின் எண்ணிக்கை |
|---|---|
| அலுவலக முகாமைத்துவம் | 24 |
| தொழில்துறை உறவுகள் மற்றும் தொழில் சட்டம் | 8 |
| அரச பெறுகை | 1 |
| பயிற்சியாளர் பயிற்சி திட்டங்கள் | 1 |
| மென் திறன்கள் விருத்தி | 2 |
| இயலுமை விருத்தி | 7 |

**வாடிக்கையாளர் நிறுவனங்களின் கோரிக்கையின் பேரில் நடத்தப்படும் கற்கைநெறிகள்**

பல்வேறு அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் தமது நிறுவனத் தேவைகளுக்கு ஏற்ற பயிற்சி கற்கைநெறியைத் தயாரிக்குமாறு நிறுவனத்தைக் கோருகின்றன. அந்தக் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, நிறுவனம், அந்த நிறுவனங்களுக்குச் சென்று குறிப்பிட்ட கற்கைநெறி உள்ளடக்கத்துடன் பயிற்சி கற்கைநெறிகளை நடத்துகின்றது. இதன்படி, 2024 ஆம் ஆண்டில் அத்தகைய நிறுவனங்களின் வேண்டுகோளின் பேரில் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் விளக்கம் (முன் ஆயத்த நிகழ்ச்சித்திட்டங்கள்) கீழே கொடுக்கப்பட்டுள்ளது. மொத்தம் 25 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு 1018 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.32** - வாடிக்கையாளர் நிறுவனங்களின் கோரிக்கையின் பேரில் நடத்தப்பட்ட கற்கை நெறிகளின் விபரங்கள்

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் எண் ணிக்கை |
|---|---|
| அலுவலக முகாமைத்துவம் | 9 |
| தொழில்துறை உறவுகள் மற்றும் தொழில் சட்டம்/ மனித வள முகாமைத்துவம் | 3 |
| குழும செயல்பாடுகள் மற்றும் பணியாளரை ஊக்குவித்தல் | 2 |
| வினைத்திறன் காண் தடைப்பரீட்சைகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 11 |

**பரீட்சைப் பிரிவின் வகிபாகம்**

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் பல ஆண்டுகளாக அரச துறை நிறுவனங்கள் மற்றும் நியதிச்சட்ட அமைப்புகள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் கோரிக்கையின் பேரில் பரீட்சைகளை நடத்தி வருகின்றது. இதன் கீழ், பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சைகள், வினைத்திறன் தடைகாண் பரீட்சைகள், மதிப்பீடுகள் மற்றும் பதவி உயர்வு ஆகியவை நிறுவனத்தின் தேவையின் அடிப்படையில் நடத்தப்படுகின்றன. மேலும், நிறுவனத்தால் நடத்தப்படும் டிப்புளோமா மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகள் தொடர்பான பரீட்சைகளும் நடத்தப்படுவதுடன், இந்த பரீட்சைகளின் இரகசியத்தன்மையை பாதுகாத்து சேவைநாடுநர்களுக்கு உடனடியான சேவையை வழங்குகின்ற அதே வேளையில் இந்த பரீட்சைகள் தொழில்சார்ரீதியிலும் நடத்தப்படுகின்றன.

**அட்டவணை 2.33 -** நடத்தப்பட்ட பரீட்சைகளின் விபரங்கள்

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பரீட்சைகளின் எண்ணிக்கை | விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | 26 | 656 |
| ஆட்சேர்ப்பு பரீட்சை | 3 | 779 |
| மொத்தம் | **29** | **1435** |

அட்டவணை **2.34 –** நிதிசார் முன்னேற்றம்

| | வருடாந்த வரவுசெலவுத் திட்டம் | மாதாந்த வரவுசெலவுத் திட்டம் | 4 ஆவது காலாண்டு வரவுசெலவுத் திட்டம் 30.11.2024 | 4 ஆவது காலாண்டு உண்மையானது 30.11.2024 |
|---|---|---|---|---|
| *வருமானம்* | | | | |
| பயிற்சி | 60,800,000.00 | 5,066,666.67 | 55,733,333.33 | 53,423,300.85 |
| தேர்வு | 10,000,000.00 | 833,333.33 | 9,166,666.67 | 4,419,536.25 |
| நிலையானவைப்பு | 11,000,000.00 | 916,666.67 | 10,083,333.33 | 9,218,729.62 |
| **மொத்தம்** | **81,800,000.00** | **6,816,666.67** | **74,983,333.33** | **67,061,566.72** |
| | | | | |
| *செலவீனம்* | | | | |
| தன்னாள் ஊதியம் | 18,758,525.00 | 1,563,210.42 | 17,195,314.58 | 17,022,760.00 |
| நிரல் செயல்பாடுகள் | 21,000,000.00 | 1,750,000.00 | 19,250,000.00 | 23,360,405.04 |
| பயணச் செலவுகள் | 750,000.00 | 62,500.00 | 687,500.00 | 486,742.34 |
| விநியோகங்களும் நுகர்வுப் பொருட்களும் | 5,000,000.00 | 416,666.67 | 4,583,333.33 | 3,092,035.11 |
| பராமரிப்பு | 4,800,000.00 | 400,000.00 | 4,400,000.00 | 4,488,190.84 |
| ஒப்பந்த சேவைகள் | 6,800,000.00 | 566,666.67 | 6,233,333.33 | 6,782,522.69 |
| ஏனைய செயற்பாட்டு செலவுகள் | 2,959,000.00 | 246,583.33 | 2,712,416.67 | 2,330,530.50 |
| | **60,067,525.00** | **5,005,627.08** | **55,061,897.92** | **57,563,186.52** |
| **மிகை/ (குறை)** | **21,732,475.00** | **1,811,039.58** | **19,921,435.42** | **9,498,380.20** |

## 2.9 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

### 2.9.1. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, வேலைத் தளங்களில் தொழில் விபத்துக்களைத் தணிப்பதற்காக, தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்களைப் பயிற்றுவிப்பதற்கான டிப்புளோமா கற்கைநெறிகள், சான்றிதழ் கற்கைநெறிகள் மற்றும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புடைய பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதுடன், வேலைத் தளங்களில்பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்திற்கான சூழல் அளவீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் இடரை இனங்காண்பதற்கான மதிப்பீட்டாய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. நிறுவகத்தால் 2024 செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறு.

- **விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

**அட்டவணை 2.35 -** 2024.01.01 முதல் 2024.12.31 வரை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் நடத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

| தொடர் இல. | **01.01.2024 - 31.12.2024** காலப்பகுதியில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | காலப்பகுதி |
|---|---|---|
| 01 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் உயர் தேசிய டிப்புளோமா (ஆங்கிலம்) | தொகுதி 01<br>2023 ஆம் ஆரம்பிக்கப்பட்ட இந்த உயர் தேசிய டிப்புளோமா 2024 ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்பட்டது. |
| 02 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமா (ஆங்கிலம்) | தொகுதி 26<br>2023 ஒக்டோபர் 08 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2024 ஒக்டோபர் 28 ஆம் திகதி நிறைவுசெய்யப்பட்டது.<br><br>தொகுதி 27<br>2024 மே 04 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, 2025 மே மாதத்தில் நிறைவுசெய்வதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது. |
| | | தொகுதி 28<br>2024 செப்ரெம்பர் 01 ஆம் திகதி ஆரம்பிக் கப்பட்டு, 2025 ஓகஸ்ட் 31 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு அட்டவணையிடப் பட்டுள்ளது. |
| 03 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமா (சிங்களம்) | தொகுதி 04<br>2024 யூன் 02 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, 2025 யூன் மாதத்தில் நிறைவு செய்வதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது. |
| 04 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் சான்றிதழ் கற்கைநெறி | தொகுதி 52<br>2024 சனவரி 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு,<br>2024 யூன் 30 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டது |
| | | தொகுதி 53<br>2024 பெப்ரவரி 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு. 2024 ஏப்பிரல் 22 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டது ,<br><br>தொகுதி 54<br>2024 யூன் 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு. 2024 செப்ரெம்பர் 30 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டது |
| | | தொகுதி 55<br>2024 யூலை 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு. 2024 ஒக்டோபர் 26 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டது |
| 05 | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் அடிப்படை கற்கைநெறி | தொகுதி 10<br>2024 ஓகஸ்ட் 02 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு. 2024 நவம்பர் 08 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டது |
| 06 | நிறைவேற்றுத் தர அலுவலர்களுக்கான சூழல் முகாமைத்துவ கற்கைநெறி | தொகுதி 04<br>2024 யூலை 03 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு. 2024 ஓகஸ்ட் 31ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| | | |
| 07 | 'சுராடோ கம்பஸ் பிரைவேட் நிறுவகத்துடன் இணைந்துள்ள தாதியர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு சான்றிதழ் கற்கைநெறி (பராமரிப்பாளர் நிகழ்ச்சித்திட்டம்) | <u>தொகுதி 12</u><br>2024 சனவரி 18,19,29 மற்றும் 03 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது<br><br><u>தொகுதி 13</u><br>2024 மார்ச் 05,10,12, ஆம் திகதிகளில' நடத்தப்பட்டது<br><br><u>தொகுதி 14</u><br>2024 மே 02,03 மற்றும் யூன் 02 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது<br><br><u>தொகுதி 15</u><br>2024 யூலை 27, 28 மற்றும் ஓகஸ்ட் 04 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது<br><br><u>தொகுதி 16</u><br>2024 செப்ரெம்பர் 06. 07 மற்றும் 29 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது<br><br><u>தொகுதி 17</u><br>2024 ஒக்டோபர் 27 மற்றும் நவம்பர் 02 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது |
| 08 | வைத்தியசாலை தாதியர்களுக்காக மூன்று நாள் தொழில்சார் பாதுகாப்பு சான்றிதழ் கற்கைநெறி | 2024 மார்ச் 12,13,14 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது |
| 09 | தென் கொரியாவில் உள்ள ஷங்ஷன் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு பொறியியலில் பட்டமொன்றைப் பெறுவதற்கு இலங்கை மாணவர்களுக்கு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமா கற்கைநெறியினை நடத்துதல். | <u>தொகுதி 01</u><br>2024 டிசெம்பர் 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது<br><br><u>தொகுதி 02</u><br>2024 டிசெம்பர் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது |

<u>**தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் உயர் தேசிய டிப்புளோமா (ஆங்கில மொழி மூலம்)**</u>

இந்த உயர் தேசிய டிப்புளோமா கற்கைநெறியையானது டிப்புளோமாவை வெற்றிகரமாக நிறைவு செய்த மாணவர்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய அறிவை மேம்படுத்துவதற்கும், உரிய துறையில் நிபுணத்துவ அறிவை வழங்குவதற்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த கற்கைநெறி 2024 மார்ச் மாத்தில் நிறைவடைந்திருந்தது.

<u>**தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமா (ஆங்கில மொழி மூலம்)**</u>

இலங்கையில் பாதுகாப்பான வேலைத்தலங்களை உருவாக்கும் நோக்கத்துடன் தேவையான மனித வளங்களைக் கொண்ட பாதுகாப்பு அலுவலர்களை உருவாக்கும் தேசியப் பொறுப்பிற்கு தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் பொறுப்பேற்றுள்ளது. பாதுகாப்பு அலுவலர்களுக்குத் தேவையான கொட்பாட்டு அறிவு விரிவுரைகள் மூலம் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது என்பதுடன், வேலைத்தலங்களுக்குச் சென்று அவர்களுக்குத் தேவையான நடைமுறை அறிவை வழங்குவதற்கு நிறுவனம் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது. அதேபோன்று, மதிப்பீட்டு அறிக்கைகள், விளக்கக்காட்சிகள் போன்றவற்றின் மூலம் அவர்களின் அறிவு பரிசோதிக்கப்பட்டு,

பரீட்சைகள் மூலம் தகுதியான மாணவர்களுக்கு டிப்புளோமா சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இந்தப் கற்கைநெறியைப் பின்பற்றியதன் பின்னர், இது வெளிநாட்டு வேலைக்கான தகுதியாகும் என்பதுடன், கற்கைநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்த மாணவர்கள் ஏற்கனவே உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தொழில் புரிகின்றார்கள்.

**அட்டவணை 2.36** -தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமா (ஆங்கில மொழி மூலம்)

| தொகுதி | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ. மீ.) | காலம் | கற்கைநெறிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நிதி இலக்கு (ரூ. மீ.) |
|---|---|---|---|
| **தொகுதி 26** | **4.31.00** | **2023 ஒக்டோபர் - 2024 ஒக்டோபர்** | **6.29** |
| **தொகுதி 27** | **7.45** | **2024 மே - 2025 மே** | **2.33** |
| **தொகுதி 28** | **6.29** | **2024 செப்ரெம்பர் - 2025 ஒகஸ்ட்** | **2.33** |

**<u>தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமா</u>** (சிங்கள மொழி மூலம்)

இலங்கையில் பாதுகாப்பான வேலைத்தலங்களை உருவாக்குவதற்குத் தேவையான சுகாதார மற்றும் பாதுகாப்பு அலுவலர்களை உருவாக்கும் தேசியப் பொறுப்பை நிறைவேற்றும் வகையில், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார டிப்புளோமா சிங்கள மொழியில் நடத்தப்படுகின்றது. இந்த கற்கைநெறியின் மூலம், நிறுவகம், விரிவுரைகள் மூலம் சுகாதார மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தேவையான கோட்பாட்டு அறிவை வழங்குகிறது மற்றும் பணியிடங்களுக்குச் சென்று அவர்களுக்குத் தேவையான நடைமுறை அறிவை வழங்குவதற்காக தொடர்ந்து செயல்படுகின்றது. மேலும் மதிப்பீட்டு அறிக்கைகள், விளக்கக்காட்சிகள் போன்றவற்றின் மூலம் அவர்களின் அறிவு பரிசோதிக்கப்பட்டு, பரீட்சைகள் மற்றும் டிப்புளோமா சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. 04 ஆவது தொகுதி 2024 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

**அட்டவணை 2.37**-தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் டிப்புளோமா (சிங்கள மொழிமூலம்)

| தொகுதி | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ. மி.) | காலம் | கற்கைநெறிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நிதி இலக்கு (ரூ. மி.) |
|---|---|---|---|
| தொகுதி 04 | 3.56 | 2024 யூன் – 2025 யூன் | 1.46 |

**<u>தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் சான்றிதழ் கற்கைநெறி</u>**

2024 ஆம் ஆண்டில், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் 52 ஆவது, 53 ஆவது, 54 ஆவது மற்றும் 55 ஆவது தொகுதி சான்றிதழ் கற்கைநெறிகளை வெற்றிகரமாக நிறைவுபடுத்தியிருந்தது. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய அத்தியவசியப் பயிற்சியுடன் பங்கேற்பாளர்களை ஆயத்தப்படுத்துவதன் மூலம் பணியிட விபத்துகளின் அபாயத்தைக் குறைப்பதில் இந்தப் கற்கைநெறிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இந்தத் திட்டம் உள்ளூர் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் தேவைக்கேற்ப அதிக திறன் கொண்ட பாதுகாப்பு அலுவலர்களை உருவாக்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற பல அலுவலர்கள் தற்போது பல்வேறு தொழில்களில் பணிபுரிகின்றனர், அங்கு அவர்களின் நிபுணத்துவம் பாதுகாப்பான பணிச்சூழலை வளர்ப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது. உயர் தரத்தில் தேர்ச்சி பெற்ற மற்றும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தமது அறிவை மேம்படுத்துவதில் தீவிர ஆர்வம் கொண்ட எவரையும் இந்த கற்கைநெறி அனுமதிக்கின்றது.

**அட்டவணை 2.38-** தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் சான்றிதழ் கற்கைநெறி (சிங்கள மொழிமூலம்)

| தொகுதி | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ. மி.) | காலம் | கற்கைநெறிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நிதி இலக்கு (ரூ. மி.) |
|---|---|---|---|
| தொகுதி 52 | 2 | 2024 சனவரி -2024 யூன் | 1.49 |
| தொகுதி 53 | 1.8 | 2024பெப்ரவரி – 2024 ஏப்பிரல் | 1.54 |
| தொகுதி 54 | 1.85 | 2024 யூன் – 2024 செப்ரெம்பர் | 1.39 |
| தொகுதி 55 | 2.06 | 2024 யூலை- 2024 ஒக்டோபர் | 1.44 |

**தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் அடிப்படைக் கற்கைநெறி**

இந்த கற்கைநெறி, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் ஆர்வமுள்ளவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவகம், அதை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு வேலை வாய்ப்புகளையும் வழங்குகின்றது. சா/த மற்றும் உ/த பரீட்சைகளை முடித்த மாணவர்களை வேலைக்கு அமர்த்துவதும், அவர்களை தொழில்சார் பாதுகாப்பு துறைக்கு வழிநடத்துவதும் இதன் நோக்கமாகும்.

**அட்டவணை 2.39-** தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் அடிப்படைக் கற்கைநெறி

| தொகுதி | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ. மி.) | காலம் | கற்கைநெறிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நிதி இலக்கு (ரூ. மி.) |
|---|---|---|---|
| தொகுதி 10 | 0.21 | 2024ஓகஸ்ட்- 2024நவம்பர் | 0.23 |

- **நிறைவேற்றுத்தர அலுவலர்களுக்கான சூழல் முகாமைத்துவ கற்கைநெறி**

இக்கற்கைநெறி, முதன்முதலில் 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன், சேவை முகாமைத்துவத்தை இலக்காகக் கொண்டது. தற்போது 3 ஆவது தொகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.40 -** நிறைவேற்றுத்தர அலுவலர்களுக்கான சூழல் முகாமைத்துவ கற்கைநெறி

| தொகுதி | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ. மி.) | காலம் | கற்கைநெறிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நிதி இலக்கு (ரூ. மி.) |
|---|---|---|---|
| தொகுதி 03 | 0.65 | 18 நிறைவேற்றுத்தர அலுவலர்கள் வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளனர். | 0.83 |

**அட்டவணை 2.41** – விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதில் முன்னேற்றம்

| நிகழ்ச்சித்திட்டம் | மதிப்பிடப் பட்ட தொகை (ரூபா.மில்.) | பௌதீக முன்னேற்றம் | நிதி முன்னேற்றம் (ரூபா.மில்.) |
|---|---|---|---|
| சுராடோ கம்பஸினால் நடத்தப்பட்ட கவனிப்பாளர்கள் கற்கைநெறியில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை விடயத்தை உள்ளடக்குதல் | 2.66 | இந்த கற்கைநெறியை 330 மாணவர்கள் வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளனர். | 2.6 |

| | | | |
|---|---|---|---|
| மருத்துவமனை தாதியர் பதவியினருக்காக தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துதல் | 0.48 | இந்த கற்கைநெறியை 31 தாதியர்கள் வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளனர். | 0.79 |

- **கருத்திட்டங்கள்**

I. பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்களின் மதிப்புமிக்க நுண்ணறிவுகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கொள்கை 2024 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. 2024 பெப்ரவரி 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் ரேணுகா ஹோட்டலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 200 க்கும் மேற்பட்ட தொழில் வல்லுநர்கள் கலந்து கொண்டிருந்தனர்

II. சர்வதேச தொழில் தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டமான, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கொள்கை அபிவிருத்தி தொடர்பான தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார கொள்கை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம், காலி, ஹட்டன் மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் 2024 ஒக்டோபர் மாதத்தில் நடைபெற்றது. இவை மாவட்ட தோட்ட அத்தியேட்சகர் அலுவலகங்களில் நடைபெற்றது. உரிய மாவட்டங்களின் தோட்ட கண்காணிப்பாளர்களின் பங்களிப்புடன், இதில் 150 க்கும் அதிகமான தோட்ட கண்காணிப்பாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.




**படம் 2.3 -** தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கொள்கையை விருத்தி செய்வதற்காக நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்




**படம் 2.4-** தேசிய தொழில்சார் பாதுகாப்புக் கொள்கையை இறுதியாக அறிவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் 2024 யூன் 7 மற்றும் யூலை 31 ஆம் திகதிகளில் நடைபெற்றது

**படம் 2.5-** உயரத்தில் பணிபுரிதல் (TOT) பற்றி உயர் வேலையாளர்களுக்கு அறிவூட்டி மற்றும் பயிற்சிப் பட்டறை, 2024 ஆகஸ்ட் 04, 05 மற்றும் 06 ஆம் திகதிகளில் எரிக்சன் நிறுவனத்துடன் ஒத்துழைப்பில் நடைபெற்றது. இத்துறையில் ஈடுபட்டுள்ள 50க்கும் மேற்பட்ட அலுவலர்கள் இதில் கலந்து கொண்டனர்.

**விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

I. 2023 ஆம் ஆண்டில், நிறுவகம், இலங்கை மாணவர்கள் அந்தப் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு பொறியியல் பட்டப்படிப்பைப் படிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைத் தயாரிக்கும் தேசியப் பணிக்காக, தென் கொரியாவில் உள்ள ஷன்ஷின் (Changshin) பல்கலைக்கழகத்துடன் உடன்படிக்கையை மேற்கொள்ள முடிந்தது. 2024 ஆம் ஆண்டு ஆரம்ப கட்டமாக, 25 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, நிறுவகத்தின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தேசிய டிப்புளோமாவைப் பின்பற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டு, அவர்களை பட்டப் படிப்புக்கு வழிநடத்தும் திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது.

II. தகுதிகளை பூர்த்தி செய்து விசா பெற்ற ஏழு (07) மாணவர்களுக்கு ஆரம்ப வாய்ப்பு வழங்கப்பட்டது. இதனூடாக இலங்கை மாணவர்கள் E-7 பிரிவின் கீழ் தொழில்சார் திறன்களைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளதுடன், 50% தள்ளுபடியுடன் தமது பட்டப் படிப்பை முடிப்பதற்கும் இணங்கியுள்ளனர். தென் கொரியாவில் 10 வருட அனுமதியுடன் கொரிய வேலை வாய்ப்புகளை இலங்கை மாணவர்கள் அனுபவிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

III. 2024 ஆம் ஆண்டில், கொரியாவில் உள்ள சாங்ஷின் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு பொறியியல் பட்டப்படிப்பைத் தொடர்வதற்கு, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் கற்கைநெறியை முடித்து உ/த தகுதிகளைப் பூர்த்திசெய்த இருபத்தைந்து (25) மாணவர்களுக்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

IV. பணியிடத்தில் விபத்துகளைத் தடுக்கவும், பணியாளர்களுக்கு பாதுகாப்பான பணியிடத்தை உருவாக்கவும், 2025 ஆம் ஆண்டு முழுவதும் சான்றளிக்கப்பட்ட சுற்றுச்சூழல் அளவீட்டு கணக்கெடுப்பு மற்றும் இடர் மதிப்பீட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படும்மேலும் ., பெறப்பட்ட கோரிக்கைகளுக்கேற்ப எதிர்காலத்தில் பயிற்சிகளை நடத்துவதற்கும் நிறுவனம் திட்டமிட்டுள்ளதுஇதற்கான சான்றிதழ் தொழிற்சாலைகளி .லிருந்து வழங்கப்படும்இது . தொழிற்சாலைகள் சர்வதேச சந்தையில் அங்கீகாரம் பெறுவதற்கு உதவும்இதனால் ., சர்வதேச அங்கீகாரம் மூலம், வெளிநாட்டு கொள்வனவாளர்களிடமிருந்து கேள்விக் கோரிக்கைகளைப் பெறுவதற்கான வாய்ப்பும் அதிகரிக்கின்றது

**நிகழ்ச்சித்திட்டங்கள்**

**<u>தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு 2024</u>**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு-2024, 2024 நவம்பர் 28 ஆம் திகதி தேசிய தொழில்சார் பாதுகாப்பு வாரக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக நடைபெற்றிருந்தது. இந்நிகழ்வு 2024 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் திகதி வியாழக்கிழமை சங்ரில்லா ஹோட்டலில் தொழில் அமைச்சர் கௌரவ. அனில் ஜயந்த பெர்னாண்டோ மற்றும் தொழில் பிரதி அமைச்சர் கௌரவ. மஹிந்த ஜெயசிங்க. ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றிருந்தது. மாநாட்டின் கருப்பொருள் "காலநிலை மாற்றம்" என்பதுடன், நிகழ்வின் போது ஏராளமான உள்நாட்டு மற்றும் சர்வதேச பேச்சாளர்கள் விரிவுரைகளை வழங்கியிருந்தனர்.

இந்த மாநாட்டில் தொழில்தருநர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 500 க்கும் அதிகமான வர்த்தகர்கள், முகாமையாளர்கள் மற்றும் தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்கள் கலந்து கொண்டிருந்ததுடன், பாதுகாப்பான, ஆரோக்கியமான தொழிலணியொன்றை உருவாக்குவதற் கான தொழில்சார் பாதுகாப்பு எண்ணக்கருவினை அடிப்படையாகக் கொண்டிருந்தது.






படம் 2.6- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு

**தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் டிப்புளோமா மற்றும் சான்றிதழ் வழங்கும் வைபவம் 2024**

தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்களுக்கான டிப்புளோமா மற்றும் சான்றுதழ் வழங்கும் வைபவம் 2024 நவம்பர் 28 ஆம் திகதி ஷங்ரில்லா ஹோட்டலில் பி.ப.6.00 மணிக்கு இடம்பெற்றிருந்தத






படம் 2.7- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் டிப்புளோமா மற்றும் சான்றிதழ் வழங்கும் வைபவம்

## 2.9.2 2024.01.01. முதல் 2024.12.31 வரை நிதிக் கூற்றுக்களின்படி நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்ட தொழிற்பாட்டு வருமான மூலங்கள் மூலம் அடையப்பெற்ற நிதி முன்னேற்றம்.

**அட்டவணை 2.42** –2024.12.31 இல் மூடப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி தொழிற்பாட்டு வருமான மூலங்கள் மூலம் அடையப்பெற்ற நிதி முன்னேற்றம்

| பணிஇலக்கு | வருமானம் |
|---|---|
| மருத்துவ பரிசோதனை | 1,861,715.00 |
| சுற்றுச்சூழல் அளவீட்டு ஆய்வு | 18,729,602.00 |
| சான்றிதழ் கற்கைநெறிகள் மற்றும் டிப்புளோமா கற்கைநெறிகள் | 34,537,050.00 |
| ஏனைய உடன்படிக்கைகள் ஊடாக சேவைகளை வழங்குதல் | 11,612,500.00 |
| ஏனைய வருவாய் நலன்கள் | 31,387,225.00 |
| மொத்தம் | **98,837,356.00** |

## 2.10 வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்

### 2.10.1 தொழில்சார் விபத்துக்களுக்கான நட்டஈடுகளை வழங்குதல்

**வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்,** தொழில் புரியும் போது காயம் அடைந்த வேலையாளர்கள், வேலையின் தன்மையால் ஏற்படும் நோய்களால் பாதிக்கப்படுபவர்கள் மற்றும் வலைத்தலங்களில் விபத்துகளால் இறக்கும் வேலையாளர்களை சார்ந்திருப்பவர்களுக்கு நட்டஈடு வழங்குகின்றது. பதிவாகியுள்ள விபத்துகளின் எண்ணிக்கை மற்றும் நட்டஈட்டுத் தொகை பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

- 2024 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட, நட்டஈடாக 2 மில்லியனும், அதற்கு மேலும், பணம் செலுத்திய நிறுவனங்களின் எண்ணிக்கை

| **நிறுவனத்தின் எண்ணிக்கை** | **தொகை (ரூ.மில்)** |
|---|---|
| 14 | 85,790,185.00 |

- 2024 இல் ஆரம்பிக்கப்பட்டு அதே ஆண்டில் முடிக்கப்பட்ட மரணத்தை ஏற்படுத்திய மற்றும் உயிரிழப்பு அல்லாத வழக்குகளின் எண்ணிக்கை

  - நீதிமன்றத்தில் முடிவடைந்த வழக்குகள் - 86

  - நீதிமன்றத்திற்குச் செல்லாமல் அலுவலக அளவில் முடிந்த வழக்குகள்-74

- 2024.01.01 முதல் 2024.12.31 வரை முடிக்கப்பட்ட வழக்குக் கோப்புகளின் நேர பகுப்பாய்வு
  - 2024 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு அதே ஆண்டில் முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை - 160
  - முன்னைய ஆண்டுகளில் வழக்குகளின் எண்ணிக்கை -233

**அட்டவணை 2.43 -** 2024.12.31 இலுள்ளவாறு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை

| | |
|---|---|
| 2024.01.01வரை விசாரணைக்கு எடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 422 |
| 2024.01.01 முதல் 2024.12.31 வரை ஏற்படுத்தப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (மரணம் - 145 மற்றும் மரணம் அல்லாதது - 244) | 389 |
| 2024.12.31 நிலுவையில் உள்ள மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | 811 |
| 2024.01.01 முதல் 2024.12.31 வரை வரை முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 418 |
| 2024.12.31 நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 393 |

## 2.11 சிரம வாசனா நிதியம்

## 2.11.1. வேலையாளரின் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்துதல்

**சிரம வாசனா நிதியமானது**, தொழிலாளர் சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நலன்புரித்திட்டங்களை நடத்துகின்றது. கண் சிகிச்சை, மருத்துவ முகாம்கள், புலமைப்பரிசில்கள் மற்றும் உயிரிழந்த வேலையாளர்களின் பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணங்கள், வாழ்வாதார உதவிக்கான தொழில்நுட்பக் கல்வி மற்றும் ஏனைய நலன்புரிச் செயற்பாடுகள் இந்த நலத்திட்டங்களின் ஒரு பகுதியாக நாடளாவியரீதியில் முன்னெடுக்கப்படுகின்றன.

- <u>விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்</u>

சிரம வாசனா நிதியத்தை நிறுவுவதன் முதன்மை நோக்கம் பணியாளர்களின் நலனை மேம்படுத்துவதாகும். கடந்த சில வருடங்களாகப் பின்னோக்கிப் பார்க்கும் போது, இலங்கையில் தொழில்துறை விபத்துக்களில் பெரும்பாலானவை பணியாளர்களின் கவனக்குறைவு மற்றும் பாதுகாப்பு உபகரணங்களைப் பயன்படுத்தத் தவறியதன் காரணமாக நிகழ்ந்துள்ளன என்பது தெளிவாகின்றது. ஆண்மைய ஆண்டுகளில் விபத்துக்கள் மற்றும் ஆபத்தான நிலைமைகள் கண்டறியப்பட்டு, பயிற்சிப் பட்டறைகள் மற்றும் பாதுகாப்பான வேலை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த விடயத்தை அறிந்த பொறியாளர்களால் நடத்தப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, தொழில் சட்டங்கள், பணியாளர்கள் மற்றும் நிறுவன உரிமையாளர்களுக்கு ஏற்படும் சிக்கலான சூழ்நிலைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் துறையில் அனுபவம் வாய்ந்த வளவாளர்கள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மிகவும் வெற்றிகரமானவை, ஏனெனில் பணியாளர்கள் மற்றும் தொழில்தருநர்கள் சமூகம், தொழில் சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் தொழில்துறை விபத்துகளைத் குறைப்பதற்கு உதவியிருந்தன.

2024 ஆம் ஆண்டில், நாடு முழுவதையும் உள்ளடக்கி 25 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்ததுடன், இதன் மூலம் சுமார் 1,000 பணியாளர்கள் நேரடியாக பயனடைந்திருந்தனர்.

- <u>**கல்விசார் உதவித் திட்டங்கள்**</u>

நாட்டில் நடைமுறையிலுள்ள பொருளாதார நிலைமையை எதிர்கொண்டு உழைக்கும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கத்துடன், இந்த நிகழ்ச்சித்திட்டம் இலங்கையின் அனைத்து மாவட்டங்களின் அனைத்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கி தேர்ந்தெடுக்கப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி உதவியை வழங்குகின்றது.
28,983 பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள், கருவிகள் வழங்கப்பட்டிருந்தன.





படம் **2.8 -** சிரம வாசனா நிதியத்தால் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

- <u>அபாயகரமான-விபத்து புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள்</u>

இந்த நிகழ்ச்சித்திட்டங்கள், இலங்கையில் தொழிற்சாலைகளில் விபத்துக்களால் இறந்த அல்லது முற்றாக அங்கவீனமுற்ற வேலையாளர்களின் பிள்ளைகளுக்காக நடைமுறைப்படுத்தப்படு கின்றன

தொழிற்சாலை, தளம் அல்லது பணியிடத்தில் ஏற்படும் தொழில் விபத்துகள் பற்றி தொழிற்சாலை பரிசோதனை பொறியாளர்கள் மற்றும் வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் மூலம் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் பயனாளிகள் இனங்காணப்படுகின்றனர். இறந்த அல்லது முற்றிலுமாக அங்கவீனமுற்ற வேலையாளர்களின் பிள்ளைகள் (பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை, அதாவது 3-25 வயதுக்கு இடைப்பட்டவர்கள்) இதற்குத் தகுதியுடையவர்கள் என்பதுடன், இந்த பிள்ளைகளுக்கு சேமிப்பு வைப்புத் தொகையாக 50,000 ரூபாவும் மற்றும் கல்வி உபகரணங்களும் வழங்கப்படுகின்றது.

இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக, 2024 ஆம் ஆண்டில் 18 புலமைப்பரிசில் பெற்றவர்களுக்கு நன்மைகள் வழங்கப்பட்டுள்ளன.

<u>சட்ட உதவித் திட்டங்கள்</u>

இ;திட்டங்கள், தனியார் துறை பணியாளர்கள் நியாயமற்ற முறையில் விலக்குகின்ற சந்தர்ப்பங்களில், நிறுவனங்கள் முன்னறிவித்தலின்றி மூடப்படுகின்றபோது மற்றும் வேலையாளர் நட்ஈட்டு ஆணையாளர் முன்னிலையில் முறைப்பாடு அளிக்கப்பட்டபோது பணியாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக செயல்படுத்தப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக, 2024 ஆம் ஆண்டில் செயல் திட்டத்தின்படி ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்தி 06 பேருக்கு அனுகூலங்கள் வழங்கப்பட்டுள்ளன,

- <u>மருத்துவ முகாம்களை நடத்துதல்</u>

தொழில்சார் நோய்களால் பாதிக்கப்பட்ட பணியாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது சிரம வாசனா நிதியத்தின் பிறிதொரு முக்கிய நோக்கமாகும். இக்குழுக்கள், தொழில்சார் நோய்களை ஏற்படுத்தக் கூடிய அபாயகரமான சுற்றுச்சூழல் நிலைமைகளின் கீழ் பணிபுரியும் பணியாளர் களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அத்தகைய குழுக்களை இலக்குவைத்து மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன.

இது, பணியாளர்களின் சுகாதார நிலையை மதிப்பிடுவதற்கும், தொழில்சார் நோய்களால் உண்மையாக பாதிக்கப்பட்டவர்களை இனங்காண்பதற்கும், எதிர்காலத்தில் இத்தகைய நிலைமைகளை உருவாக்கும் அபாயத்திலுள்ள நபர்களைப் பாதுகாப்பதற்கும் உதவுகின்றது.


**அட்டவணை 2.44-**2024 காலப்பகுதியில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் நிதி முன்னேற்றம்

| நிகழ்ச்சித்திட்டத்தின் வகை | ஒதுக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | செலவழித்த தொகை | விகிதம் |
|---|---|---|---|
| விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 1.44 | 0.32 | 22% |
| கல்வி உதவித் திட்டங்கள் | விசேட கருத்திட்டங்கள் -100 | 66 | 66% |
| | பொதுவானவை - 12.5 | 6.7 | 54% |
| மரண-விபத்து புலமைப்பரசில் நிகழ்ச்சித்திட்டங்கள் | 5.6 | 1.13 | 20% |
| சட்ட உதவித் திட்டங்கள் | 1 | 0.14 | 14% |
| மருத்துவ முகாம்கள் நடத்துதல் | 0.42 | 0.24 | 58% |

**அட்டவணை** 2.45-2024 காலப்பகுதியில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்

| **நிகழ்ச்சித்திட்டம்** | **நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணிக்கை** | **பயனாளிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 19 | 550 |
| கல்வி உதவித் திட்டங்கள் | விசேட கருத்திட்டங்கள் - 24 | 28983 |
| | பொதுவானவை 04 | 309 |
| மரண-விபத்து புலமைப்பரசில் நிகழ்ச்சித்திட்டங்கள் | 1 | 18 |
| சட்ட உதவித் திட்டங்கள் | 1 | 6 |
| மருத்துவ முகாம்கள் நடத்துதல் | 1 | 180 |

**வரைபடம் 2.7**- லொத்தர் வருமானம் - 2020 முதல் 2024 வரை



# 3 அமைச்சின் எதிர்கால திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

நடைமுறையிலுள்ள தேசிய மற்றும் சர்வதேச சமூக-பொருளாதார இயக்கவியலுக்கு ஏற்ப, சீரிய வேலைச் சூழலொன்றிற்குள் தொழில்தருநருநருக்கும் பணியாளருக்குமிடையிலான சிறந்த சூழ்நிலையைப் பேணி வளர்க்கின்ற சட்ட ஏற்பாடுகளை உருவாக்குகின்ற காலத்துடன்கூடிய பொறுப்பை அமைச்சு கொண்டுள்ளது. ஆக்கத்திறனுள்ள தொழிலணியை உருவாக்குவதற்கும், சிறந்த தொழில்தருநருநர் - பணியாளர் உறவினை மேம்படுத்துவதற்கும் தற்போதுள்ள சட்டங்களும், ஒழுங்குவிதிகளும், உருவாகின்ற நாட்டின் சமூக, பொருளாதாரப் பரப்பினையும், தொழில் உலகின் தற்போதைய தேவையையும் பிரதிபலிக்கின்ற அதேவேளை, ஏற்று அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தொழில் சமவாயங்களுடன் இணங்கும் வகையிலும் திருத்தப்படும். இந்த அமைச்சு, உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து, நலன்புரியினை அதிகரிப்பதில் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளது. இதன்படி, இந்த அமைச்சும், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்களும் பின்வரும் முக்கிய விடயங்களினடிப்படையில் தமது எதிர்காலத் திட்டங்களை வகுத்துள்ளன.

- "வழமான நாடு – அழகான வாழ்வு!" என்ற அரசாங்கத்துன் கொள்கைக் கூற்று
- அமைச்சின் தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்.
- 2024/11/25 ஆம் திகதியிட்ட 2412/08 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகள் மற்றும் பணிகள்.
- அமைச்சின் விடயப்பரப்புடன் தொடர்புபட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்.
- தொழில் துறையில் இலங்கை அங்கீகரித்துள்ள, இணங்கியுள்ள சர்வதேச சமவாயங்கள் மற்றும் உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்.

## 3.1. தொழில் அமைச்சு

### 3.1.1. தொழில் துறைக்கு பொருந்தக்கூடிய சட்டக் கட்டுக்கோப்பை பலப்படுத்துதல்

காலங்கடந்த தொழில் சட்டங்களை தற்கால தொழில் உலகத்துடன் கூடியதாகவும், அனைத்து அக்கறைதாரர்களுக்கும் சமமான அனுகூலங்களை உறுதிப்படுத்தி மறுசீரமைப்பதற்கும், சட்டங்களுக்கிடையிலுள்ள சிக்கல்களை அகற்றுவதற்குமான அவசர தேவையொன்றுள்ளது என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

இதன்படி, சட்டங்களுக்கும், கூட்டிணைக்கப்படுகின்ற நெகிழ்வான பணி நிலைமை களுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை நிவர்த்திசெய்து, அமைச்சரவையின் அங்கீகாரத்துடன், வேலைவாய்ப்புச் சட்டமூலம் வரையப்பட்டுள்ளது. இந்த வரைவு, புதிய அரசாங்கத்தின் கொள்கைகளுடன் இணைந்து செல்கின்றதா என்பதை மீளாய்வு செய்வதற்கு குழுவொன்றிடம் கையளிக்கப்பட்டுள்ளது. குறித்த குழுவின் பரிந்துரைகளினடிப்படையில், தேவையான மாற்றங்களுடன் வரைவு திருத்தப்பட்டு, அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரச் சட்டத்தினை, இலங்கையில் தொழில்சார் பாதுகாப்பு ஆசாரமொ ன்றை வளர்க்கும் வகையில் திருத்தியமைப்பதற்கு எதிர்பார்க்கப்படு கின்றது. இதன் இலக்கு, பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் அபாயகரமற்ற தொழில்சார் வேலைச் சுழலான்றை உருவாக்குவதாகும். இந்த முயற்சி, வருமானத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பினை உருவாக்குகின்ற அதேவேளை பாதுகாப்பான, ஆரோக்கியமான தொழிலணி யொன்றை பேணுவதற்குத் தேவையான மனித வளங்களை விருத்தி செய்வதனை நாடுகின்றது.

### 3.1.2. பூகோளமயமாக்கல் மற்றும் திறந்த பொருளாதாரக் கொள்கைகளுக்கிடையில் தொழில்தருநர் - பணியாளரின் உரிமைகளைப் பாதுகாத்தல்

தற்போது, வேலையின்மைக்கான சலுகைகள் மற்றும் மகப்பேற்று சலுகைகள் தொழில் வழங்குநரால் ஏற்கப்படுகின்றன. இந்த நடைமுறையை காப்புறுதி முறைமையை நோக்கி நகர்த்துவது முக்கியமானது என்பதுடன், அக்கறைதாரர்களுடன் கலந்தாலோசித்து தேவையான சட்டக் கட்டுக்கோப்பை உருவாக்குவதில் அமைச்சு

தொடர்ந்து செயல்படும். இதற்கு மேலதிகமாக, தற்போதுள்ள முறைமைகள் பணியாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பயனுறுதிவாய்ந்தவையில்லை என்பதால், தனியார் துறைக்கான ஓய்வூதிய திட்டம் மற்றும் தொழில்சார் விபத்துக்கான காப்புறுதி முறைமை மற்றும் முறைசாரா துறைக்கு சமூகப் பாதுகாப்பை விரிவுபடுத்துவது ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படும். சமூகப் பாதுகாப்பினைச் அதிகரித்தல் பல அரசாங்க நிறுவனங்களில் தங்கியிருக்கின்றது. இந்த முகவர்களுடன், ஒருங்கிணைந்து பணியாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதன் மூலம், இந்த சமூகப் பாதுகாப்பு காப்பீடு செம்மைப்படுத்தப்பட்டு, விரிவாக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பல தசாப்தங்களாக தொழிலணியில் 31% என்ற நிலையிலுள்ள பெண்களின் பங்கேற்பை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனை நிவர்த்திசெய்வதற்கு, முன்மொழியப்பட்டதொழில் சட்டத் திருத்தம், வேலைத்தல பாகுபாடு, வன்முறை மற்றும் பெண்களின் பங்கேற்பை அதிகரிப்பதற்காக நெகிழ்வான பணிச்சூழலை உருவாக்குதல் போன்றவற்றுடன் தொடர்புடைய அத்தியவசிய சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தும். தொழிலணியில் பெண்களின் பங்கேற்பில் எதிர்மறையாக தாக்கம்செலுத்துகின்ற மகப்பேற்று அனுகூலங்களை வழங்குவதற்காக தற்போதைய தொழில்வழங்குநர் அடிப்படையிலான முறைமையினை அங்கீகரித்து, மகப்பேற்று காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தல், தொழிலணியில் பெண்களின் பங்கேற்பினை மேலும் அதிகரிப்பதற்கு ஆதரவளிக்கும்.

### 3.1.3. சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டம்

சர்வதேச தொழில் தாபனத்தின் உதவியுடன், 2025–2030 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான ஐந்தாண்டு தேசிய சீரிய நிகழ்சித்திட்டமொன்றிற்கான ஆயத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டம், தொழிற் சங்கங்கள் மற்றும் தொழில் வழங்குநரின் கலந்தாலோசனையுடன் தொழில் சட்டங்களை சீர்ப்படுத்துவதை நோக்கமாகக் கொள்கின்றது. இதற்கு மேலதிகமாக, மீனவ சமூகத்திற்கான சீரிய வேலை நிலைமைகளை உயர்த்துகின்ற மீன்பிடி பற்றிய சமவாயம் ச188 இனை ஏற்று அங்கீகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அங்கீகாரம் 2025 ஆம் ஆண்டிறுதியளவில் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3.2 தொழில் திணைக்களம்

இலங்கையில் டிஜிட்டல் ஆட்சிக்கான டிஜிட்டல் பொதுக் கட்டமைப்பினை விருத்தி செய்வதற்கான அரசாங்கத்தின் கொள்கைகளுடன் இணைந்து, தொழில் திணைக்களத்தின் டிஜிட்டல்மயமாக்கலின் தேவைகளை அணுகுவதற்கான திட்டங்கள் நடைமுறையிலுள்ளன. நிலையான ஆலோசனை நிறுவனத்திடமிருந்தான தொழில்நுணுக்க ஆதரவுடன், நிலைமாறல் மாற்றங்கள் திணைக்களத்தின் செயன்முறையில், முறைமையில் நடைமுறைப்படுத்தப்பட வுள்ளது. இந்த முயற்சி, எதுவித தடங்கலுமின்றி சேவைநாடுநர்களுக்கு மிகவும் வசதியான, வினைத்திறனுடனான சேவைகளை வழங்குவதனை நோக்கமாகக் கொள்கின்றது.

இலங்கையின் தனியார் மற்றும் பகுதியளவிலான அரச துறைகளிலுள்ள பணியாளர்களின் சமூகப் பாதுகாப்பினை மேலும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இது, தொழில்தருநர்களின் பதிவினை ஊக்குவிப்பதை, தொழில் ஆரம்பித்து 30 நாட்களுக்குள் ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்தவராக பணியாளர்கள் பதிவுசெய்யப்படுவதை உறுதிப்படுத்துவதை உள்ளடக்குகின்றது. 2025 ஆம் ஆண்டில், ஊழியர் சேமலாப நிதிய கோரல் விண்ணப்பப்படிவங்களில் மற்றும் தரவு முறைமையிலுள்ள தரவுப் பதிவுச் செயன்முறையைச் செம்மைப்படுத்துவதற்கு காலத்திற்கேற்ற திருத்தங்களை மேற்கொள்வதற்கான திட்டங்களுள்ளன. இந்த மாற்றங்கள், ஊழியர் சேமலாப நிதியத்தில் அனுகூலக் கொடுப்பனவு முறைமையை சேவைநாடுநர்களுக்கு மிகவும் வசதியானதாகவும், இலகுவானதுமாக ஆக்குவதனை நோக்கமாக கொள்கின்றன. உறுப்பினர்கள் இறுதி அனுகூலங்களைப் பெறுகின்றபோது அவர்களின் ஓய்வூதிய வயதில் வசதியாக வாழ்வதற்கு போதுமானதாகவிருக்கின்ற ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து 30% முன்-அனுகூலங்கள் மற்றும் வீட்டுக் கடன்களைப் பெறுகின்ற உறுப்பினர்கள் ஓய்வூதிய அனுகூலங்களாக அனுபவிக்க வேண்டிய மீதமுள்ள தொகை குறித்து ஆய்வினை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி தொழிற்சாலையிலுள்ள தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களின் விழிப்புணர்வினை அதிகரித்து கைத்தொழில் துறையில் விபத்துக்களையும், தொழில்சார் நோய்களையும் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்யும். தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டில், விபத்துக்கள் அதிகளவாகக் காணப்படுகின்ற முறைசாரா துறையில் தொழில்வழங்குநர்கள் மற்றும் பணியாளர்களை குறிப்பாக இலக்குவைத்து தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதற்கு திட்டமிடப்படுகின்றது.

இலங்கை, ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 8.7 இற்கமைவாக, 2025 ஆம் ஆண்டளவில் அனைத்து வடிவிலான சிறுவர் தொழிலையும் இல்லாதொழிப்பதற்கு தன்னை அர்ப்பணிக்கின்றது. இதனை அடைவதற்கு, தொழிர்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் அரச அலுவரைகளுக்கு மட்டுமல்ல பொது மக்களுக்கும் சிறுவர் தொழிலைத் தடுப்பதன் முக்கியத்துவம் பற்றி அறிவூட்டுவது முக்கியமானதாகும். இந்த இலக்கை அவதற்கு, பொலிஸ் துறையின் சமூக பொலிஸ் குழு பொறிமுறையுடன் ஒருங்கிணைந்து, முறைசாரா துறையில் இருக்கக்கூடிய சிறுவர் தொழிலாளர்களை இனங்காண்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். இதற்குமேலதிகமாக, சிறுவர்களைப் பணிக்கமர்த்துவதில்லையென்ற உறுதிமொழி முறைசாரா துறை தொழில்வழங்குநர்களிடமிருந்து பெறப்படும். சுற்றுலாத் துறை, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் போன்ற அத்தகைய அதியுயர் ஆபத்துள்ள துறைகளில் சிறுவர் தொழில் பற்றி விழிப்புணர்வு உருவாக்கப்படும். 2024 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப ஆய்விலிருந்து மேல் மாகாணத்தில் சிறுவர் செயற்பாடுகள் பற்றிய ஆய்வொன்று 2025 ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ளது.

தொழில் திணைக்களமானது, நாடளாவியரீதியில் தனியார் மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களிலுள்ள தொழில்வழங்குநர்கள் மற்றும் பணியாளர்களிடையே தொழில் அமைதியை உறுதிப்படுத்துகின்ற சுமூகமான வேலைச் சூழலை வளர்ப்பதன் மூலம் நிறுவனம்சார் உற்பத்தித்திறனை அதிகரிப்பதனை நோக்கமாகக் கொள்கின்றது. தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டில் நாடளாவியரீதியில் நிறுவனங்களிலுள்ள தொழில்வழங்குநர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பிராந்திய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்படவுள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில்வழங்குநர்கள் மற்றும் பணியாளர்களுக்கிடையிலான உறவினை மேம்படுத்துவதற்கும், இருதரப்பினர்களிடையேயும் தொழில் சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கும் சமூக கலந்துரையாடலை ஊக்குவிக்கும்.

தொழில் திணைக்களத்திற்கு எழுத்தில் ஏதேனும் வகையான தொழில் முறைப்பாட்டை முன்வைக்க விரும்புகின்ற தனிநபர்கள், இணையவழி முறைப்பாட்டு முகாமைத்துவ முறைமையூடாக செய்வதற்கான வாய்ப்பு தற்போது வழங்கப்படுகின்றது. இந்த முறைமையானது, முறைப்பாடுகளைத் தீர்க்கின்ற செயன்முறையைக் கண்காணிப்பதனை எளிதாக்குகின்றது. 2025 ஆம் ஆண்டில் இந்த முறைமையை மேலும் சீரமைப்பதற்கும், ஒழுங்கமைப்பதற்கும் மேலும் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த முன்முயற்சி, தொழில் சட்டங்களால் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு உத்தேசிக்கின்றது.

## 3.3 மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

இத்திணைக்களத்தினால், நிலையான தொழிலின்மைப் பிர்ச்சினையைத் தீர்த்து,தொழில் சந்தையை இலக்குவைத்து சரியான தொழிலைத் தீர்மானிப்பதற்கு வழிகாட்டலை வழங்கி, மனிதவலு திட்டங்கள், அபிவிருத்தி மற்றுமபேணி வளர்த்தலை தயாரித்தல் அத்துடன் முறைசாரா, வசதிகுறைந்த குழுமங்களை அபிவிருத்திசெய்து தேசிய மனித வளங்கள் மற்றுமவெலைவாய்ப்புக கொள்கயான்றை வகுத்தமைக்கும் குறிக்கொள்களை அடைவதற்கு 2025 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

- மாவட்ட மற்றும் பிராந்திய தொழில் சந்தைகளை ஒழுங்கமைத்தலானது, அத்தியவசியமான தொழில் வழிகாட்டலுடன், திறன் விருத்தி வளங்களுடன் மற்றும் அவர்களின் தொழிலுக்கான தயார்நிலையையும் வாய்ப்பையும் அதிகரிப்பதற்கான ஆதரவு ஆகியவற்றுடன் வேலை தேடுபவர்களை வைத்திருப்பதற்கு எதிர்பார்க்கின்றது.

- பதிவுசெய்யப்பட்ட வேலை தேடுபவர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட முறைசாரா வேலைவாய்ப்பு துறைகளில் ஈடுபட்டுள்ள சுயதொழில் செய்பவர்களுக்கு அவர்களின் சேவை தரங்களை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. இந்த முயற்சிகள், தொழில் கௌரவம் மற்றும் தயாரிப்புகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும் தேவையான அறிவினையும், வழிகாட்டுதலையும் வழங்கும். இதன்படி, நபரை மையமாகக் கொண்ட தொழில் வழிகாட்டுதல், RPL முறைகள் மூலம் NVQ சான்றிதழ்களைப் பெறுவதற்கான பரிந்துரை வழங்கப்படும். இதற்குமேலதிகமாக, வணிகத் துறைகளில் வலையமைப்பிற்குத் தேவையான வழிகாட்டல் வழங்கப்படும். இந்த நிகழ்ச்சித்திட்டங்கள், கிராம மட்டத்தில், சிறிய குழுமங்களை இலக்குவைத்து செயல்படுத்துவதற்குகு எதிர்பார்க்கப்படுகின்றது.

- தொழில்தருநர்களின் மாநாடுகளானவை, திணைக்களத்திற்கும், சேவைகளை வழங்குகின்ற தொழில் வழங்குனர்களுக்குமிடையிலான பலமான நல்லுறவை வளர்ப்பதை பிரதான இலக்காக கொண்டு ஒழுங்கமைக்கப்படுகின்றன. இந்த மாநாடுகள் சேவைப் பரிமாற்றத்தையும், பரஸ்பர அனுகூலங்களை இலகுவாக்குவதை இலக்காக கொள்கின்றன. அதன் மூலம் வேலை வாய்ப்பு சேவைகளை பெற்றுக்கொள்வதிலும் வழங்குவதிலும் பரஸ்பர நன்மைகளை உறுதிப்படுத்தும் முதன்மையான குறிக்கோளுடன் செயல்படுத்தப்படுகின்றது. 2025 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள இந்த மாநாடுகள் 9 மாகாணங்களையும் உள்ளடக்கியதாக நடத்தப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

- தொழில் வழிகாட்டல் சேவைகள் பாடசாலையிலிருந்து விலகியவர்கள் NEET பயனாளிகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் இளைஞர்களுக்கு ஆதரவளிப்பதை நோக்காக கொள்கின்றது. இந்த சேவைகள், சுயதொழில் அல்லது

தொழில்முனைவோர் மேம்பாட்டிற்கு பொருத்தமான திறன்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலமும் சுயதொழிலாற்றுவோரின் மற்றும் தொழில்முனைவோரின் மேம்பாட்டின் மீது கவனஞ்செலுத்துகின்றது. வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள், சுயதொழில் அல்லது தொழில்முனைவோரை வளர்ப்பதற்காக செயல்படுத்தப் படுவதுடன், மேலே குறிப்பிட்டப்பட்ட குழுமத்தை வருமானம் ஈட்டும் செயல்முறையை நோக்கி செலுத்தப்படுவார்கள்.

- வேலை தேடுபவர்கள், திணைக்களத்தின் தொழில் சந்தை மற்றும் மாவட்ட செயலக / பிரதேச செயலக மட்டத்தில் பதிவு செய்யப்படுவதுடன், இந்த வேலை தேடுபவர்கள் இணையவழியில் கூகுள் படிவத்தில் பதிவு செய்து, திணைக்களத்தின் தரவுத்தளத்தில் கூகுள் தாளில் சேமிக்கப்படுகின்றார்கள். வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களும், அந்த நிறுவனங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்களும் பதிவு செய்யப்படுகின்றன. பதிவுசெய்யப்பட்ட வேலை தேடுபவர்களிடையே தொழில்சார் பயிற்சிக்குப் பொருத்தமான வயது மற்றும் இயலுமையுள்ளவர்கள் இனங்காணப்பட்டு, உடனடியாக தொழில்வாய்ப்புனை வழங்குவதிலும் பார்க்க தொழில் பயிற்சி நிலையங்களுடன் ஒருங்கிணைக்கப்படுகின்றனர். பயனாளிகளில் ஆகக்குறைந்தது 100 பேர் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த பயிற்சி நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். இதற்கு மேலதிகமாக, அதிக பொருத்தமான பயிற்சியளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில் வழிகாட்டல் சேவைகள் ஊடாக அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

## 3.4 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

இலங்கைதொழிலணியின் தரமான அபிவிருத்தியை நோக்காக கொண்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள், இத்துறையில் தொழில் கற்கைகளை விருத்திசெய்து ஊக்குவித்தல், ஆராய்ச்சியை நடத்துதல், கற்கைநெறிகளை வழங்குதல் மீது கவனஞ்செலுத்தும். அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சியளிப்பு நிறுவனங்களின் ஒத்துழைப்பு நாடப்படவுள்ளது. தற்போது,தொழில் கற்கைளில் சான்றிதழ் மற்றும் டிப்புளோமா கற்கைநெறிகளை மாத்திரமே வழங்கப்படுகின்றது. டிப்புளோமா கற்கைநெறியினை பட்டப்படிப்பிற்கு தரமுயர்த்துவதற்கான ஆரம்ப கலந்துரையாடல்கள் அரச மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களுடன் திட்டமிடப்படுகின்றன.

எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள கற்கைநெறிகள்

- வெளிநாட்டு வேலைவாய்ப்பு சேவைகளை வழங்குகின்ற முகவர் நிறுவனங்களின் தரநியமங்களை அதிகரிப்பதற்காக பொது முகாமைத்துவம் மற்றும் தொழில் புலம்பெயர்வில் டிப்புளோமா கற்கைநெறி.

- தேயிலை பெருந்தோட்ட தொழிலாளர்கள் மற்றும் மூதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைகளிலுள்ள தொழிலணியை வலுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சி கற்கைநெறிகள்.

சுய நிதியிடல் மூலம் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தினை மேலும் உறுதியாக்குவதற்காக புதிய விரிவுரை மண்டப வசதிகளை தாபிப்பதற்கான திட்டங்களுள்ளன. புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி, பயிற்சியாளர்களுக்கு வசதியை உறுதிப்படுத்தி பொது மக்களுக்கு கற்கைநெறிகளை அதிகளவில் பெற்றுக்கொள்வதனை நோக்கமாகக் கொள்கின்றது. இந்த முயற்சிகள், பிரதான மாவட்டங்களில் நடத்தப்படவுள்ளது. இதற்கு மேலதிகமாக, இலக்கு வைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இனங்காணப்படவுள்ளதுடன், அரச மற்றும் தனியார் துறைகள் இரண்டுக்கும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்திற்கான ஆய்வுகூடத்தை தாபிப்பதற்காக தொழிற் செயலகத்தில் இடம் ஒதுக்கப்படவுள்ளது. தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டில் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் தற்போது தொழிற் செயலக் கட்டடத்தில் அமைந்துள்ளதுடன், "மெஹெவர பியெச" கட்டடத்திற்கு மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 3.5 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

2025 ஆம் ஆண்டளவில் குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளில் வேலைக்களங்களில் விபத்துக்களையும், நோய்களையும் குறைப்பதற்காக சுய கற்றல் தளமொன்று விருத்திசெய்து அறிமுகப்படுத்தப்படும். இந்த முறைமை, வேலைக்களங்களில் ஏற்படக்கூடிய தொழில்சார் விபத்துக்களிலிருந்தும்,நோய்களிலிருந்தும் பணியாளர்களை பாதுகாப்பதற்கான புத்தாக்க தொழில்நுட்பத்தை ஏற்படுத்துகின்றது.

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தொழில்சார் விபத்துக்கள், நோய்கள் பற்றிய தரவினைப் பெறுவதற்கும் முறையான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

2024 ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரண தரத்தில் சித்திபெற்று, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார கற்கைநெறியினை பூர்திசெய்துள்ள இருபத்தைந்து மாணவர்களுக்கு 2025 ஆம் ஆண்டில் கொரியாவிலுள்ள ஷங்ஷிங் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு பொறியியல் பட்டமொன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. தேசிய தொழில்சார் பாதுகாப்பு வாரத்தைக் ஊக்குவிக்கும் வகையிலும், அதன் நோக்கங்கள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையிலும் நவம்பர் இரண்டாவது வாரத்தில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு வாரம் மற்றும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு 2025 இனை நடத்துவதற்குத் அட்டவணையிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, தமது பணியாளர்களின் தொழில்சார் பாதுகாப்பினை உயர்த்துவதற்காக தம்மை அர்ப்பணித்துள்ள நிறுவனங்களை இனங்காண்பதனை நோக்காக கொண்டு, தேசிய தொழில்சார் பாதுகாப்பு விருதுகள் விழா 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாத நடுப்பகுதியில் நடத்துவதற்கு திட்டமிடப்படுகின்றது.

## 3.6 சிரம வாசனா நிதியம்

2025 ஆம் ஆண்டில் குறைந்த வருமானம் பெறுகின்ற பணியாளர்களின் தொழில்சார் பாதுகாப்பஞ, உரிமைகள் மற்றும் தொழில' பாதுகாப்பினைப் பாதுகாப்பதில் விசேட கவனம் செலுத்தப்படும். மேலும், பணியாளர்களின் மற்றும் அவர்களில் தங்கியிருப்பவர்களின் நலன்புரியினை உறுதிப்படுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இதன்படி, உழைக்கும் சமூகத்தைப் பாதுகாப்பதற்கு பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இந்த முயற்சிகள், அபாயகரமான வேலைச் சூழலில் பணிபுரிகின்ற பணியாளர்களுக்கு மருத்துவ உதவியை வழங்குதல், இலங்கையில் தொழிற்சலைகளில் மரணமடைந்த அல்லது முழுமையாக அங்கவீனமடைந்த வேலையாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குதல், தனியார் துறையில் நியாயமற்ற வகையில் அல்லது முன்னறிவித்தலின்றி நிறுவனம் மூடப்படுகையில் நீக்கப்படுகின்ற பணியாளர்களுக்கு சட்ட உதவியை வழங்குதல் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. 2025 ஆம் ஆண்டில் இந்த முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதற்காக 48.52 மில்லியன் ரூபா ஒக்கப்பட்டுள்ளது. ஆதேநேரம்,சிரம வாசனா நிதியத்திற்கும்,தேசிய லொத்தர் சபைக்குமடையில் உடன்படிக்கையொன்றினை எட்டுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.